வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப்பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194A, BANDARANAIKE·MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 ஆவணி திங்கள் 24-ம் நாள் (9—9—1962) ஞாயிற்றுக்கிழமை ரபி. ஆகிர் 9 | இதழ் 15




# பீலிக்ஸ் உதவி பிரதமராகலாம்

## மந்திரிசபை அமைப்பில் நெருக்கடி உருவாகலாம்

## மைத்ரிபால, சி. பி. ஆகியோருக்கு சீட்டுக் கிழியுமா?

திரு. பீலிக்ஸ் பண்டார நாயக்கா மீண்டும் மந்திரி சபையில் இடம் பெறுவாரென்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. மீண்டும் அவர் மந்திரியாகும்போது அதிகமான அதிகாரங்களைப் பெறக் கூடுமென்றும், உதவிப் பிரதமராக நியமிக்கப்படக்கூடுமென்றும் விஷயமறிந்த வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

வரவு செலவுத் திட்டம் முடிவடைந்ததும் மந்திரிசபை மாற்றியமைக்கப்படுமென்று ஊர்ஜிதமாகாத செய்திகள் கூறுகின்றன. அப்பொழுது மந்திரி பதவிகளுக்காகச் சிலர் சிண்டுபிடித்துக்கொள்ளப் போகின்றனர் என்றும் வதந்திகள் அடிபடுகின்றன. அரிசி வெட்டை வாபஸ் வாங்கவும் திரு. பீலிக்ஸை மந்திரி சபையிலிருந்து வெளியேற்றவும் காரணமாயிருந்த திரு. சி. பி. டி. சில்வா, திரு. மைத்திரிபால சேனநாயக்கா ஆகியோருக்கு புதிய மந்திரி சபையில் இடம் கிடைக்காதென்றும் தனக்கு 100க்கு 100 நம்பிக்கையானவர்களைக் கொண்டே பிரதமர் புதிய மந்திரி சபை அமைப்பாரென்றும் சிலர் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாரம் பாராளுமன்றத்தில் இராணுவச் செலவு பற்றிய விவாதத்தின்போது இராணுவம் அமைக்கப்படுவது சம்பந்தமாக எதிர்க்கட்சியினர் கேள்விக்குமேல் கேள்வி கேட்டனர். கர்னல் உடுகமவுக்கு ராணுவத்தில் அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருப்பது சம்பந்தமாகவும், பாதுகாப்புஅமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் கேள்விகள் கேட்கப்பட்டன.

ஆயினும் இராணுவம் மாற்றியமைக்கும் முறை சம்பந்தமாகப் பாராளுமன்ற வட்டாரங்களில் பலவிதமான கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

### அடுத்த சதி எங்கிருந்து?

இவ்வாரம் மீண்டும் சதி பற்றி பேசப்பட்டது.

அரசாங்கத் தரப்பிலிருந்தே அடுத்த சதி ஆரம்பமாகலாமென்றும், நாட்டிலே ஒரு சர்வாதிகாரத்தை ஏற்படுத்த வழி வகுக்கப்படுவதைப்போலத்தெரிகிறதென்றும் பாராளுமன்ற வட்டாரங்களில் ஹேஸ்யங்கள் கூறப்படுகின்றன.

"நான் ஓரடி பின்வாங்குவது ஈரடி முன்னேறவே" என்று திரு. பீலிக்ஸ் கூறியது இது சம்பந்தமாக சுட்டிக்காட்டப்படுகிறது.

பிலிப்—பீலிக்ஸ் கூட்டுமிக அபாயகரமானது என்று அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் கூறுகின்றனர். இக்கூட்டில் திரு. என். கியூ. டயஸும் இப்பொழுது சேர்ந்திருப்பதாக ஒருவதந்தி அடிபடுகிறது.

### மந்திரி சபை மாற்றம்

விரைவில் மந்திரி சபை மாற்றியமைக்கப்படுமென்று தெரிகிறது. இம்முறை திரு. பீலிக்ஸ் அதிக அதிகாரங்களுடன் மந்திரிசபையில் பிரவேசித்து உதவிப் பிரதமராவார் என்று விஷயம் தெரிந்த வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.


மந்திரிசபை மாற்றியமைக்கும்போது ஒரு கெடுபிடிப் போரே நடக்குமென்றும், ஒருவருக்கொருவர் பதவிகளுக்காக சிண்டுபிடித்துக் கொள்வார்களென்றும்சிலர் எதிர்பார்க்கின்றனர்.

இதுசம்பந்தமாக அரசியல் வட்டாரங்களில் கூறப்படுவதாவது:

"திரு பீலிக்ஸ் மீண்டும் நிதிமந்திரியாகலாம். இல்லையேல் திட்ட மந்திரி பதவியொன்று சிருஷ்டிக்கப்பட்டு அந்தப் பதவி அவருக்கு வழங்கப்படலாம். எந்த மந்திரியானாலும் அவர் உதவிப் பிரதமராவது அநேகமாக நிச்சயமென்று கூறலாம். திரு. பீலிக்ஸ் கோஷ்டி மந்திரி சபையில் அதிக ஸ்தானங்களைப் பிடித்துக்கொள்ளவும், திரு. சி. பி. டி. சில்வா கோஷ்டியும் அம்மாதிரியே மந்திரிசபையில் அதிக ஸ்தானங்களைப் பிடித்துக்கொள்ளவும் பெரு முயற்சி செய்யலாம்.

அதனால் கெடுபிடிப் போரே ஏற்படலாம். திரு பீலிக்ஸ் தனது ஆதரவாள

(9-ம் பக்கம் பார்க்க)



மன்னார் மாநாட்டிற்குப் புறப்படும் தலைவர்களையும் மற்றையோரையும் "தமிழரசு வாழ்க!" எனக் கோஷமிட்டு கோட்டை புகையிரத நிலையத்தில் வழியனுப்பும்போது எடுக்கப்பட்ட படம். இடமிருந்து வலம்: திரு. இராஜவரோதயம், ஜனாப் மசூர் மௌலானா, திரு. இராசமாணிக்கம், திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், ஜனாப் முகமதலி.

# ஏப்ரல் 17 க்குள் அறப்போர்

## மலையகத்தில் கிளைகள் தோன்றும்

## மன்னார் மாநாடு கண்ட முடிவு

**1963** ஏப்ரல் 17-ந் திகதிக்கு முன்னர் தமிழரசுக் கட்சி தனது நேரடிப் போராட்டத்தை ஆரம்பிக்கும். மலை நாட்டில் அங்கங்கே கட்சிக் கிளைகளைத் தோற்றுவிக்கும். தீண்டாமையை ஒழிக்க கட்சி உடனடி நடவடிக்கைகளை எடுக்கும். வடகிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்களின் மூலதனத்தை முதலீடு செய்வதற்கான வழி வகைகளைச் செய்யும்.

மன்னாரில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி எட்டாவது தேசிய மகாநாட்டின்போது மேற்படி நான்கு தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

### தீர்மானங்கள்

"இலங்கைவாழ்தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைத்தையும் அபகரிப்பதற்காகவே ஆட்சியினர் ஒவ்வொருதுறையிலும் முயன்று வருகின்றனர். இ[illegible] ஒழிப்பு நடவடிக்கைகளை எதிர்க்குமுகமாக கடந்த வருடம் நாம் அறப்போரைத் தொடங்கினோம். ஏகோபித்த போராட்டத்தைக்கண்டு அஞ்சிய ஆட்சியாளர்கள் நம்மீது ராணுவத்தை ஏவினர். அவசர காலச் சட்டத்தை அமுலாக்கி, சத்தியாக்கிரகிகளுக்கு எதிராக பலாத்காரத்தை அவிழ்த்து விட்டனர். இதனால் தமிழ்பேசும்

(8-ம் பக்கம் பார்க்க)

இலங்கையில்

ராணி

(தினத்தந்தி வெளியீடு)

குடும்ப வாரப் பத்திரிகை

* சிறு கதைகள்
* குரங்கு குசலா
* சிரிப்புக் கொத்து (படங்கள்)
* அன்புள்ள அல்லி (கேள்வி பதில்கள்)
* தொடர் கதைகள்
* சிறுவர் உலகம்
* பாட்டி வைத்தியம்
* பெண் உலகம்
* உங்கள் குழந்தை
* சமைத்துப்பார்
* இந்த வாரம் எப்படி (சோதிடம்)
* சினிமா பகுதி (படங்களுடன்)
* சிரிப்புத்தான் வருகுதம்மா

இத்தனை வரிசையில் எத்தனை விஷயதானம் செய்யும் குடும்ப வார பத்திரிகைக்கு சந்தா

ஒரு வருடம் ரூ. 10.40
ஆறு மாதங்கள் ரூ. 5-25
[தபால் செலவு உட்பட]

இலங்கை முழுவதிலும் டிப்பாசிட் பணம் கட்டக் கூடிய சப் ஏஜண்டுகள் தேவை

இலங்கை முழுவதுக்கும் ஏக பிரதம ஏஜண்ட்ஸ்:

வெஸ்டன் ஏஜன்ஸீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் மொழி மூலம் கல்வி

## உள்ளத்தோடு ஒட்டும் என்பது யாவரும் அறிந்த உண்மை

(இந்தியாவில் ஆங்கிலம் அல்லது இந்தியிலேதான் சிறப்பாகக் கல்வி புகட்ட முடியும் என்ற கருத்து ஒரு சிலரிடையே நிலவுகின்றது. இக் கருத்து தவறானது என்று இக் கட்டுரையில் விளக்குகின்றார் டாக்டர் அ. சிதம்பரநாதன். இலங்கையில் இன்றுள்ள மொழி நிலைக்கும், இக் கட்டுரை உகந்ததாகும்.)

டாக்டர் அ. சிதம்பரநாதன்

நம் நாட்டு மக்களிடையே கல்வி நிலை ஆங்கிலேயரது தொடர்பினால் வளர்ச்சியுற்றதென்றாலும், படித்தவர்களெல்லாம் படியாதவர்களுக்குத் தாம் கற்றதை அறிவித்து, அவர்களையும் உயர்த்துவார்கள் என்பது, எதிர்பார்த்தபடி நிகழவில்லை. இதற்குச் சிறந்த காரணம் படித்தவர்கள் தாம் கற்றதை ஆங்கில மொழி வாயிலாகக் கற்றிருப்பது. தாம் கற்றதைப் பாமர மக்கள் விளங்கிக் கொள்ளக் கூடிய அவர்கள் மொழியில் சொல்ல மாட்டாமையால், எதிர்பார்த்த பயன் விளையவில்லை. படித்தவர்கள் என்றும், படியாதவர்கள் என்றும் இரண்டு வேறு சாதி போலப் பிரிவு ஏற்பட்டிருப்பது வருந்தத்தக்கது. இந்நிலையை மாற்றத் தாய் மொழி வாயிலாகப் பாடங்களைக் கற்பிக்க வேண்டுவது அவசியம் என்பதை மறுக்க முடியாது. தாய் மொழி வாயிலாகக் கற்பித்தால் பாடங்கள் நேரே உள்ளத்தோடு ஒட்டுகின்றன என்பது யாவர்க்கும் ஒப்ப முடிந்த உண்மை. வேறொரு மொழி வாயிலாகக் கற்றுக் கொள்வதில் உள்ள கடுமை, கால நீட்டம் ஆகியவை தாய் மொழி வழியாகக் கற்றுக்கொள்வதில் இல்லை. தாய் மொழி வாயிலாக வினாக்களுக்கு விடை அளிப்பதும் எளிது.

ஆனால், ஆங்கிலம் வழியாகவே உயர்தரக் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பதற்குச் சிலர் காரணம் காட்டுவார்கள். அவற்றை ஆராய்வோம். விஞ்ஞானம் முதலிய கலைகள் அடையும் வளர்ச்சியைக் குறித்தும் மாறுதல்களைக் குறித்தும் ஆங்கிலத்திற் புத்தகங்கள் அடிக்கடி வெளிவருகின்றன. ஆதலால் ஆங்கில மொழியே இருந்தால் நல்லது என்பர் சிலர். ஆயினும், இவ்வளர்ச்சியைப் பற்றியும் மாறுதல்களைப் பற்றியும் ஆசிரியர்கள் தாய்மொழி வாயிலாகக் கற்பிக்குங்கால் சொல்ல வேண்டும். அன்றியும், கல்லூரிப் பத்திரிகை, வெளியீடுகள் மூலம் அம்மாறுதல்கள் அறிவிக்கப்படல் வேண்டும். மேலும், மாணவர் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகவோ மூன்றாம் மொழியாகவோ கற்றிருப்பர். ஆதலால் ஆங்கிலத்தில் வெளியாகும் புத்தகங்களைப் படித்துத் தாய் மொழி வழியாகப் பெற்ற அறிவினை வளர்த்துக் கொள்ளக் கூடும்; வளர்த்துக் கொள்ள வேண்டும்.

### பொருந்தாக் கருத்து

இந்திய மொழிகள் இன்னும் நன்றாக வளர்ச்சி அடையவில்லை ஆதலால், அவை வாயிலாகக் கற்பித்தல் இயலாது என்பது சிலர் கட்சி. இது பொருந்தாது. இந்திய மொழிகளை நாம் பயன் படுத்தாமலும், படிப்பிப்பதற்கு உரிய கருவியாக மதிக்காமலும் வைத்திருந்தால், அவை எப்படி வளர்ச்சி அடையும்? அவற்றைப் பயன்படுத்திப் பார்த்தால் அன்றோ அவை வேண்டிய அளவு வளரும்?

ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாணவர் சென்று படிக்கத் தடை உண்டாகும் என்று சிலர் வருந்துவர். மாநிலம் விட்டு மாநிலம் செல்வோர் மற்றொரு நிலத்தில் உள்ள மொழியையும் படித்துத் தான் ஆகவேண்டும். படிக்க வேண்டும் என்ற அவா அவர்க்கு எழுதல் இயல்பு. இதற்காக வருந்த வேண்டா.

பல்வேறு மொழிகளிற் புதிதாகப் புத்தகம் எழுதுவதற்குப் பணம் நிரம்பச் செலவாகும் என்பது சிலர் வாதம். இதற்கு அரசாங்கங்கள் அஞ்சக் கூடாது என்பதே அறிஞர் கருத்து.

### சாளரமாக இருந்தால் போதும்

ஆங்கில மொழி வாயிலாகக் கற்றால் உலகத் தொடர்பு இருக்குமென்றும், அதனைத் தாய் மொழியாக உடையோர் இருபது கோடி மக்கள் இருக்கிறார்கள் என்றும், அதனை அரசியல் மொழியாகக் கொண்டோர் தொகை ஐம்பது கோடிக்குக் குறைவன்று என்றும் உலக அறிவினைப் பெறுவதற்கு அதுவே ஏற்ற கருவி என்றும் அறிஞர் சிலர் கருதுவர். ஆங்கில மொழி என்பது நம் வீட்டிற்கு வெளியேயிருந்து காற்றையும் ஒளியையும், நல்கக் கூடிய சாளரம் என்று வைத்துக் கொண்டாலும், நம் வீட்டின் அடிப்படையான கல், சுண்ணாம்பு முதலியவை தமிழாகவே இருத்தல் வேண்டும். நமது நாட்டில் ஆங்கிலம் அறிந்தவர் பத்துப் பேருக்கு ஒருவர். மொத்தத்தில், நூறு பேரில் 15 பேருக்கு எழுதப் படிக்கத் தெரியும் என்றால், அந்தப் பதினைந்து பேரில் இரண்டு பேருக்குத்தான் ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரியும். ஆங்கில அரசாட்சி நூற்றைம்பது ஆண்டுகள் இருந்தும், இங்கே நூற்றுக்கு இரண்டு பேருக்கு மேல் ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரிந்தவர் இல்லை. ஆங்கில மொழியைப் பாமர மக்களும் கற்றுத் தேர்ந்து சிறப்படைவார்கள் என எதிர்பார்ப்பது பொருந்தாது. துணையாக அறியப்பட வேண்டியவற்றை அறியும் பொருட்டுத் தான் ஆங்கிலத்தை அறவே அகற்றாமல் அதனை இரண்டாவது மொழியாக வைக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

ஆங்கிலத்திற் கற்போர் கற்க, தாய் மொழி வாயிலாகக் கற்போர் கற்க என விட்டு விடக் கூடாதா? என்பது சிலர் கேள்வி. இப்படி விட்டு விட்டால், அவசியமில்லாத இரண்டு பிளவுகளை ஏற்படுத்த நாம் உதவி செய்தவர் ஆவோம். அதனால், ஏதாவது ஒன்றினைத் தேர்ந்தெடுக்க வேண்டுவது இன்றியமையாததாகின்றது.

### சமக்கிருதமும் தமிழும்

சமக்கிருதம் இந்திய மொழிகளுக்குத் தாய் என்ற நிலையில் இருப்பதால், அதன் வழியாக இந்தியா முழுவதும் பாடங்களை ஏன் கற்பிக்கக்கூடாது எனச் சிலர் ஆர்வம் காரணமாகக் கேட்கிறார்கள். ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரிந்தவர் நூற்றுக்கு இரண்டு என்றால், சமக்கிருதம் எழுதப் படிக்கத் தெரிந்தவர் தொகை நூற்றுக்கு ஒன்றிலே பாதிகூட இராது. சமக்கிருதம் பேசத் தெரிந்தவர் தொகை பின்னங்களில் தான் இருக்கும். அம்மொழி வாயிலாகக் கற்பிக்கவேண்டுமென்றால், இந்தியாவில் எழுத்தறியாமையை விலை கொடுத்து வாங்குகிறோம் என்பது பொருள். வங்காளம் ஒரியா, மராத்தி, குஜராத்தி, சிந்தி ஆகிய மொழிகள் சமக்கிருத வழியாக வந்தவையாய் இருக்கலாம்; ஆனால், தென்னிந்திய மொழிகளாகிய தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகியவை சமக்கிருதத்தின் வழியாகத் தோன்றிய மொழிகள் அல்ல என்றும், தனிக் குடும்பத் தலை என்றும் பேரறிஞர் கால்டுவேலர் போன்றவர் ஐயமின்றி எழுதிப் போயிருப்பதும், அதனை அறியாது சிலர் மலைவது விந்தையாய் இருக்கிறது. இந்தத் தென்னிந்திய மொழிகள் தனியாக நிற்பவை என்பது டாக்டர் எஸ். கே. சாத்தரிஷி, பண்டித ஜவஹர்லால் நேரு, சர். ஆக்பர் ஹைதாரி, சர். கே. ராமுண்ணி மேனன், ஆகிய பேரறிஞர்க்கும் ஒப்ப முடிந்தது. ஆதலால், சமக்கிருத வழியாகக் கலையறிவினைத் தமிழர்க்குத் தருவோம் என்றல் அடாது.

### இந்தியில் போதித்தல்

இனி, இந்தி வாயிலாகப் போதிக்க வேண்டும் என்பார் கூற்றை ஆராய்வோம். பதினான்கு கோடி மக்கள் இந்தியை அறிவர் ஆதலாலும், தென்னிந்தியாவிலும் எல்லாப் பாடங்களையும் இந்தி வாயிலாகவே கற்பிக்க வேண்டும் என்பர் சிலர். இதுவும் பொருந்தாது. பெரும்பான்மையோர் ஒரு மொழியை அறிவர் என்ற காரணத்தால், அதனை எல்லோர்க்கும் ஒத்த மொழியாக்க வேண்டும் என்று வலியப் புகுத்தல் மக்களாட்சி முறைக்கு ஒவ்வாது. சிறுபான்மையோருடைய மொழி, கலை, பண்பு இவற்றைப் பாதுகாவாதொழிதல் மக்கள் ஆட்சிக்குப் புறம்பானது. இந்திய மக்கள் ஒரு மாநிலம் விட்டு வேறொரு மாநிலம் போவோர், இந்திய மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு வைத்துக் கொள்வோர் ஆகியோர்க்குப் பொது மொழியாக இந்தி இருக்கலாம் ஆனால், அம்மொழி வழியாகவே எல்லாக் கலைகளையும் கற்பிப்போம் என்றால், ஆங்கிலம் வழியாகவே கற்பிக்கலாமே என்பேன். ஆங்கிலத்தில் கற்பிக்கக் கூடாது என்பது ஆங்கிலேயரிடம் உள்ள வெறுப்பால் அன்று. இதைப் பற்றி அடிக்கடி காந்தியடிகளும் பண்டித ஜவஹர்லால் நேருவும், சொல்லி உள்ளார்கள். மனத்தில் அழுத்தந்திருத்தமாகப் பதிவதில்லை என்றும், காலம் அதிகம் பிடிக்கிறது என்றும் அன்றோ ஆங்கிலத்தை விலக்க முயலுகிறோம்? அப்படியிருக்க, இந்தியில் கற்பித்தால் நன்றாய்ப் பதியுமா, காலம் பிடிக்காதா என எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழிலே கற்பித்தால் நேராகப்படுவது போல இந்தியிற் கற்பித்தால் இராது என்பது எளிதிற் புலப்படும். இதற்குப் பல சொற்கள் வேண்டா. இந்திய மக்கள் அனைவரும் ஒரு மொழி வழியாகக் கற்பது நல்லது என்றால் அதைவிட நல்லது உலக மொழியாகிய ஆங்கிலம் வழியே கற்றல். தமிழ் மக்களைப் பொறுத்த அளவில், ஆங்கிலமும் இந்தியும் அவர்களுக்கே ஒரே விதக்கடுமையுடையனவே. இந்தி நம்தேசமொழி என்று அன்பு காரணமாக அதன் வழியே படித்தால் நல்லது என்றால், தமிழ் என் தாய் மொழி என்ற பேரன்பு காரணமாக அதன் வழியே நான் படிப்பேன் எனக்கூறும் தமிழ்மகன் குறை கூறத்தக்கான் அல்லன்.

(6-ம் பக்கம் பார்க்க)


சிறந்தது சிக்கனமானது சிந்தனையூட்டுவது

யானை பீடி

ஸ்பெஷல்




காரம், மணம், குணம் நிறைந்த யானை பீடி ஸ்பெஷல் புகைப்போருக்குபுத்துணர்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுக்க வல்லது. தொழிலாளிகளும், திறமைசாலிகளும் தங்கள் ஊதியத்திற்கேற்ப, சிறந்த புகை பிடிக்க யானை பீடியையேபுகைக்கிறார்கள். பூரண திருப்திக்கு யானை பீடி ஸ்பெஷலே புகையுங்கள்.

CFA. EBC. 2

யானை பீடி கம்பெனி

62, மெசெஞ்சர் வீதி கொழும்பு. தொ. பே. 7651


## மக்கள் குரல்

### மதம் தடையாக இராது

26-8-62 சுதந்திரனில், "செந்தமிழைச் சீரழித்த சாதிக்கொடுமை" என்னும் தலையங்கத்தின் கீழ் 'வளலாயூர் யாழ்வேந்தன்' எழுதிய கட்டுரை போற்றக்கூடியதே. ஆனால், அக்கட்டுரையில் ஒருபகுதியில், "தமிழர் உடலினால் பலராயினும் உள்ளத்தால்ஒருவர் என்ற உணர்வு ஓங்கிஒன்றுபட்டு உரிமைக்குரல் எழுப்ப வேண்டிய இந்த நேரத்திலும் மதத்தாலும், சாதியாலும் பிளவுபட்டு நிற்கிறது தமிழினம்." எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பகுதியின் முக்கியமான ஒரு சொற்பிரயோகம் எனது சிந்தனையைத் தூண்டிற்று. அதென்னவெனில், மதத்தால் தமிழினம் பிளவுபட்டு நிற்கிறது என்பதேயாம். இக்கூற்று ஒரு குறிப்பிட்ட சமயத்தை நோக்காகக் கொண்டு எழுதப்பட்டிருக்குமேயாயின் அதைக்குறித்து நான் வருந்தாதிருக்க முடியாது!

தமிழ் பேசுமினம் பல சாலந்தொட்டே தத்தமக்கெனப் பல மதங்களைக் கடைப்பிடித்து வருகிறது. தமிழ்பேசும் இனத்தவர்கள் மதத்தால் வேறுபட்டிருப்பினும் உரிமைக்குரல் எழுப்பும் விடயத்தில் இதுவரை பிளவுபட்டிருக்கவில்லை! இனி, பிளவுபடப்போவதுமில்லை!! மதவேறுபாடு இனவுணர்வுக்கு ஒருபோதும் தடையாயிராது.

சாதிக் கொடுமையால் இனவொற்றுமை சீரழிக்கப்படுமின்னேரத்தில், இவை போன்ற கட்டுரைகளை சுதந்திரன் வெளியிடுவது சாலச் சிறந்தது. அத்துடன், இவை போன்ற சிறுபிழைகள் ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்வான் எனவும் நம்புகிறேன்.

பா. யேசுதாசராசன்
17, நாவாந்துறை வீதி,
யாழ்ப்பாணம்

### சுடச் சுடச் செய்திகள்

தொடர்ந்து விடாது சுதந்திரன் படித்து வரும் வாசகர்களில் யானும் ஒருவன்.

தாங்கள் 19-8-62-சுதந்திரனில் குறிப்பிட்டு வெளியிட்டிருந்த பீலிக்ஸ், கெனமன், பிலிப் மூவரது முக்கூட்டு உடன்பாட்டின்படி, இங்கு மாத்தளை முற்ற வெளியில் நடைபெற்ற (எம் ஈ பி) மக்கள் ஐக்கிய முன்னணிக் கூட்டத்தில் உரையாற்றிய திரு. பிலிப் குணவர்தன, சிறீ லங்கா சுதந்திரக் கட்சியையும் அதில உறுப்புரிமை வகிக்கும் ஒரு சிலரை—மந்திரிகள் உட்பட எதிர்த்துப்பேசி பாதிட்டின் அரிசி குறைப்பைச் சுட்டிக் காட்டினாலும், அவர் திரு. பீலிக்சை ஆதரித்துப் பேசத் தவறவில்லை. "திரு. பீலிக்ஸ் பண்டாரநாயகா

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எம். சிவஞான சுந்தரம், கல்முனை.

கே: இந்தியப் பிரதமர் நேருவின் இலங்கை விஜயம் இலங்கை இந்தியர்களின் இன்னலைத் தீர்க்குமா?

ப: தீர்க்காது என்பதே என் கருத்து. ஏனெனில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் இலங்கை அரசாங்கத்துக்குச் சிரத்தை கிடையாது.

ஃ

"முருகன்" திருகோணமலை.

கே: திரை உலக மூவேந்தர்களும் ஒரே படத்தில் நடிக்கப் போகிறார்களாமே!

ப: அப்படியா! "முருகன்" செயல்!

ஃ

தமிழமுதன், பலாங்கொடை.

கே: தமிழரசுக்குள் பிளவை ஏற்படுத்தி ஓர் புதிய கட்சியை ஆரம்பிக்க ஒரு தமிழ் வாரப் பத்திரிகை தீவிரமாக முயற்சி செய்து வருவது உங்களுக்குத் தெரியுமா?

ப: பத்திரிகையால் பிளவு ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு தமிழரசுக் கட்சியென்ன ஓட்டைப் படகா?

ஃ

ஆர். எஸ். எஸ். வேலுச்சாமி, அப்புத்தளை.

கே: அரிசிப் பங்கீடு வெட்டை ஆதரிக்கும் தமிழ் தினசரிப் பத்திரிகை யொன்று இலங்கையில் இருக்கிறதே, உமக்குத் தெரியுமா?

ப: தெரியுமே! இலங்கையில் அரிசி பங்கீடு வெட்டை ஆதரித்த ஒரே தினசரி அது தான், எல்லாம் அரசாங்கத்தைக் காக்காய் பிடிக்க...!

ஃ

பி. டி. ராஜா, கொழும்பு-13.

கே: காதலிலே தோல்வியுற்றோர் அநேகர் தற்கொலை செய்து கொள்வதேன்?

ப: இயமனுலகிலாவது காதல் செய்யும் சந்தர்ப்பம் கிடைக்குமா என்பதை ஆராய்ந்து பார்க்க.

ஃ

எ. பத்மநாதன், கொக்குவில் கிழக்கு.

கே: அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கப் பறந்து சென்ற யாழ்ப்பாணம் எம். பி. இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ப: பதவிக்காக ஆளாய்ப் பறந்து கொண்டிருக்கிறார்.

ஃ

பெ. ர. நாதன், அப்புத்தளை.

கே: இலங்கை தமிழரசுக்கட்சியின் அடுத்த மகாநாடு மலை நாட்டில் நடைபெற வேண்டுமென ஆசைப்படுகிறேன். என் எண்ணம் பூர்த்தியாகுமா?

ப: பூர்த்தியாகும்-அஞ்சாதீர்கள்!

ஃ

மு. சுப்பிரமணியம், மாவிட்டபுரம்.

கே: நான் ஒரு மந்திரியாக விரும்புகிறேன். இதற்கொரு வழி கூறுவீர்களா?

ப: காட்டிக் கொடுக்கும் வித்தை உமக்குத் தெரியுமா? அத்தோடு காக்காய் பிடிக்கும் கலையையும் கற்றிருக்கிறீரா?

ஃ

கே. அப்துல் அஸீஸ், பளை.

கே: உலகத்தில் பயங்கரமான ஆயுதம் எது?

ப: கன்னியரின் கண்வீச்சு.

ஃ

க. சண்முகரெட்ணம், ஆரையம்பதி.

கே: மிஸ்டர் குயுக்தி! உங்களை நான் மாமனாராக ஏற்றுக் கொள்ளப் போகிறேன்.

ப: எப்படி? என் மகனுக்கும் உங்கள் தங்கைக்கும் முடிச்சு போடப் போகிறீர்களா? குயுக்தி மாமா என்று அழையுங்கள் — ஆட்சேபமில்லை.

ஏ. எஸ். எம். யாசீன், பொல்கஹவெல.

கே: எங்கள் தலைமை ஆசிரியரின் தலை வழுக்கையாக இருக்கிறது. அதை நீக்குவதற்கு ஒரு மருந்து சொல்லுவீர்களா?

ப: அதைச் செய்தால் உங்கள் மீது கொலைக் குற்றம் சாட்டப்படும்.

ஃ

எம். மரகதம், இறக்குவானை.

கே: தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையே ஏன் ஓயாத போர் நடக்கிறது? இறுதியில் வெற்றி பெறுவது யார்?

ப: ஏனையா, பொய் சொல்லுகிறீர்? தமிழர்கள் நடத்தும் போராட்டம் சிங்களவர்களுடனல்ல-சிங்கள ஆட்சியாளருடன். தொடர்ந்து போராடினால் இறுதி வெற்றி தமிழருக்கே!

ஃ

சூ. மரியதாஸ், உருத்திரபுரம்.

கே: இக் காலத்துப் பெண்கள் இடை தெரிய அணிவதேன்?

அவள் செய்து விடுகிறாள். கணவனின் குறிப்பறிந்து செய்யும் உத்தமி அவள்.

ஃ

இதயசூரியன், இறக்குவான.

கே: சித்தூர் பாராளுமன்றத் தொகுதியில் கடந்த வாரம் நடைபெற்ற உபதேர்தலில் பேராசிரியர் என். ஜி. ரங்கா தி. மு. கழகத்தினால்தான் வெற்றி பெற முடிந்தது என்கிறேன் நான்.

ப: நீர் சொல்லுவது சரியென்கிறேன் நான்.

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

ப: நிம்மதியின்மைக்கும் நிம்மதிக்குமுள்ள வேறுபாடு.

ஃ

அரசு. பதுளை.

கே: யாழ்ப்பாணத்திலிருந்து 1620 பேர் சிங்களப் பரீட்சைக்கு மனுச் செய்திருப்பதாக ஒரு தமிழ் தினசரிப் பத்திரிகை கூறுகிறதே, இச் செய்தி உண்மையா?

ப: அரசாங்கத்துக்குக் காக்காய் பிடிக்கும் பத்திரிகை கூறுவது எப்படி உண்மையாக இருக்க முடியும்?

ஃ

ம. சரவணபவன், லிண்டுலா.

கே: எனது நண்பர் சொல்லுகிறார் இலங்கை சுயதேவையைப் பெருக்குவதில் முன்னேறுவதாக மற்றவர் சொல்லுகிறார் பிரஜா உற்பத்தியில் முன்னேறுவதாக. இன்னொருவர் சொல்லுகிறார் வகுப்புவாதத்தில் முன்னேறுவதாக. நான் சொல்லுகிறேன் வெளிநாட்டு ஆஸ்தியைக் கரைப்பதில் முன்னேறுவதாக. நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

ப: உங்கள் நண்பரைத் தவிர மற்றவர்கள் சொல்லுவதைச் சரியென்று சொல்லுகிறேன்.

ஃ

தமிழன்பன், திருக்கோவில்.

கே: சிங்களம் படிக்கவேண்டாமென்று பிரசாரம் செய்யும் தமிழரசுக் கட்சி, சிங்களம் படித்து பரீட்சைக்கும் சமூகமளித்து தமிழினத்தை காட்டிக் கொடுக்கும் தமிழ் உத்தியோகத்தரகளை என்ன செய்யப் போகிறது?

ப: சிங்கள அரசாங்கமே செய்ய வேண்டியதைச் செய்கிறது. தபால் இலாகா அதிபராக திரு. தயானந்த நியமிக்கப்பட்டது அதற்கு ஒரு சான்று.

திருமுருகன், திருகோணமலை.

கே: சுதந்திரன் ஒரு தின இதழாக மாறி உண்மைச் செய்திகளை உடனுக்குடன் தருமா?

ப: வார இதழாக இருந்து கொண்டே உண்மைச் செய்திகளை முந்தித் தருகிறதே!

ஃ

எஸ். பூரணி, சாவகச்சேரி.

கே: காதலுக்குப் பின் கல்யாணம் நல்லதா? அல்லது கல்யாணத்திற்குப் பின் காதலிப்பது நல்லதா?

ப: இரண்டும் நல்லது.

ஃ

"புலோலியூர்கேக்கே", பருத்தித்துறை.

கே: உங்க மிஸிஸ் உம்மை ஒரு அகப்பைக் காம்பால் அடித்ததாகக் கனாக் கண்டேன். ஏதாவது சண்டையா உமது குடும்பத்தில்?

ப: ஆமாம்......கனவில்.

ஃ

ஜீவா. பரம், கரவெட்டி.

கே: பெண்களுக்குத் தலைமயிர் அழகைக் கொடுப்பது போல ஆண்களுக்கு எது அழகைக் கொடுக்கின்றது?

ப: வழுக்கைத் தலை.

ஃ

சு. மகேஸ்வரலிங்கம், ஏழாலை தெற்கு.

கே: பெண்களுக்கு உயர்தரக் கல்வி அவசியமா?

ப: பிழையின்றியும், கோர்டில் சிக்கிக் கொள்ளாத முறையிலும் வார்த்தைகளைப் பிரயோகித்து காதல் கடிதம் எழுத, பெண்களுக்குப் போதிய கல்வியறிவு வேண்டியதே!

ஃ

இ. தமிழ்ச் செல்வி, நுணுவில்.

கே: உத்தியோக உயர்வுக்காக சிங்களம் படிக்கும் தமிழ் பேசும் மக்களை எதற்கு ஒப்பிடலாம்?

ப: கானல் நீரைக் கண்டோடும் மானுக்கு.

ஃ

எம். பி. மதியழகன், டெல்வின.

கே: இலங்கை இந்தியர் பிரச்னையைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: அது தமிழர்-சிங்களவர் பிரச்னை என்பதுதான்.

# மோகமோ?

(பாண்டியூரன்)

சோற்றி லடித்தவீண் பிண்டமாய்—உடல்
சோம்பித் திரிகிற மானிடா!
ஆற்ற லிருக்குது உன்னிடம்—உயிர்
ஆடி யியங்குதல் காணடா!
நேற்று நடந்ததை யெண்ணியே—மனம்
நொந்து தவிப்பது வீணடா!
போற்று மெதிர் நிலை காணடா—மனப்
பூங்காவிலே விதை யூன்றடா!

கைக ளிரண்டு படைத்தவன்—அதைக்
கட்டிப் பிழைப்போன் பதரடா!
செய்கையி லேசுவை காணடா—பயன்
சேர்த்து உலகினுக் கீயடா!
பொய்யி லுடம்பை வளர்க்கிறாய்—பிறர்
பேச்சில் மயங்கித் தவிக்கிறாய்!
ஐயோ! உனக்கிது சாபமோ—இல்லை
ஆட்சி மயக்கிய மோகமோ?

ப: இதர அங்கங்கள் தெரிய உடை அணிய முடியாததால்......

கே: வீடுவரை உறவு—வீதி வரை மனைவி—காடுவரை பிள்ளை—கடைசி வரை யார்?

ப: பாவ புண்ணியம் என்பர் சிலர்—உள்ளம் என்கிறேன் நான்.

ஃ

ஏ. அப்துல் ஹமீது, மூதூர்.

கே: உம்மிடம் பல கேள்விகள் கேட்டிருந்தேன். அவைகளுக்குப் பதிலளிக்காத காரணமென்ன?

ப: இப்படியும் ஒரு கேள்வியா?

ஃ

மாமயில், பதுளை.

கே: ஒரு போஸ்ட் கார்டில் எத்தனை கேள்விகள் எழுதி அனுப்பலாம்?

ப: கார்டில் இடமிருக்கும் வரை கேள்விகளை அடுக்கலாம். ஆனால் உங்களின் ழ, ள, ல தகராறைப் பார்க்கும்போது ஒரு கேள்வி கூட எழுதி அனுப்ப வேண்டாமென்று சொல்லத்தான் தோன்றுகிறது.

ஃ

காத்தவராயன், மன்னார்.

கே: நான் மது அருந்தி வீடு சென்றால் என்மனைவி கண்ணாடி டம்ளர், பீங்கான் முதலியவற்றை எறிந்து உடைக்கின்றாள். அது ஏன்?

ப: மது அருந்தியபின் நீர் செய்வதை முன் கூட்டியே

எம். பி. சீனிவாசகம், கோலிந்த குருப்.

கே: மாணவர்கள் அரசியலில் தலையிடக் கூடாது என்கிறார் எனது ஆசிரியர். உமது கருத்தென்ன?

ப: ஆசிரியர் அரசியலில் தலையிடக் கூடாது என்கிறது அரசாங்கம்.

ஃ

இ நயருனா, செம்பியன்பற்று.

கே: லஞ்சத்தில் குற்றவாளியாகக் காணப்பட்ட நபரை கனடாவிற்கு ஸ்தானிகராக்கியதன் மர்மம் என்ன?

ப: இந்நாட்டில் இலஞ்சத்துக்குள்ள மதிப்பை வெளிநாடுகட்கு எடுத்துக் காட்ட.

ஃ

எம். எஸ். சிவம், கொட்டகலை.

கே: பண்டிட் விசயலட்சுமிக்கும் ஸ்ரீமதி பண்டாரநாயக்காவுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: இவர் பிரதமர், அவர் பிரதமரின் தங்கை.

ஃ

எஸ். கருணானந்த மூர்த்தி, காங்கேசன்துறை.

கே: குயுக்தியாரே உமது வயது இப்போ என்ன?

ப: எதைக் கேட்டாலும் வயதைப்பற்றி மட்டும் கேட்காதீர்கள்.

ஃ

த. தங்கத்துரை, திருக்கோணமலை.

கே: வாழ்வுக்கும் சாவுக்கும் உள்ள வேறுபாடு என்ன?





ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும் எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல் ஒன்றே தான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி

கொழும்பு-14.

டெலிபோன்: 2739


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வளர்த்த முஸ்லிம் புலவர்கள் (9)

## மருதமுனை சின்ன ஆலிம் அப்பா புலவர்

கீழக்கிலங்கையில் பழமை தொட்டு வாழ்ந்து வரும் முஸ்லிம் குலக்கொடியில் காலங்கள் தோறும் சிறந்த கவி வலவர் பலர் காய்த்துக் குலுங்குவதைக் காணலாம். ஈழத்தில் தமிழ் வளர்த்த முஸ்லிம் பாவல்லார் அணியில் கிழக்கிலங்கை முஸ்லிம் புலவர்களுக்கும் சிறப்பான இடமுண்டு. இப்புலவர் வரிசையில் முதலிடம் பெறுவர் மருதமுனை இப்ருகிம் லெவ்வை ஆலிம் புலவரே. இவர் பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்தார். இவரது தந்தை இப்ருகிம்; தாய் பாத்தும்மா. நாளடைவில் இவர் கல்வி கேள்விகளில் கீர்த்தியும், சிறப்பும் பெற்றவராய் மிளிர்ந்ததால் மக்கள் இவரது இயற் பெயரை விட்டு, சின்ன ஆலிம் அப்பா என்ற சிறப்புப் பெயர் செப்பி அழைத்தனர்.

இவர் இளமையிலேயே இஸ்லாமிய மதக் கல்வி பெறுவதற்காக இந்தியா சென்றுர். ஆங்கு பல்லாண்டு காலந் தங்கி சமயக் கல்வியைத் தெளிவுறக் கற்றதோடு, தமிழ் இலக்கண இலக்கியங்களையும் படித்துத் தெளிந்தார். அத்துடன் கவிதை இயற்றும் வன்மையும் வரப்பெற்றுர். ஆங்கிருந்து மார்க்க ஞானியாக மட்டுமின்றி தமிழறிஞராகவும் தாயகந் திரும்பினுர்.

### மதத் தொண்டு

இந்தியாவிலிருந்து இல்லம் வந்தடைந்த சின்ன ஆலிம் அப்பா புலவர் மட்டக்களப்புப் பகுதி முஸ்லிம்களிடையே மதத் தொண்டு புரிவதிலும், இஸ்லாமீய பிரச்சாரஞ் செய்வதிலும் கவனஞ் செலுத்தினுர். இப்பகுதியிலிருந்த மார்க்க அறிஞர்களுக்கெல்லாம் இவரே தலைவராகத் திகழ்ந்தார். இறைபக்தியில் இதயந் தோய்ந்த சின்ன ஆலிம் அப்பா புலவர் அவனருள் பெற்ற அருட் கவிஞராகத் திகழ்ந்தார்.

புலவரின் காலத்தில் ஒரு முறை மருதமுனைப்பகுதியில் குறித்த காலத்தில் மழை பெய்யத் தவறியது. இதனுல் வேளாண்மை வயல்களெல்லாம் வரட்சியடையத் தொடங்கின. மக்கள் கவலைக் கடலில் மூழ்கினர்; செய்வதறியாது திகைத்தனர். அப்போது சின்ன ஆலிம் அப்பாப் புலவர் ஊர் மக்கள் புடைசூழ வயலுக்குள் சென்றுர். மேற்குத் திரையை நோக்கிய புலவர் மழை வேண்டி இறைவனை இறைஞ்சி தோத்திரப் பாக்களிசைக்கத் தொடங்கினுர். தங்கள் பீடை தீர, புலவரின் பிரார்த்தனை நிறைவேறுமா என்ற ஏக்கம் நிறைந்தவர்களாக ஆண்டு நின்ற மக்களின் விழிகளெல்லாம் புலவரையே மொய்த்து நின்றன. புலவரின் கவிதை மழை பொழிந்து முடிந்தது. மறு கணம் வான்மழை சோவெனப் பொழியத் தொடங்கியது. இவ்வற்புதத்தைக் கண்ட மக்களின் விழிகளெல்லாம் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. மகிழ்ச்சிப் பெருக்கால் அவர்கள் கூத்தாடினுர்கள். புலவரை உளமார, வாயாரப் பாராட்டினுர். புலவர் மாட்டு மக்கள் கொண்டிருந்த மதிப்பும், மரியாதையும் இன்னுமொருபடி ஏறின புலவரின் இப் பாக்கள் "மழைக் காவியம்" என்ற பெயரில் சிறு நூலாக வெளியிடப்பட்டது. தங்கள் வயல் நிலங்களை வரட்சியிலிருந்து காப்பாற்றிய இப் பாடல்களை மக்கள் இல்லங்கள் தோறும் பாடிக் களிப் பேருவகை எய்தினர்.

### 'ஞானரை வென்றுன்'

சின்ன ஆலிம் அப்பா புலவரின் தத்துவ ஞானப் பொலிவையும், மார்க்க அறிவின் நிறைவையும் அவர் இயற்றிய "ஞானரை வென்றுன்" என்ற நூலின் மூலம் அறிய முடிகிறது. புலவரின் காலத்தில், மத அனுஷ்டானங்களைப் பேணி நடக்காது சமயத்தின் பேரால் ஊரை ஏமாற்றி வயிறு வளர்த்த போலி ஞானிகளைத் தாக்கி வெளியிடப்பட்ட நூல் "ஞானரை வென்றுன்". சிலர் சமயத்தைப் பிழைக்கும் வழியாகக் கொண்டு, மதத்திற்கு

**யூ. எல் தாவூத்**

அப்பாற்பட்ட சடங்குகள் மூலம் பாமர மக்களின் பொருட்களால் தங்கள் பணப் பெட்டிகளை நிரப்புவதற்கு மூல காரணம் மதத்தினிடத்தில் அப்பழுக்கற்ற மாசுமறுவற்ற—தூய பக்தியின்மையே என்பதை தெளிந்துணர்ந்த புலவர் இஸ்லாத்தின் முக்கிய கருத்துக்களை முனைப்பாகக் கொண்டு இந்நூலை இயற்றியுள்ளார். புலவரின் இப்

> சின்ன ஆலிம் அப்பாவின் கபுரடியில் 9-9-62 ஞாயிற்றுக்கிழமை விசேட கந்தூரி நடைபெறவுள்ளதாகத் தெரிகிறது.

படைப்பு சமயசம்பந்தமான சில விஞக்களை எழுப்புகிறது. இவ்விஞக்களுக்கு விடை தெரிந்தோர் இஸ்லாமிய நெறியிலிருந்து பிறழமாட்டார்கள் என்பது புலவரின் கருத்து. இந்நூல் மொத்தம் அறுபத்து மூன்று பாக்களைத் தன்னகத்தே அடக்கியுள்ளது. இந்நூலிலுல்ள்ள சில பாக்கள் புலவரின் நூலறிவை விளக்குகின்றன. சான்ருகப் பின்வரும் பாக்களைப் பகரலாம்:

உரிச் சொற் றிவாகர நிகண்டு
முன்னுரை சின்னூல்
நன்னூலும்
பொருட் சொல்லும்
நைடதமும்
போற்றும் பாட்டியல்பு
யாவும்
மருட் சொல்லுந் தொடரு
மீறும்
வாழ்வஞ்சா வெறுத்துங்
கற்ற
குருச் சொல்லை யறியேன்
சின்னேன்
கூறினேன் குவலை மீதே

கனபொரு ளறிந்து கற்ற
கவிவலா ரெதிரே
யென்சொல்
தினகர னெதிரே தீபத்
திரிச்சுட ரொப்ப போன்றும்
இனமொரு நொடிக்குட் காத
மெய்திய வாசி யோட
மனையைவிட் டகலொணுத்
தென்
வருவனென் றிகலும்
வாறே

இனி இந்நூலின் அடிநாதமாக விளங்கா நிற்கும் சில விஞக்களை போலி ஞானிகளை நோக்கிப் புலவர் வீசும் கேள்விக் கணைகளில் கருத்தைச் செலுத்துவோம்.

அறிவிலாத மூடரே
அமட்டுகின்ற மாடரே
முறிவிலாத தொழுகையை
முயன்றிலாத கேடரே
மறுவிலாத வள்ளல் சொன்
மறுத்து வந்த வண்டரே
நெறியி னேடு பிரிவை யிங்கு
நீயறிந்து விள்ளடா.

ஆதியான தேதடா
அனுதியான தேதடா
நீதியான தேதடா
நிறைந்து நின்றறுகிலே*
பாதியான தேதடா
பகுத்து வந்த தெவ்விடஞ்
சோதி நின்ற வாறென்னேடு
செப்ப வேணும் ஞானரே.

உன்னினில் வணக்க மற்றை
உள்ளிலுன் வணக்கமேது
விண்ணவர் வணக்கமென்ன
விரிமறை வணக்கமுஞ்
சொன்ன நல்ல வேதமே
தெளிந்த ஞானியோர்களே
மன்னவன் வணக்கமென்ன
வளம் பெற விளம்புமே.

பயிரைமுந்து மென்னடா
படைப்புமுந்து மென்னடா
உயிரைமுந்து மென்னடா
உறுப்பைமுந்து மென்னடா
ஹயிறைமுந்து மென்னடா
கருத்தைமுந்து மென்னடா
வயிரமுற்ற நித்திலத்து
வாறுகூறும் ஞானரே.

அழிந்து மறைந்துவிடுந் தறுவாயிலிருந்த இந்நூலை மருதமுனை இஸ்லாமிய ஆசிரிய சங்கத்தின் சார்பில் ஜனுப் ஏ. ஸி. எம். சரீப்தீன் அவர்கள் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறுர் இவர்களின் இம் முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

சின்ன ஆலிம் அப்பா புலவர் தன் வாழ்நாளின் இறுதிக் காலத்தைத் திருகோணமலையில் கழித்தார். அங்கேயே மரணமானுர்.

*(றூகு-ஆன்மா)

# பிரதமரிடம் கேள்விகள்

## அடுத்த செனேற் சபை கூட்டத்தில் திரு. நல்லையா கேட்பார்

எதிர்வரும் செவ்வாய்க் கிழமையன்று கூடும் செனேற்சபை கூட்டத்தில், செனேற்றர் ஜி. நல்லையா பிரதமரிடம் பின்வரும் கேள்விகளைக் கேட்பார்:

வட, கீழ் மாகாணங்களிலுள்ள சிறுபான்மைத் தமிழர் சமூக, அரசியல், பொருளாதார, கல்வி நிலைமைகளில் பின்தங்கிய நிலையிலுள்ளனரென்பதை கௌரவ பிரதமர் அறிவாரா?

மக்கள் முன்னேற்ற மன்றத்தினதும் சிறுபான்மைத் தமிழர் மகா சபையினதும் கௌரவமிக்க தலைவர்களைக் கலந்து கொண்டு பிரதிநிதிகள் சபைக்கு ஒரு சிறுபான்மைத் தமிழரை கௌரவ பிரதமர் நியமிப்பாரா?

மக்கள் முன்னேற்ற மன்றத்தினதும் சிறுபான்மைத் தமிழர் மகா சபையினதும் கௌரவமிக்க தலைவர்களைக் கலந்து கொண்டு மூதவையில் ஏற்படும் அடுத்த வெற்றிடத்துக்கு ஒரு சிறுபான்மைத் தமிழரை கௌரவ பிரதமர் தேர்ந்தெடுப்பாரா அல்லது நியமிப்பாரா?

அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகங்களிலும் அரசாங்க முகாரியிலுள்ள கூட்டுத் தாபனங்களிலுள்ள உத்தியோகங்களிலும் ஒரு பங்கை இந்தியாவில் ஒதுக்கி வைத்ததைப் போன்று குறிப்பிட்ட பத்து வருடகாலமொன்றுக்கு சிறுபான்மைத் தமிழருக்கென கௌரவ பிரதமர் ஒதுக்கிவைப்பாரா?

வட, கீழ் மாகாணங்களிலுள்ள முடிக்குரிய காணிகளைக் காணியற்ற சிறுபான்மைத் தமிழருக்குப் பகிர்ந்தளிக்க கௌரவ பிரதமர் ஆணையிடுவாரா?

சிறுபான்மைத் தமிழரிடையே ஏற்பட்டுள்ள மிக மோசமான காணியில்லாத் திண்டாட்டத்தை நிவர்த்திக்கு முகமாக வட, கீழ் மாகாணங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விசேட குடியேற்றத் திட்டங்களை கௌரவ பிரதமர் ஏற்படுத்துவாரா?

யாழ்ப்பாண மாநகர சபைப் பிரதேசத்தில் சிறுபான்மைத் தமிழருக்கென ஒரு வீடமைப்புத் திட்டத்தை கௌரவ பிரதமர் ஏற்படுத்துவாரா?

சிறுபான்மைத் தமிழர் கூடுதலாயிருக்குமிடங்களிலெல்லாம் உள்ளூராட்சிப் பீடங்களில் அவர்களுடைய பிரதிநிதித்துவம் இருக்கக் கூடியதாக அவ்வுள்ளூரதிகார வட்டாரங்களை வரையறுக்க கௌரவ பிரதமர் ஆணையிடுவாரா?

1957-ம் ஆண்டின் 21-ம் இலக்க சமூக ஒதுக்கற்றடைச் சட்டத்தின் செயற்பாடுகளைத் தீவிரமாக அமுலாக்க கௌரவ பிரதமர் ஆணையிடுவாரா?

காணியற்ற சிறுபான்மைத் தமிழரின் குடியிருப்புக்காகப் பகிர்ந்தளிப்பதற்கென—

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தலைமுறைகளாக சிறுபான்மைத் தமிழர் சொந்த உரிமையின்றி வாழ்ந்துவரும் காணிகள்;

திருத்தப்படாததும் தேவையற்றதுமான தனியாரது காணிகள் ஆகியவற்றைச் சுவீகரிக்க ஒரு திட்டத்தை கௌரவ பிரதமர் ஏற்படுத்துவாரா?

இலங்கையிலுள்ள சிறுபான்மைத் தமிழருக்கென வீடமைப்புக் கடனுதவி விசேட திட்டமொன்றை கௌரவ பிரதமர் ஏற்படுத்துவாரா?

# மன்னர் கண்ட மகாநாடு

## இனத்தின் எழுச்சியை எடுத்துக் காட்டியது

யாழ்ப்பாணத்தில் ஜூலை 7-ம் 8-ம் திகதிகளில் கூடிய தமிழரசுக் கட்சி செயற்குழு, கட்சியின் எட்டாவது தேசிய மகாநாட்டை மன்னுரில் நடத்துவதெனத் தீர்மானித்தது. அதன்பின் ஆகஸ்ட் 4-ம் 5-ம் திகதிகளில் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தின்போது மன்னுரில் மகாநாடு வைப்பது ஊர்ஜிதமாகியது.

மன்னர் மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்களுக்கு இத்தீர்மானம் புத்துணர்ச்சியைக் கொடுத்தது. ஊக்கமுள்ள இளைஞர்கள் பலர் ஒன்றுகூடி இரவென்றும் பகலென்றும் பாராது உழைத்து மகாநாட்டு ஒழுங்குகள் யாவற்றையும் செய்தனர்.

ஆகஸ்ட் முப்பத்தோராம் தேதி அதிகாலை விருந்தாளிகளை வரவேற்கமன்னர் ஆயத்தமாகியது. அதிகாலை 4-மணிக் கெல்லாம் புகைவண்டி மன்னுரை அடைந்துவிடும். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு, திருகோணமலை, மலைநாடு ஆகிய பகுதிகளிலிருந்து தொண்டர்களும் தலைவர்களும் புகைவண்டி மூலம் வந்து சேர்ந்தனர். இது தவிர மோட்டார் வாகனங்கள் மூலமும், பஸ்கள் மூலமும் எண்ணற்ற தொண்டர்கள் வந்து குவிந்த வண்ணமிருந்தனர்.

மன்னுர் பட்டினசபை முன்றலில் ஓங்கிவளர்ந்திருந்த கம்பத்தில் தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் 'கொடியை' பட்டினசபைத் தலைவரும், வரவேற்புக் குழுத்தலைவருமான திரு. அ. இ. பெர்னுந்து மகாநாட்டின் ஆரம்பத்துக்கறிகுறியாகப் பறக்கவிட்டார்.

மீண்டும் இம்முறை தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. சி.மூ. இராசமாணிக்கம் அவர்களுடைய தலைமையின் கீழ், பட்டினசபை [illegible] சனை சபைக் கூட்டம் ஆரம்பமாகியது. மதிய இடைவேளை, இரவு உணவு இடைவேளைகளைத்தவிர இரவு 12 மணிவரை கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. இடையில் மாலை 5-மணிக்கு யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய பகுதிகளிலிருந்து வந்து சேர்ந்த சைக்கிள் ஊர்வலத்தை மன்னுர் பாலத்தில் வைத்து தலைவர்கள் வரவேற்றனர். தொடர்ந்து பொழிந்து கொண்டிருந்த மழையின் கொடுமையினுல், அன்றிரவு நடைபெறவிருந்த கலை நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்பட்டன.

செப்டம்பர் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை அன்று நிகழ்ச்சிகள் யாவும் ஏகாம்பரம் அரங்கில் ஆரம்பமாகின.

மகாநாட்டுப் பந்தலின் நுழைவாயிலில் கலைஞர் குமார் அவர்களுடைய தீபமேந்திய மங்கையர் பொறித்த தோரணம் தென்பட்டது. ஏகாம்பரம் அரங்கும், மாநாட்டுப்பந்தலும் கலைஞர் குமாரின் எண்ணத்துக் கேற்ப அழகுபடுத்தப்பட்டிருந்தன.

மகாநாட்டுத்தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் தொண்டர்களின் அணிவகுப்பைப் பார்வையிட்டு, மரியாதையை ஏற்றுக் கொண்டார். மாநாட்டுப் பந்தலின் முன்றிலில் அமைந்த கொடிக்கம்பத்தில் கட்சிக்கொடியை உயர்த்தி வைத்தார். செல்வன் முழக்கம் முருகப்பாவினுல் தேசீய கீதங்கள் பாடப்பட்டன. தொண்டர்கள் அணிவகுப்பின்போது வாலிபமுன்னணியின் ஆர்ப்பாட்டப் போர்ப் பாட்டு சிறப்பளித்தது.

ஏகாம்பரம் அரங்கை நோக்கித் தலைவர்கள் விரைந்தனர். மறைந்த தலைவன் ஏகாம்பரம் அவர்களை நினைவுறுத்தினுர் தலைவர். எல்லோரும் இரு நிமிடங்கள் எழுந்து அமரர் ஏகாம்பரத்தை நினைவு கூர்ந்தனர்.

வரவேற்புக்குழுத் தலைவர் திரு. அ. இ. பெர்னுந்து

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இந்த அரசாங்கத்தின் போக்கால் சோனகருக்கும் ஆபத்து'

## பாராளுமன்றத்தில் சேர் ராஸிக் பரீத் எச்சரிக்கை

சிங்களவரை இந்நாட்டிலிருந்து அகற்றினுல், அவர்கள் குறைந்த பட்சம் வட இந்தியாவுக்காவது செல்லலாம். ஆனுல் இலங்கைச் சோனகர்களை வெளியேற்றினுல், அவர்கள் போவதற்கு வேறு புகலிடம் ஒன்றுமே கிடையாது. ஏனெனில், அவர்கள் பாகிஸ்தானிலிருந்து வந்தவர்கள் அல்ல. அவர்களுடைய தாய்நாடு இலங்கை தான். இலங்கைச் சோனகர்களும், மலாயர்களும் ஒழித்துக் கட்டப்படும் காலம் நெருங்கி வந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இவ்வாறு சேர் ராஸிக் பரீத், (கொழும்பு மத்தி முதல் மெம்பர்) சென்ற வாரம் பாராளுமன்றத்தில் பேசியபொழுது குறிப்பிட்டார்.

சேர் ராஸிக் பரீத், வெலிமடை, தம்பதெனியாப் பிரதிநிதிகளின் பேச்சுக்கள் தமக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளதாக மேலும் தெரிவித்தார்.

அவர்கள் இருவரும் சிங்களவரைப்பற்றித்தான் பேசினரேயல்லாது, இலங்கையரைப்பற்றி அல்லவென்றும், இலங்கை எப்பொழுதும் இலங்கையருக்காகவே இருக்க வேண்டுமல்லாமல், சிங்களவருக்கு மட்டுமல்ல என்பதையும் அவர் வலியுறுத்தினுர்.

சேர் ராஸிக் மேலும்கூறியதாவது:-

"இப்படிப்பட்ட பேச்சுக்கள் சிறுபான்மையினத்தவருக்கு மிகுந்த கஷ்டங்களை உண்டாக்கும். ஏனெனில், அவர்கள் இங்கு வேண்டப்படாதவர்களென்ற எண்ணத்தையே இப்பேச்சுக்கள் குறிக்கின்றன.

இப்பொழுது இந்தியருக்கு எதிராக எழுப்பப்படும் கூச்சல் நாளைக்கு இலங்கைச் சோனகர்கள், பறங்கிகள், மலாயர் இவர்களுக்கெதிராகவும் எழுப்பப்படலாம்.

எனக்கு டி. எஸ்., டி. எஸ். எவ்.ஆர்.சேனநாயக்காக்களை நன்ருகத் தெரியும். அவர்கள் எடபொழுதும் இலங்கை இலங்கையருக்கென்றே பேசினுர்கள். ஆனுல், ஆர். ஜி. சேனநாயக்காவின் மிதவாதத்தில் நான் ஏமாற்றமே அடைந்துள்ளேன்.

### காட்டுமிராண்டி என்றது சரியே

தம்பதேனியாப் பிரதிநிதியை, அக்குரஸ எம். பி. காட்டுமிராண்டி என்று அழைத்ததற்காக அவரைப் பாராட்டுகிறேன். ஏனெனில், தம்பதேனியாப் பிரதிநிதி இந்தியர்களை ஒழித்துக்கட்ட மாத்திரம் விரும்பவில்லை, அவர்களை விழுங்கிவிடவும்விரும்புகிறுர். தம்பதேனியாப் பிரதிநிதி ஒரு சிங்களக் கட்சியை இட்பொழுது உருவாக்கியுள்ளார்.

இலங்கையிலிருந்து 700,000 சோனகர்களையும் அப்புறப்படுத்திவிட வேண்டுமென்று பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி விரும்புவதாகத் தெரிவதையிட்டு நான் வருந்துகிறேன்.

### எத்தனை பேரால் முடியும்?

இலங்கைச் சோனகர்கள் அல்லது மலாயர் இந்தியாவுக்கு யாத்திரை செல்ல, பாஸ்போர்ட் அல்லது விஸா கேட்டால், அவர்கள் தமது தந்தையரின் பிறப்புரிமைப் [illegible] கள். இந்தச் சபையில் எத்தனை அங்கத்தவர்கள் அப்படிச்செய்ய முடியுமென்று நான் கேட்கிறேன்.

காலஞ்சென்ற பிரதமரே அவரது தந்தையின் பிறப்புரிமைப் பத்திரத்தை வைத்திருந்தாரா? அவர் வைத்திருந்திருக்க முடியாது. பிறப்புரிமைப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க முடியாதென்ற காரணத்தை முன்னிட்டு, இலங்கைச் சோனகர்களும், மலாயர்களும் "நாடற்றவர்" களாக்கப்படலாம். பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி அவ்வித சம்பவம் நடைபெருமல் பார்த்துக்கொள்வாரென நான் நினைக்கிறேன்.

### வயது சென்ற சோனகரின் பரிதாப நிலை

இலங்கையில் 50 வருடங்கள் வாழ்ந்து, திருமணம் செய்து, ஏழு குழந்தைகளுக்குத் தந்தையுமான சோனகர் ஒருவருடைய நிலையைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தச் சோனகருடைய மனைவியும், ஏழு குழந்தைகளும் இலங்கையிலேயே இருக்க, இவர் மட்டும் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார். அவருடைய மூத்த பெண், அவர் சென்று ஒரு மாதத்துள், தந்தையின்றியே மணம் செய்து கொடுக்கப்பட்டார். இவ்வளவும் நடந்தது, அந்த மனிதருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை அளிக்கும்படி நான் ஓர் கடிதம் சமர்ப்பித்ததன் விளைவாகவே. அந்த முஸ்லிமின் விஷயத்தில், விசாரணை எதுவும் நடத்தப்பட முன்னரே, அந்த வயது சென்ற அப்பாவித் தகப்பனுரை வெளியேற்றிவிட்டனர்— அதுவும், இதெல்லாம், அவர் இந்தியாவுக்குத் தமது நோண்பினை நிறைவேற்ற ஒரு முறை சென்றுவிட்ட காரணத்தினுல்.

மெக்கா அல்லது இந்தியாவுக்கு யாத்திரை செய்ய விரும்பும் இலங்கை முஸ்லிம்கள், மலாயர்கள் அவர்களது தந்தையரின் பிறப்புப் பத்திரங்களைக் கொண்டுவரும்படி கேட்கப்படாத வண்ணம் பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின பாராளுமன்றக் காரியதரிசி பார்த்துக்கொள்வாரென நான் நம்புகிறேன்.

### இன்னுமொரு சதியா?

இதற்கெல்லாம் பின்னுக்கு நிற்பவர் வேறுயாருமல்ல—அந்த 'புதிர்ப் பேர்வழி கியூ.டயஸ்'தான். அவர் இன்னுமொரு இராணுவச் சதியை—கரவா சாதியின் சதியை—ஆரம்பிக்க விரும்புகிருர்போலத் தெரிகிறது.

---

## கவிதைப் பூங்கா

### பாரதி நாற்பது

(ஐ. பூபாலபிள்ளை)

அன்புக்கு அணிசெய்யும் அழகுநிலை ஒன்று
ஆக்கத்தில் உறவாடும் ஆர்வமது ரெண்டு
துன்பத்தில் தான்தோயும் தூயநிலை மூன்று
தூக்கத்திலும் நாட்டின் ஏக்கமது நான்கு
இன்பத்தையே தமிழுக் கீந்த மனம் ஐந்து
இழிவான செயல் போக்கும் இயல்போடு முதுகு
என்பற்ற மாந்தர்க்கு உரமூட்டும் வண்ணம்
எழில் காவியந் தீட்டும் தன்மையொடு எட்டு

துள்ளிக் குதிக்கின்ற பிள்ளைமனம் ஒன்பது
தோழர்க்கு வாழ்வீயும் வாய்மையொடு பத்து
பள்ளியில் கவியார்த்த பான்மை பதினென்று
பாலரொடுற வாடும் பண்பு பனிரெண்டு
எள்ளியே நகைப்பவர்க் கேற்றகவி பாடி
எதிராலே ஓட்டுதல் இயற்கை பதினுன்கு
வள்ளியின் பாகனை வாவென்று கூவி
வானிலை நோக்குதல் வளமை பதினுறு

அடிமையைப் போக்கின்ற அழகான எண்ணம்
ஆண்மையில் வெற்புக்கு அணியாய மார்பு
துடியிடை மாதர்க்கு மடமையைப் போக்கல்
தூய்மையில் சக்தியைக் காணுதல் பாடல்
நடையிலும் நாமகள் நாமமே ஓதல்
நாட்டினர் துயில் எழ நற்சங்கு ஊதல்
தடியிலும் தாய்நாட்டு உரிமையைக் காட்டல்
தமிழனே யான என்ப திருபத்துநான்கு

சிந்துவின் நீர்பாயும் செம்மையைக் கண்டும்
சிங்களத் தீவுக்குப் பாலம் அமைத்தும்
சந்திர மண்டலத் தன்மையை விண்டும்
சாதிகள் இல்லையென்று சமத்துவம் செய்தும்
சுதந்திரத் தமிழனே தலைநிமிர் என்றும்
சுதந்திர வேட்கையைச் சுருதியாய்க் கொண்டும்
வந்தே மாதர மணிமொழி தநதும்
மானத்தைக் காத்தலொடு முப்பத்திரெண்டு

நெடுவரை நாடெங்கள் நாடென்ற நேர்மை
நினைவிலும் தமிழ் எங்கள் தாயென்ற உண்மை
கொடுமையைக் கொல்கின்ற கூரான விழிகள்
கோபத்தில் கூத்தாடும் கொம்பொத்த மீசை
விடுதலைக்கே வித்து நாட்டிய இதழ்கள்
வீணர்கள் கண்டஞ்சும் வெண்த லைப்பாகை
நெடு உலகெவருக்கும் ஈயாத மேன்மை
நிலை கவி பாரதிக்கே நாற்ப தென்க.

---

### எப்பொழுது?

"திமிலைத்துமிலன்"

அவர்மொழி பயில்வோம் நனிமகிழ்ந் தன்றே
நீள்புகழ் இளமை நீங்கா வனப்பின்
தோள்கொடு சமதவி சமரும்
நாள்வரின் நட்பின் நலமாம் பொழுதே.

அவர்மொழி பயில்வோம் நனிமகிழ்ந் தன்றே
ஈழம் கவரும் இருங்கோல் வேங்கை
சோழன் குடைக்கீழ் நிமிர்ந்த
தாழ்வில் முறுவலெந் தாய்கொளும் பொழுதே.

அவர்மொழி பயில்வோம் நனிமகிழ்ந் தன்றே
குறுஞ்சுனைக் குவளை சூடி என்னையும்
இறும்பூ தெந்தையும் முயன்ற
நறுந்தேன் தண்டமிழ் நவைதீர் பொழுதே.

அவர்மொழி பயில்வோம் நனிமகிழ்ந் தன்றே
இன்குர லகவும் குயிற்பெடை எந்தமிழ்
தன்னெடும் சிங்களத் தகவும்
நன்னிலை ஈழத்து நண்ணும் பொழுதே.

அவர்மொழி பயில்வோம் நனிமகிழ்ந் தன்றே
ஆள்பவர் அடிமை தோன்று நெறியின்
கேளிராய் இருகுலம் தழைக்கும்
சூழலில் இறைமை தோன்றும் பொழுதே.

---


### புத்தகம்

சாத்திரி—ஓர் அரிய சோதிட நூல். உங்களினதும் உங்கள் குடும்பத்தினதும் சாதகங்களின் பலாபலன்களை இலேசாயும இரகசியமாயும் அறிய உதவும். இதில் கைரேகைச் சாத்திரமும் இருது ஜனன சாத்திரமும் அடங்கியுள்ளன. உடனே எழுதவும்.

வி. பி. பி. மூலம் அனுப்பி வைக்கலாம். விலை (தபாற் செலவு உட்பட) ரூபா 3-70. செ. சோதிநாதன், த பெ. 147, கொழும்பு.

யாழப்பாணம், கொழும்பு, கண்டி, மாத்தளை, திருகோணமலை, மட்டக்களபபு ஆகிய இடங்களில் தமிழ்ப் புத்தகக் கடைகளில் வாங்கலாம்.





## ரிஷி லேகியம்

ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்,
மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர கைகால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண் கை கால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினுல் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனும்

**15 நாள் டின் ரூ. 3-00**
**30 நாள் டின் ரூ. 5-75**

தபால் செலவு -/95

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளவுகளை மறந்து போர் தொடுத்தால் வெற்றி நிச்சயம்

## மன்னார் பட்டினசபைத் தலைவரின் வரவேற்புரை

**திக்கற்றுத் திணறிய தமிழ் பேசும் இனத்தை ஒரு வழிப்படுத்திய பெருமை தமிழரசுக் கட்சியையே சாரும். எம்மிடத்திலுள்ள வேறுபாடுகளை மறந்து தமிழன்னையை விடுவிக்க விரைவோமாக. இந்நாட்டைப் பொன்னுடாக்கிய மலை நாட்டு மக்கள் எம்முடன் ஒன்று சேர்ந்து போரிட்டால் உரிமை பெறுவது நிச்சயம். சரித்திரப் பிரசித்தி பெற்ற மன்னார் உங்கள் அனைவரையும் வரவேற்கிறது.**

இவ்வாறு மன்னார் மாநாட்டுக்கு வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசிய மன்னார் பட்டின சபைத் தலைவரும், வரவேற்புக் குழுத் தலைவருமான திரு. அ. இ. பொன்னுந்து கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:—

ஈழத் தமிழ் பேசுமினத்தின் இன்னலை நீக்க சங்கற்பம் செய்து நிற்கும் தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. இராசமாணிக்கம் அவர்களே! எங்கள் அழைப்பினை அன்புடன் ஏற்று மலைகளையும், மடுக்களையும், மாவட்டங்களையும், மாகாணங்களையும் கடந்து வந்திருக்கும் தமிழ்பேசும் பெருங்குடி மக்களே! உங்கள் அனைவருக்கும் என் வணக்கம் உரித்தாகுக.

சரித்திரப்பிரசித்தி பெற்ற மன்னார் மகாநாட்டிலே ஏகாம்பரம் அரங்கிலே வைத்து உங்களை வரவேற்க நான் மாபெரும் தவம் செய்தவனாயிருக்கிறேன். மறைந்தும் மறையாதிருக்கும் திரு. ஏகாம்பரம் பூதவுடம்பு அழிந்தும் புகழுடம்பு அழியாத தலைவர் வன்னியசிங்கம் அவர்களுடன் எமது பிரச்சினைகளைத் தீர்க்க விண்ணுலகிலிருந்து உதவி புரிவாராக.

மன்னார் மாவட்டம் மிகவும் தொன்மை வாய்ந்தது. இன்று வரண்ட பிரதேசமாய் காட்சியளித்தாலும் முன்னோர் காலத்தில் பெரும் தானியக் களஞ்சியமாய் இருந்ததென்பதை சரித்திரம் கூறும். பண்டைக் காலத்தில் நாகரிக மடைந்திருந்த எகிப்து, கிரேக்க நாடுகள் இந்நாட்டுடன் வணிகம் செய்திருந்தார்கள்.

மாதோட்டம் ஓர் பெரிய துறைமுகமாயிருந்தது. பாடல் பெற்ற திருக்கேதீஸ்வரமும் இப்பிரதேசத்திலே தானுள்ளதென்பதை ஞாபகப்படுத்துகிறேன். காலத்தின் கோளாறுகளாலும் கயவர்களின் சூழ்ச்சியாலும் இப்பிரதேசம் இன்று இந்நிலையில் இருக்கிறது. பல மதத்தினரும் ஒற்றுமையாயிருப்பது மற்ற மாவட்டங்களுக்குமே ஓர் எடுத்துக்காட்டாகும். பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இந்நேரத்திலே தமிழ்பேசுமினத்தின் இன்னல் துடைத்து, இருள் நீக்கி இன்பந்தர எம்நாடு மிகவும் பயன் படுமென்பதை எமது தலைவர்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன்.

### இன ஒதுக்கல்

உலகில் எந்த நாடுகளிலுமில்லாத, சரித்திரத்திலேயே காணமுடியாத இனஒதுக்கல், கொடுங்கோல் ஆட்சியை இந்நாட்டிலே மட்டுந் தான் காணமுடியும். கறையான் புற்றெடுக்க கருநாகம் குடி கொண்டது போல ஆதிக்கம் எம்மேல் திணிக்கப்படுகிறது. இலங்கைச் சுதந்திரப் போராட்டத்திலே முன்னணியில் நின்றவர்கள் தமிழ் பேசும் மக்களென்பதை அறிவுள்ள சாதாரண சிங்கள மக்களே ஒத்துக்கொள்வார்கள்.

திக்கற்று, திசை தெரியாது, திகைத்து நின்ற தமிழ் பேசுமினத்தை ஒற்றுமைப்படுத்தி, ஓர் வழிப்படுத்தி, ஒரே குரலில் உரிமைப்போர் தொடுத்த பெருமை தமிழரசுக் கட்சிக்கே உரியது. தமிழன் உயிருக்காக தலைபோவதென்றாலும் தயங்காமல் செயலாற்றும் கட்சியென ஒன்றிருந்தால் அது தமிழரசுக் கட்சியே. இந்நாட்டின் சரித்திரத்திலே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இரண்டு மாதங்களாய் கத்தியின்றி, இரத்தமின்றி போர் புரிந்து அரசாங்க நிர்வாகத்தையே ஸ்தம்பிக்கச் செய்த பெருமை தமிழரசுக் கட்சிக்கே உரியது.

### ஒற்றுமை அவசியம்

வைதீகக்கொள்கைகளால் ஏற்பட்டிருக்கும் சாதி வேற்றுமையைப் பூண்டோடு அழிக்க எல்லோரும் முன் வரவேண்டும். எமது ஒற்றுமைக்கு இது மிகவும் பங்கம் விளைவிக்கிறதென்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. மத வேறுபாடுகளையும், கருத்து வேற்றுமைகளையும் எம்மிடையே புகவிடாமல் இனத்தின் ஒற்றுமைக்கும் சுபீட்சத்திற்கும் நாம் உழைப்போமானால் எமது இலட்சியத்தை மிகக் குறுகிய காலத்திலேயே அடையலாம்.

### மலையக மக்களே!

எமது மலைநாட்டுச் சகோதரர்களுக்கு ஓர் விண்ணப்பம்: இந்நாட்டை பொன் கொழிக்கும் பூமியாய்ச்செய்தவர்கள் நீங்கள். பொருளாதாரத்தின் அச்சாணியாயிருப்பவர்கள் நீங்கள். இன்று உங்களைப் பல பெயர் சொல்லி வர்ணிக்கிறார்கள். ஆளவேண்டிய ஓரினத்தை அடிமைப்படுத்தி அனாதைகளாக்கிவிட்டார்கள் ஆட்சியாளர்கள். இதை மாற்றியமைக்க உங்களால் முடியும். எம்முடன் சேர்ந்து எமது இயக்கத்திற்கு ஆதரவளிப்பீர்களேயானால் வெற்றி உங்களுக்கே.

தள்ளாத வயதிலே, தடுப்புக்காவலிலிருந்து எமது தந்தை செல்வநாயகத்தை சத்திர வைத்தியத்திற்கு லண்டன் கொண்டு சென்றபோது நாம் மிகவும் வியாகுலம் அடைந்திருந்தோம். தமிழினத்தின் தவப்பயனாலும், எமது பிரார்த்தனைகளாலும் அவர் மீண்டும் எம்மத்தியிலிருப்பது எமக்கு மிகவும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் கொடுக்கிறது. பல்லாண்டு வாழ்ந்து எமது விமோசனத்தின் வெற்றியைப் பெற ஆண்டவன் அருள்புரிவாராக.

## தாய் மொழி மூலம் கல்வி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியானது வங்காளத்தார், கன்னடத்தார் ஆகியோர்க்குப் பண்பாட்டு மொழி ஆகவே மாட்டாது. பஞ்சாப்பியர், ராஜஸ்தானத்தார், பீஹாரியர், ஐக்கிய மாநிலத்தார் ஆகியோருக்கு இந்தியோ, உருதுவோ பண்பாட்டு மொழியாக இருக்கலாம். அரைகுறை இந்தியில், தப்பான இந்தியில் கலைகளைக் கற்றுக்கொள்வதைவிட எளிய பிழையில்லாத தமிழிற் கற்றுக் கொள்வது மேலன்றோ?

இந்தியைத் தென்னிந்திய மக்களும் அறிவார் எனக் கணக்கிற் சேர்த்துக்கொள்வாரும் உண்டு. அவர்கள் இந்தி சினிமாப்படங்கள் தென்னிந்தியாவில் மாதக் கணக்கில் நடை பெறுவதால் அவற்றைப் பார்க்கப்போவோர் இந்தி தெரிந்தவராகவே இருப்பர் என ஊகிக்கிறார்கள். அப்படங்களைப் பார்க்கப் போவோருள் ஏதேனும் பொழுது போக்கிற்காகப் போவோர் தொகையும் நடிப்பு, ஆடல் (புரியாத) இசை, திரைப்பட வொழுங்கு முதலியவை காரணமாகப் போவோர் தொகையும் மிகுதி என்பதை அவர் அறியார் போலும்!

### எப்படிப் புரியும்?

இந்தி, சமக்கிருதத்தோடு தொடர்புடைய மொழியாதலாலும், தமிழும் அவ்வண்ணமே தொடர்புடைய மொழியாதலாலும் தமிழர்களும் இந்தியை எளிதிற் புரிந்துகொள்வர் என்று சொல்லுவோர் கூற்று எவ்வளவு பொருத்தமற்றது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு காண்போம்:

| இந்தி | தமிழ் |
|---|---|
| யோக் | கூட்டல் |
| மிஸ்ரம் | கலப்பு |

தமிழிற் கூறினால் புரிவதைப் போல இந்தியிற் கூறினால், சாதாரணத் தமிழ் மகனுக்குப் புரியுமா? அவனுக்கு இந்தியும் ஆங்கிலமும் ஒன்றுதான். ஆனால் வங்காளத்தாருக்கோ, மராத்தியருக்கோ, குஜராத்தியருக்கோ, வேறு சில வடஇந்தியருக்கோ, இந்தியிற் செல்வதும் அவர் மொழியிற் கூறுவதும் ஏறத்தாழ ஒன்றாக இருக்கும். அதனால் வடஇந்தியருக்கு ஒத்தது தென்னிந்தியருக்கும் என்பது பொருந்தவே பொருந்தாது.

### கட்டாயப் படுத்தல் கூடாது

இவ்வாறு கூறுகின்றவர்களைதேசியத்திற்கு மாறுபட்டவர்கள் என்பதும் பொருந்தாது. ஸ்விட்சர்லாந்தில் பல மொழி இருந்தும் தேசியத்திற்குக் கேடு இல்லை. பிரிட்டனிலேயே இங்கிலிஷ், வெல்ஷ், கேலிக் மொழிகள் உள. பிரான்ஸ், ஸ்பெயின், சோவியத் ரஷ்யா, சைனா, மெக்சிகோ, மத்திய தெற்கு அமெரிக்கா சமஸ்தானங்கள், கனடா, தென்னாப்பிரிக்கா, செக்கோஸ்லோவாக்கியா, பெல்ஜியம், ஆப்கானிஸ்தான் ஆகியவை பன்மொழி அரசாங்கங்கள். உலக ஐக்கியநாட்டமைப்பில் ஒரு மொழி கட்டாயப் படுத்தப்படவில்லை. இங்கிலீஷ், பிரெஞ்சு, ருஷ்ய, சீன, ஸ்பானிஷ் மொழிகள் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஒரு மொழியிற் பேசுவோர் பேச்சினை மறு மொழியில் உடனே அறிந்துகொள்ளுவதற்கு உரிய மொழிபெயர்ப்பு வசதிகள் செய்துதரப்பட்டுள்ளன. ஒரு மொழியைக்கட்டாயப்படுத்தினால், அதற்கு வலியச் சிறப்பினை நல்கினதாகும் என்ற எண்ணத்தால் அங்கே ஒரு மொழியே கட்டாயப்படுத்தப்படவில்லை. இந்தியாவிலும், இந்தி வழியாகவே கலைச்செல்வங்களை நல்குவோம் எனக் கட்டாயப் படுத்துவது பொருந்தாது. தமிழ்நாட்டில், நம் தாய் மொழியாகிய தமிழ் வாயிலாகவே கற்பிக்கவேண்டும்.

## 'அரசாங்கத்தின் இன்றையநிலை தெய்வத்தின் தண்டனை'


### திருமலை தமிழரசுப் பிரமுகர் கருத்து

"அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்பது தமிழ் மறையின் கூற்று. நமது அரசாங்கத்தின் இன்றைய நிலை இந்த நீதிவாக்கியத்துக்கு மிகப்பொருத்தமாக அமைந்துள்ளது."

அரசாங்கத்தின் இன்றை நிலை பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கையில் தமிழரசுப் பிரமுகர்களில் ஒருவரும் திருகோணமலை நகரசபை உறுப்பினர்களில் ஒருவருமான திரு. சோமசுந்தரம் இவ்வாறு கூறினார்- அவர் தொடர்ந்து கூறியதாவது:

"வெள்ளை ஆதிக்கத்தின் கீழ் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் மிகுந்த கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தார்கள். எனவே நாட்டிற்குக் கிடைத்த சுதந்திரத்தின் பலாபலனை இருமொழி பேசும் மக்களும் பகிர்ந்து கொண்டு தேச முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டியது இரு சமூகமக்களினதும் இன்றியமையாத கடமையாகும். ஆனால் சிங்கள ஆட்சித் தலைவர்கள் [illegible] சாக்கிட்டு தமிழ் பேசும் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளைச் சூறையாடி தமிழ் பேசும் இனத்தை என்றும் அடிமையாக வைத்திருக்க வேண்டும் என்ற துர் ஆசையில் தமிழ் இனத்திற்குப் பாதகமான சட்டதிட்டங்களைச் செயல் படுத்த முன் வந்தனர்.

இந்த அநியாயத்தை ஆட்சேபித்து அரசாங்கத்தின் தயவைப் பெறும் ஒரே நோக்குடன் தங்களைத்தாங்களே வதைத்துக் கொண்டு சுட்டெரிக்கும் வெயிலில் ஆண் பெண் குழந்தைகள் என்ற வேறுபாடின்றி பல்லாயிரக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் கடும் தவம் இயற்றினர். எந்த விதமான ஆயுதங்களும் இன்றி வெயிலில் தங்களைத் தாங்களே வதைத்து நியாயம் கோரிய அப்பாவித்தமிழ் இனத்தின் மேல் ராணுவத்தை ஏவிக் கொடுமைப்படுத்தினர் ஆட்சியாளர்கள். அன்று தமிழ் பேசும் இனத்தவர்கள் அனுபவித்த இன்னல்களைக் கண்டும் காலம் வரட்டும் என்று தெய்வம் பொறுமையுடன் காத்திருந்தது. இன்று காலம் வந்துவிட்டதால் தெய்வம் தண்டனை அளிக்க முன்வந்து விட்டது."




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை சிவப்பு மயமாகிறதா?

## எமது நாட்டின் நிலைபற்றி 'ஐரிஷ் டைம்ஸ்' கட்டுரை

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலையை மூன்றும் மனிதரின் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து திரு. கொலின் ஜெக்ஸன என்பவர் "ஐரிஷ் டைம்ஸ்" பத்திரிகையின் 1962 ஆகஸ்டு 21-ந் தேதி இதழில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். தற்போதைய அரசாங்கத்தின் "சோஷலிஸத் திட்டங்கள்" என்று கூறப்படும் நடவடிக்கைகளை அவர் கண்டித்துள்ளார். அவரது கருத்துக்களில் சில தவறானவைகளெனினும் அக் கட்டுரையின் சாராம்சம் இங்கே பிரசுரிக்கப்படுகிறது.

வெளிப்பார்வைக்கு, இலங்கையில் மாற்றம் உண்டாகியிருப்பதாக வெளிநாட்டார் ஒருவருக்குந் தெரியாமல் இருக்கலாம்.

ஆனல், 1962-ம் ஆண்டில் இலங்கை, மெல்ல மெல்லவாகப் பிரிந்து போகின்றது. இவ்வளவு காலமும் அத்தீவு பெற்றிருந்த ஒற்றுமையும், சுபீட்சமும் துரிதமாக மறைந்து கொண்டிருக்கின்றன.

இலங்கை, தனது வருமானத்துக்கு, தேயிலை, இறப்பர் இரண்டினதும் ஏற்றுமதியையே நம்பியிருக்கிறது. ஆனல், இப்போது சில காலமாக, இவற்றின் விலை உலகச் சந்தையில் இறங்கிக் கொண்டே வந்துள்ளது. ஆகவே, இலங்கையின் வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது.

### அதிகரிக்கும் சனத்தொகை

இலங்கையின் இந்த நிலைக்கு, இன்னுமோர் காரணம், அதன் சனத்தொகை அதிகரிப்பாகும். உலகில் வேறெந்த நாட்டிலும் இல்லாத அளவில், இலங்கையின் சனத்தொகை அதிகரித்து வருகிறது. இரண்டாவது உலக யுத்தத்தின் பின் 80 லட்சமாக விருந்த அதன் சனத்தொகை இன்று ஒரு கோடிக்கு மேலாக அதிகரித்துள்ளது. அது 1970-இல் ஒன்றரைக் கோடியாகப் பெருகும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

மூன்ருவது காரணம் என்னவெனில், இலங்கை, அரிசி சாப்பிடும் நாடாக விருந்தும், அதன் அரிசி உற்பத்தி மிகக் குறைவேயாகும். அத்துடன், ஆசிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி இந்நாட்களில் கிடைப்பது அரிது அல்லது அப்படிக் கிடைத்தாலும், விலை அதிகமாக விருக்கிறது. இறக்குமதிகளில் ஏற்படும் வீழ்ச்சிக்கு ஏற்ற அளவில் நாட்டில் உற்பத்தியாகும் அரிசியின் அளவு ஏறுவதாகத் தெரியவில்லை. நிலைமை இப்படி இருக்கும் சந்தர்ப்பத்தில், கொழும்பிலுள்ள கள்ளச்சந்தைக்காரர் ரூபாய்களை ஸ்டேர்லிங் பணத்துக்கு விற்கும் போது, அதிகாரபூர்வமான ஒரு பவுனுக்கு 13 ரூபாய் என்றபடி விற்காமல், அதிலும் இரண்டு மடங்கு அதிகமான விலைக்கு விற்கிறார்கள்.

இத்தகைய கஷ்டங்களும் பிரச்சினைகளும், தொல்லைகளும் அனுபவம் வாய்ந்த பெரிய நாடுகளையே ஆட்டி வைத்துவிடக் கூடியவை. அப்படியிருக்கையில், இலங்கை அரசியற் தலைவர்கள் அவசரமும், ஆத்திரமும் அடைந்தவர்களாகக் காணப்படுவதும், இலங்கையைக் காப்பாற்ற எந்தவிதமான நடவடிக்கையிலும் இறங்கத்துணிவதும் ஆச்சரியத்துக்குரியதல்ல.

### கண்ணீரால் கட்டி வளர்த்தார்

இலங்கையின் பிரதமராக விளங்குபவர், உலகத்தின் முதல் பெண் பிரதம மந்திரியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவாவர். அவருக்குத்தாம் தமது பதவியில் நீண்ட காலம் இருக்க வேண்டும் என்ற அவா இருப்பதாகத் தெரியவில்லை. கணவன் இறக்க முன், அரசியலில் எந்தவித ஈடுபாடும் இல்லாமல் இருந்துவிட்டு, கணவனின் மரணத்தின் பின், கண்ணீரில் கணவனின் கட்சியைக் கட்டி வளர்த்த அவ்வம்மையார், இலங்கை குடியரசாகும் போது, உலகத்தின் முதல் பெண் ஜனதிபதியாகத் தாம் பதவியேற்க வேண்டுமென்ற விருப்பமுடையவராகவே தென்படுகிறார்.

### இடதுசாரி மந்திரிகள்

இன்று இலங்கையின் அதிகாரம் உண்மையில் இருவரிடம் தான் தங்கியுள்ளது. அவர்கள் தான திருவாளர்கள் பீலிக்ஸ டயஸ் பண்டாரநாயக்காவும், பி. இலகரத்தினவும். இருவரும் இடதுசாரிகளாவர். காலஞ்சென்ற பிரதமரின் மருமகனன திரு. டயஸ், பீலிக்ஸ் அண்மையில் தான் அரசியலில் புகுந்தவரானலும், திறமைசாலி; அதிகார விரும்பியும் கூட. இவரது வாதத்திறமை சாம்ராச்சிய நாடுகளிலிருந்து இலங்கைப் பார்லிமெண்டுக்கு விஜயம் செய்திருந்த வெளிநாட்டு அரசியல்வாதிகளையும் கவர்ந்துள்ளது.

திரு. ரி. பி. இலங்கரத்ன உணவு, வர்த்தக, கடற்றொழில் மந்திரியாவர். இவா, பீலிக்ஸ் டயஸைப் போலல்லாது, மேல் நாட்டுடைகளை ஒதுக்கிவிட்டு, தேசிய உடையையே அணிவார். தமது பதவியில் நிலை நிற்கவும், தமது அதிகாரத்தை அதிகரிக்கவும் ... பார்க்க, இவருடைய நிலை இருக்குச் சாதகமாக அமைந்திருக்கிறது என்று ஒரு சிலர் கூறுகின்றனர்.

### மூன்று மசோதா

ஆனல், இருவரும் இலங்கையை ஓர் சோஷலிச சர்வாதிகார அமைப்பின் கீழ் கொண்டு வரவே முயல்கின்றனர். இதற்காக, மூன்று மசோதாக்கள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளன. பெட்ரோல் நிலையங்கள், இன்சூரன்ஸ் கம்பனிகள், வங்கிகள் இவற்றை அரசாங்கம் அதிகாரமேற்கும் மசோதாக்களே அவை.

இவ்விதம் நாட்டிலுள்ள தனி நபர் உடைமைகளெல்லாம், ஒவ்வொன்ருக அரசாங்கம் தேசிய மயமாக்கமுற்படும் வகையில் இலங்கைக்கு வெளி நாட்டிலிருந்து வரக்கூடிய மூலதனமெல்லாம் ஓடி ஒளிந்து கொள்கிறது.

இந்தக் காரணத்தினலேயே, இந்தக் கோடை காலத்தில் இலங்கை சிவப்பு நிறமாகக் காட்சியளிக்கிறது.

இந்த நெருக்கடியிலும், அரசாங்கம் ஒரு சலுகையைத் தர முன் வந்துள்ளது. திட்டமிட்டபடி, இலங்கைத் தேயிலைத் தோட்டங்களைத் தேசிய மயமாக்குவதைத் தாம் பின் போட்டுவிட்டதாக அது தெரிவித்துள்ளது. ஆனலும், இச்சலுகை காலம் தாமதித்தே வந்துள்ளது. ஏனெனில், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் இங்குள்ள அந்நிய ஸ்தாபனங்களை விரட்டி விட்டது. இனி, அந்நியர்கள் மூலதனமிடத் தயங்குவார்கள்.

1962-ம் ஆண்டு இலங்கையின் பரிதாபம், தனிப்பட்ட ஒருவரினதோ ஒரு கட்சியினதோ அட்டகாசத்தினல் ஏற்பட்டதல்ல. இங்கு, அரசியல் விரோதிகள பொது வாழ்வில் நெருங்கிய சிநேகிதர்களாக வாழ்கிருர்கள்.

ஆனல், சிறுபான்மையினரான தமிழர், பறங்கிகள் ஆகியவர்களின் உரிமைகள், பிரயோசனமற்ற முறையில், அவசரமாகவும், ஆத்திரமாகவும் பாதிக்கப்பட்டுள்ளன, பலாத்காரம், அடித்தளத்தில் துலங்கிக்கொண்டிருக்கிறது என்பது, 1958-ல் நடைபெற்ற வகுப்புக் கலவரங்களிலிருந்து தெளிவாகிறது.

ஆத்திர மூட்டும் செயல்கள் ஒரு பக்கம் நடைபெற, இலங்கைச் சமூகத்தின் கட்டுக்கோப்பு மறுபக்கம் சீர்குலைகிறது. இந் நாட்டுக்கு எத்தனையோ துறைகளில் தொண்டாற்றிய பறங்கிச் சமூகத்தினரில் பலர் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். நாட்டின் அரசியற் சேவையின் முதுகெலும்பாக விளங்கும் தமிழரிற் திறமை வாய்ந்த பலர், நைஜீரியா, கானு முதலிய நாடுகளில் தொழில் ஏற்றுள்ளனர். 1956-ல் எட்டுக் கோடியே எண்பது லட்சம் ரூபாயாக இருந்த அந்நிய பணச் சேமிப்பு, 1961-ல் மூன்று கோடியே ஐம்பது லட்சமாக இறங்கிவிட்டது.

இலங்கைக்கு இன்று அவசியம் தேவையானது, தன்னையே தான் காப்பாற்றிக் கொள்ளும் உணர்ச்சியாகும். ஆனல், அதற்கு மாருக, அது தன்னையே தான் அழிக்கும் சக்தியே பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

---

## சங்கப் பலகை

### வாழ்வு பெற்ற வல்லி

ஆசிரியர்:—த. சண்முகசுந்தரம்

வெளியீடு:— மகாவித்துவான் கணேசையர் சங்கம், மாவிட்டபுரம்

விலை:— 75 சதம்.

வரலாற்றை அடிப்படையாக வைத்து நல்ல கதைகளை, நாவல்களை உருவாக்கும் முயற்சியை முதலில் ஆரம்பித்து வைத்தவர் பேராசிரியர் கல்கி அவர்களே. அவர்களைப் பின்பற்றி இன்று தமிழகத்தில் ஏனைய எழுத்தாளர்களும் வரலாற்றின் துணை கொண்டு பல நல்ல நவீனங்களை, நாடகங்களை உருவாக்கியுள்ளார்கள்.

ஆனல் ஈழத் தமிழகத்தின் வரலாற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து இன்றுவரை தமிழகத்து எழுத்தாளர்களாயினும்சரி, நமது நாட்டு எழுத்தாளர்களாயினும் சரி எந்தவொரு நவீனத்தையும் நல்ல முறையில் படைக்கவில்லை. இக் குறையை ஆசிரியர் சண்முகசுந்தரம் அவர்கள் 'வாழ்வு பெற்ற வல்லி' என்னும் நாடகத்தின் மூலம் ஓரளவு தீர்த்து வைத்துள்ளார்.

ஈழத்தின் வடபகுதியில் உள்ள மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் எழுந்த வரலாறே நாடக நூற் பொருளாகும்.

யாழ்ப்பாண வைபவமாலையில் கூறப்பட்டுள்ள வரலாற்றுக் குறிப்பைத் துணைக் கொண்டு இந் நாடகத்தை உருவாக்கியதாக ஆசிரியர் தனது முகவுரையில் குறிப்பிட்டிருந்தாலும், ஆசிரியர் அவர்கள் அதேயிடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவராகையால் கர்ண பரம்பரைக் கதைகளையும் நன்ருக அறிந்திருக்க முடியும்.

இரு கப்பற் பாட்டுக்களை இடையில் புகுத்தியிருப்பதே இதற்குச் சான்ருக அமைந்துள்ளது. எனவே இந் நாடகம் சிறப்பாக அமைந்தமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

ஆசிரியரின் கற்பனையில் எழுந்த மூன்று பாத்திரங்கள் நாடகத்தின் பெரும் பகுதியை எடுத்துக்கொண்ட போதிலும் வரலாற்றிற்கு எந்தவித ஊறும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நாடகம், நடிப்பதற்கு ஏற்ற முறையில் எழுதப்பட்டிருந்தாலும், சில காட்சிகளில் குறிப்பிடக் கூடிய சில மாற்றங்களைச் செய்ய வேண்டிய அவசியம் மேடை யேற்றும் பொழுது ஏற்படேயாகும். வேறு குறிப்பிடக் கூடிய குறைகள் எதுவும் இல்லை.

வேண்டிய இடங்களில் குறள், தேவாரம், நாட்டுப் பாடல் முதலியவற்றைக் எடுத்தாண்டிருப்பது, ஆசிரியரின் பரந்த இலக்கிய அறிவை எடுத்துக் காட்டுகிறது.

ஈழத்தின்முதுபெரும் நடிகரான கலையரசு. க. சொர்ணலிங்கம் அவர்களும், பல்கலைக் கழகத்துத் தமிழ் விரிவுரையாளரும், இலங்கைக் கலைக் கழகத்தின் நாடகக் குழுவின் தலைவருமான கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களும் அணிந்துரை வழங்கியுள்ளார்கள்.

சங்கர்.

---

### நாடக மாலை

ஆசிரியர்:— 'ஐயன்ன'

வெளியீடு:- சன சமூக நிலையம், கந்தரோடை, சுன்னகம்.

விலை:— ரூபா 1-50

தமிழ் மொழியில் மற்றைய இலக்கியங்கள் வளர்ந்திருக்குமளவு நாடக இலக்கி

(13-ம் பக்கம் பார்க்க)


## ஏஜண்டுகள் தேவை

கீழ்க்காணும் ஊர்களில் சுதந்திரன் விற்பனை செய்வதற்கு முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

| | | |
|---|---|---|
| கொத்மலி | நிவித்திகலை | நெடுங்கேணி |
| வேலணை | முள்ளியவளை | உயிலங்குளம் |
| வாரியப்பொல | புலத்சிங்கள | ரம்புக்கனை |
| மன்னம்பிட்டி | மொனராகல | நாரம்மல |
| நாத்தாண்டியா | நல்லூர் | கல்லேல்ல |
| மயிலிட்டி | அளுத்கம | நாவற்குழி |

நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
நிர்வாகி,
"சுதந்திரன்"
த. பெ. இல. 1183
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு-12.

## வேல் தைலம்
## மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்ருகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

**விலை ரூபா 1-25**

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

**S. P. S. ஜெயம் கம்பெனி,**
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

**M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,**
34, செட்டியார் தெரு,
கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1962 செப்டெம்பர் மாதம் 9-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## மீண்டும் போர் முழக்கம்

தமிழரசு மகாநாடு பூரண வெற்றி—மன்னாரிலே உத்வேகம், உணர்ச்சி கரைபுரண்டோடியது. மூதூர் தேர்தலுக்குப் பின் நிகழ்ந்த மாபெரும் நடவடிக்கையல்லவா இம்மகாநாடு? மகாநாட்டின் சிறப்பான அம்சம் அடுத்த நடவடிக்கைக்குத் திட்டம் தீட்டியதுதான்.

மன்னார் மகாநாடு போர்க்கொடி உயர்த்திவிட்டது. சித்திரை 17ந் தேதிக்கு முன் விடுதலைப் போராட்டம். அதற்கான ஏற்பாடுகள அடுத்த மூன்று மாதங்களில் நடைபெறும்.

இது போராட்டப் பாதையிலே மற்றொரு திருப்பம்' அடுத்து என்ன? என்று கேட்டவர்களுக்கு பதில் கிடைத்துவிட்டது. தெட்டத் தெளிவாக திட்டவட்டமாகத் தீர்க்கமான முடிவுகளைச் செய்திருக்கிறது தமிழரசு மகாநாடு.

தமிழ் பேசும் இனத்தின் இன்றைய நிலை என்ன? ஏற்பட்டுள்ள ஆபத்துகள் யாவை? தொடர்ந்து போராட்டம் ஏன்? என்பனவற்றைத் தெளிவாக விளக்குகின்றன மகாநாட்டுத் தீர்மானங்கள்.

சுமார் 10 லட்சம் மலைநாட்டு மக்களுக்கு இன்று குடியுரிமையில்லை—வாக்குரிமையில்லை. அவர்களைத் தோட்டங்களிலிருந்து விரட்டவும் சட்டங்கள் வேறு. அவர்கள் மத்தியில் சிங்களத்தைத் திணிக்கவும் பெருமுயற்சி—இன்று அவர்கள் அரசியல் அனாதைகள்.

இக்கொடுமைகளுக்கு முடிவுகட்டுவோம், கொதித்தெழுங்கள் என்கிறது மகாநாட்டுத் தீர்மானம்.

மலைநாட்டு மக்களைத் தமிழரசு அணியிற் திரட்ட வேண்டுமென்பது மகாநாட்டின் முடிவு. வரவேற்கின்றோம் இந்த மகத்தான முடிவை.

தோட்டத் தமிழர்கள் இழந்த உரிமைகளை மீண்டும் பெறவேண்டும், அதற்காக அவர்களுக்கு ஓர் உறுதியான தலைமை வேண்டும், பட்டம், பதவி, பணம், பவிசுகளுக்குத் தலைவணங்காத தலைமை வேண்டும், அடக்குமுறைக்கு அஞ்சாத தலைமை வேண்டும். உரிமைகளைப் பெற நேர்வழியைக் காட்டும் தலைமை வேண்டும். அத்தகைய தலைமை இன்று தமிழரசுக்கட்சி யொன்றே என்பதை உணர்ந்துவிட்டனர் மலைநாட்டுத் தமிழர்கள்.

கடந்த 14 ஆண்டுகளாக அவர்கள் பிரஜாவுரிமை, வாக்குரிமையற்றுத் தவிக்கின்றனர். எந்தத் தலைமையாலும் அந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. இன்று நடுத்தெருவில் விரட்டப்படும் அபாயம்.

இந்த அபாயத்தைத் தமிழரசு மகாநாடு உணர்ந்தது. தக்க சமயத்தில் வழிகாட்டவும் முன்வந்தது. மலைநாடு முழுவதும் கட்சிக்குப் பரவலான செல்வாக்கு உண்டு. அவர்களை ஸ்தாபன ரீதியாகத் திரட்ட வேண்டியதுதான் அடுத்த நடவடிக்கை.

மலைநாட்டுத் தமிழர்களுக்காகப் போராடுவதாகக் கூறும் சில கட்சிகளும் தலைவர்களும் உண்டு. அவர்களது உரிமைப் போரில் அத்தலைவர்கள் சேர மறுத்தால் திரு. ஜி. ஜி யின் கதிதான் அவர்களுக்கும் ஏற்படும்.

சிங்களத் திணிப்பு கோர தாண்டவம் புரிகிறது. அரசாங்கப் பதவிகளிலிருந்து தமிழர்களை விரட்டுகின்றனர். சம்பள உயர்வைத் தடுக்கின்றனர். சிங்களத்தைத் தொண்டைக்குள் திணிக்க இன்னும் எத்தனையோ உபாயங்கள்! நிர்ப்பந்தங்கள்! மிரட்டல்கள்!

தமிழ் மொழியைத் திட்டமிட்டு நசுக்குகின்றனர். மொழி அழிந்தால் கலை அழியும், கலாச்சாரம் அழியும், பண்பாடு அழியும், இனவளர்ச்சி குன்றும், இறுதியில் இனமே அழியும்.

போராட்டமின்றேல் இந்தஅழிவைத் தடுக்கமுடியாது.

உரிமைகளை என்று பறித்தார்களோ, அன்றே ஆரம்பமாகிவிட்டது உரிமைப் போர். மறைமுகமாகவும் நேரடியாகவும் அது தொடர்ந்து நடைபெறுகிறது. அதில் பல கட்டங்கள்—மறியல், வரிகொடா இயக்கம், பகிஷ்காரம், குறிப்பிட்ட ஒரு சட்டத்தை மீறுதல் முதலிய பல்வேறு உருவங்களில் அறப்போர் கிளம்பலாம்.

மகாநாட்டின் மாபெரும் சாதனை தமிழ் பேசும் மக்களை ஓரணியில் ஐக்கியப்படுத்தியதுதான். அடுத்தது தமிழ் பேசும் இனத்தின் ஐக்கிய போராட்டமாகவே இருக்கும்.

அன்று சத்தியாக்கிரகத்துக்கு நம் மக்களின் ஆதரவு மலைபோல் திரண்டது. அடுத்துவரும் விடுதலைப் போருக்கு அதைவிடப் பன்மடங்கான ஆதரவு கிடைக்கும். வடகிழக்கு மாகாணங்கள் மட்டுமின்றி மலைநாட்டு மக்களும் இனி விடுதலைப் போரில் முன்னணி தாங்குவார்கள். அதற்குத் திட்டமிட்டுள்ளது மன்னார் மகாநாடு.

# தடை பல தாண்டி படை பலம் பெருகுது

# மகாநாட்டில் தலைமையுரை

அரசாங்கத்தையே அதிரவைத்த அறப்போரை இரண்டு மாதங்களுக்கு மேலாக நடத்தி முடித்து, இராணுவ ஆட்சியையும், கட்சித் தடையையும், தொண்டர்கள் சிறைவாசத்தையும், தாண்டி மீண்டும் ஒரு போராட்டத்தின் வாசற்படியில் நிற்கின்ற எமது கட்சியின் 8-வது தேசிய மகாநாட்டிற்கு மறுபடியும் என்னைத் தலைவராகத் தெரிவு செய்த கட்சி உறுப்பினருக்கு விசேஷமாகவும், தமிழ் பேசும் பெருங்குடி மக்கள் அத்தனைபேருக்கும் பொதுவாகவும், எனது மனமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இவ்வாறு மன்னார் மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் தமது தலைமையுரையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

நாம் இன்று கூடி நிற்கின்ற மன்னார் நகரம் தமிழ் பேசும் மக்களின் பழம் பெரும் பதி என்பதை ஞாபகமூட்ட விரும்புகின்றேன்.

சிங்கள பௌத்த கலாச்சாரத்தின் நினைவுச் சின்னங்களை எல்லாம் தேடித் தேடி அகழ்ந்து ஆராய்ந்து பாதுகாத்து வருகின்ற அரசாங்கம், சரித்திரத்திற்கு முற்பட்ட காலந் தொடக்கம் கடல் வாணிபத்தில் முன்னணியில் நின்ற மாதோட்டத்தையும், தேவாரப் புகழ்பெற்ற திருக்கேதீஸ்வரத்தையும், இவற்றைச் சுற்றியுள்ள பிரதேசங்களையும் ஆராய்ந்து எமது பண்பாட்டின் சின்னங்களை வெளிப்படுத்தத் தவறிவிட்டது. ஆயினும் அரைகுறையாக நடைபெற்ற புதைபொருள் ஆராய்ச்சிகளும் பிறநாட்டு வர்த்தகர்கள், யாத்திரீகர்கள் விட்டுச் சென்ற குறிப்புக்களும், தேவாரங்கள் புராணங்களிலிருந்து கிடைக்கும் ஆதாரங்களும் இம் மன்னார் பிரதேசத்தின் தொன்மையைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன.

இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் புனிதமும் புராதனமும் வாய்ந்த தலங்களான திருக்கேதீஸ்வரமும், மடுமாதா ஆலயமும் ஈழத் தமிழ் நாட்டின் இரு விழிகளென விளங்கிக் கொண்டிருப்பது, இம் மன்னார்ப் பதியிலேயே!

உலகப் பிரசித்தி பெற்ற கடல் வணிகர்களான அராபியர்களோடும், இஸ்லாம் [illegible]டும், தொன்று தொட்ட தொடர்பு மன்னாருக்குண்டு. எனவே கிறிஸ்தவ, இஸ்லாமிய, இந்து மார்க்கங்களைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்களின் நீண்ட கால ஒற்றுமைக்கு இப் பிரதேசம் எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

கட்டுக்கரைக் குளத்திலிருந்து நீரைப் பெறும் செழிப்பு மிக்க வயல்களும், கடல் படு செல்வங்களான முத்தும், பவளமும், சிப்பியும், சங்கும், நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கப் போகும் மீன் பிடித் தொழிலும் ஒருங்கே இம் மன்னார்ப் பிரதேசத்திற்கு வளத்தைக் கொடுக்கின்றன. வற்றாத நீருடைய அருவியாற்றை சரியாகப் பயன்படுத்துவதன் மூலமும், மீன்பிடித் தொழிலை நவீன விஞ்ஞான முறையில் விருத்தி செய்வதன் மூலமும் வருங்காலத் தமிழகத்தின் பொருட் களஞ்சியமாக மன்னார் விளங்குமென்பதில் ஐயமில்லை.

(அடுத்த இதழில் முடியும்)

### அமரர் வன்னியசிங்கம் நினைவு நாள்

செப்டம்பர் 17-ம் திகதி கோப்பாய் கோமான் திரு. வன்னியசிங்கம் அமரரான தினம். அன்றிலிருந்து ஒரு வாரம் வரை தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளிலெல்லாம் நினைவு நாள் கொண்டாட்டங்கள் நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணப் பகுதிகளில் நடைபெறும் நினைவு நாள் விழாக்களில் மாஸ்டர் சிவலிங்கம் குழுவினரின் "அமரர் வன்னியசிங்கம் சரிதம்" வில்லுப் பாட்டு நிகழ்ச்சி நடைபெற விருக்குமெனத் தெரிய வருகிறது.

16-9-62-ல் வெளியாகும் 'சுதந்திரன்' அமரர் வன்னியசிங்கத்தின் நினைவு இதழாக வெளிவரும்.

## ஏப்ரல் 17- க்குள் அறப்போர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
மக்கள் பல இன்னல்களுக்குட்பட வேண்டியிருந்தது. அன்று அமுலாக்கப்பட்ட அவசரகாலச் சட்டம் இன்று வரை திரும்பிப் பெறப்படவில்லை. தலைவர்களும், தமிழ் பேசும் மக்களும் எத்தகைய துன்பத்தை அனுபவிக்க நேர்ந்தாலும் உரிமைப் போரை கிஞ்சித்தேனும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை."

1963, ஏப்ரல் மாதம் 17ம் திகதிக்கு முன்னர் தமிழரசுக்கட்சியின் அறப் போராட்டத்தை ஆரம்பிப்பது என்ற தீர்மானத்தைப் பிரேரித்துப் பேசுகையில் தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

இப்பிரேரணையை திரு. அ. அமிர்தலிங்கம் அனுவதித்தார். தீர்மானம் பலத்த கரகோஷங்களுக்கிடையே ஏகமனதாக நிறைவேறியது.

### மலைநாட்டில் கிளைகள்

மலைநாட்டில் வாழும் தமிழ்மக்கள் தங்கள் உரிமைகளைப் படிப்படியாக இழந்து வருகின்றனர். குடியுரிமை, வாக்குரிமை ஆகியவற்றை இழந்து தவிக்கும் அவர்கள் செய்யும் தொழிலுக்கே ஆபத்து வந்துவிட்டது. குடியேற்றம் என்ற பெயராலும், இலங்கையர் மயம் என்ற கொள்கையாலும் மலைநாட்டில் வாழும் மக்கள் உண்ண உணவும், இருக்க இடமும் அற்ற அனாதைகளாக்கப்படவுள்ளனர். தேசிய மொழி என்ற நிலையில் அவர்களுடைய தாய் மொழியாம் தமிழ் மொழிக்கும் ஆபத்து வந்துவிட்டது. இந்நிலை நீடித்தால் நாடற்றவர்கள் என்பது ஊர்ஜிதமாக்கப்பட்டு நடைபிணங்களாக நலியவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும்.

மலையகத்தில் வாழும் தமிழ் மக்களின் இன்னல்களைத் துடைக்க, அன்றிலிருந்து இன்றுவரை உரிமைக் குரல் எழுப்பும் தமிழரசுக் கட்சி தனது கிளைகளை மலைநாட்டில் ஏற்படுத்துவது என்ற தீர்மானத்தை திரு. கே. ஜெயக்கொடி பிரேரித்தார். அதை மூதூர் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம் ஈ எச். முகம்மதலி வழிமொழிந்தார்.

### தீண்டாமை ஒழிப்பு

தமிழ்பேசும் மக்களின் மத்தியில் ஒருபெரும் சாபத்திட்டாக விளங்கி வரும் தீண்டாமை என்னும் பேயை ஒழித்துக்கட்ட தமிழரசுக் கட்சி உடனடி நடவடிக்கைகளில் ஈடுபடும் என்னும் தீர்மானத்தை சாவகச்சேரி உறுப்பினர் திரு. வி. என். நவரெத்தினம் கொண்டுவந்தார். இத்தீர்மானத்தை மட்டக்களப்பு பிரதிநிதி திரு. செ. இராசதுரை அனுவதித்துப் பேசினார்.

### முதலீடு

தமிழ் பேசும் மக்கள் வதியும் பகுதிகளான வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்களின் பொருட்களைமுதலீடு செய்ய வேண்டியது தற்போதைய சூழ்நிலைக்குப் பெரிதும் அத்தியாவசியமாகின்றது.

வடகிழக்கில் முதலீடுகளைப் பெருக்க வேண்டுமென்னும் தீர்மானத்தை கிளிநொச்சி உறுப்பினர் திரு. சிவசிதம்பரம் பிரேரித்தார். இத்தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

### ஊர்வலம்

ஞாயிற்றுக்கிழமை மாலை 4- மணிக்கு மன்னார் பட்டின சபை முன்றிலிலிருந்து தலைவர்களின் ஊர்வலம் ஆரம்பமாகியது. மன்னார் பட்டண வீதிகளிலே தமிழ் வாழ்க, தமிழரசு வெல்க, அறப்போர் தொடுப்போம், வடக்கும் கிழக்கும் மலைநாடும் இணைந்துவிட்டன தொடுத்துவிட்டான் தமிழன் சுதந்திரப் போர் ஆகிய வீரகோஷங்கள் விண்ணை அதிர்த்தன. தலைவர்களுக்கு ஆங்காங்கே மக்கள் மலர் மாலைகள் அணிந்தனர். 6 மணியளவில் ஊர்வலம் ஏகாம்பரம் அரங்கை யடைந்தது.

சனிக்கிழமை இரவும், ஞாயிற்றுக்கிழமை இரவும் மட்டக்களப்பைச் சேர்ந்த நகைச்சுவைக் குமரன் மாஸ்டர் சிவலிங்கம் குழுவினரின் "எதிர்ப்பு நாயனார் புராணம்" என்னும் நகைச்சுவை வில்லுப் பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. ஏகாம்பரம் அரங்கில் திரண்டிருந்த மக்கள் அனைவரும் மாஸ்டரின் நகைச்சுவையில் கட்டுண்டு மயங்கினர்.

சனிக்கிழமை இரவு மகாநாட்டின் சிறப்பு அம்சமாக விளங்கிய முருங்கன் இளைஞர்களின் "தியாகிகள்" நாடகம் நடைபெற்றது. சிறுவர்களாகவிருந்த போதிலும் செம்மையுடன் நடித்து சபையோரை மகிழ்வித்ததோடு மட்டுமல்லாது நாடகம் உணர்ச்சி ஊட்டக்கூடியதாகவும் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னரில் திரண்ட மாபெரும் மக்கள் கூட்டம்

## உணர்ச்சி பெருக்கெடுக்க உரைநிகழ்த்திய தலைவர்கள்

மன்னர் மகாநாட்டின் கடைசி நாளன்று 'ஏகாம்பரம் அரங்'கில் நடை பெற்ற பொதுக் கூட்டத்துக்குபல்லாயிரக் கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர். தமிழரசுக் கட்சியின் மகாநாட்டுத் தீர்மானங்கள் வெளியிடப் பட்டதைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் உணர்ச்சிப் பிரவாகம் கரை புரண்டோடியது. தலைவர்களின் பேச்சுக்களிலிருந்து சில பகுதிகளை இங்கே தருகிறோம்.

வடக்கு கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்களுடன் மலைநாட்டு தமிழ் மக்களும் ஒன்ருக இணைந்து உரிமை கோரிப் போரிடுவார்களே யாஞல், அரசாங்கம் அடி பணிந்து விடும். இதை நாம் விரைவில் எதிர்ப்போமாக. இவ்வாறு "ஏகாம்பரம் அரங்கில்" பேசுகையில் மூதூர் எம். பி. ஜனுப் முகமதலி கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், பேதங்களனைத்தையும் மறந்து செயல்பட வேண்டும். ஒற்றுமையினலும், அன்பினலுமே நமது இலட்சியத்தை அடைய முடியும். இராணுவத்தை ஏவினலும் அடக்கு முறையைக் கட்டவிழ்த்துவிட்டாலும் எதற்கும் அஞ்சாது துணிந்து போரிடுவோமேயாஞல் வெற்றி நிச்சயம்.

### எதிர்க்கவல்ல

"இந்த அரசாங்கம் போய் வேறு எந்த அரசாங்கம் ஏற்பட்டாலும் சரி, சிங்களம் சட்டமும், ஒற்றை ஆட்சித் திட்டமும் இருக்கும் வரை எமக்கு விடுதலை கிடைக்காது." இவ்வாறு செனட்டர் நல்லையா பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில், தமிழரசுக் கட்சி மலைநாட்டில் தனது கிளைகளை அமைக்க முனைவதற்குக் காரணம், அங்குள்ள தொழிற் சங்கங்கள் எதிர்க்கவல்ல அங்கு வாழும் தமிழர்களின் துன்பங்களைத் துடைக்கவே செல்கிறது. அவர்களுடைய உரிமைகளைக் கோரியே தமிழரசுக் கட்சி உதயமாகியது என்பதை யாரும் மறுக்க முடியாது என்றும் கூறினர்.

அடுத்துப் பேசிய ஜனப் என். எம். ஏ. கபூர் மன்னர் வீரத்தின் விளை நிலம். கோழைகளல்ல இங்கு வாழும். மக்கள் சரித்திரம் புகழும் மாந்தை வாழ் மக்கள் எந்த வகையிலும் எதற்கும் சளைத்தவர்களல்ல என்று பேசினர்.

### பொதுச் செயலாளர் நாகநாதன்

உரிமைகளைப் பறிகொடுத்த நாங்கள் சத்தியாக்கிரகத்தின் மூலம் உரிமை கோரிப் போரிட்டோம். அதை அடக்க ராணுவத்தை ஏவிவிட்டனர் ஆட்சியாளர்கள். ஆனல் எங்களை அடக்க முடியவேயில்லை. எம்மை இத்தகைய அடக்கு முறைகளால் அடக்கிவிட முடியாது என்பதை ஆட்சியாளர் நன்கறிவர். இவ்வாறு டாக்டர் நாகநாதன் தமதுரையில் கூறினர்.

### முஸ்லிம் அரசு

ஜனப் மசூர் மௌலான பேசுகையில், தமிழரசுக் கட்சி இலங்கையில் சிறுபான்மை இனத்தினர் கூடி வாழக் கூடிய ஒரு ஆட்சி அமைப்பை—சமஷ்டி முறையை—அமுலாக்கத் துடிக்கிறது. சமஷ்டி அமைப்பில் முஸ்லிம் அரசும் இடம் பெறும். இக் குறிக்கோள் ஈடேற நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

இன்று கேவலம் சில ரூபாய்கள் சம்பள உயர்ச்சி பெற மானத்தை விற்றுச் சிலர் சிங்களம் படிக்கின்றனர். சிங்களம் படித்தால் மட்டும் பதவி உயர்ந்து விடுமா? அருணசலத்துக்குக் கொடுக்கும் வேலையை நிச்சயம் அப்புகாமிதான் அபகரிப்பான் என்று கூறினர்.

### கட்சி என்ன செய்தது?

அடுத்துப் பேசிய மட்டக் களப்பு பிரதிநிதி செ. இராசதுரை அவர்கள் பேசுகையில் "தமிழரசுக் கட்சி இதுவரை என்ன சாதித்தது என்று கேட்கிறார்கள். பல்வேறு மாகாணப் பெயர்களைக்கொண்டு பிரித்துவைக்கப்பட்டுச் சிதறிய தமிழ் பேசும் மக்களை ஒருமைப்படுத்தியது தமிழரசுக் கட்சியின் முதல் வேலையாகும்.

மதத்தால் வேறுபடினும், பேசும் மொழியால் நாம் ஒருவரே என்பதைக் காட்டியது தமிழரசுக் கட்சியே. சாதிகள் பல சொல்லி, செய்யும் தொழில் கொண்டு எம்மைப் பிரித்த பேதங்களைப் பறக்கடித்தது தமிழரசுக் கட்சி, என்று கூறினர்.

ஒற்றுமையின் அவசியத்தை யிட்டு திருமலையைச் சேர்ந்த திரு. வீரசுப்பிரமணியம் பேசினர்.

### அறப்போரணித் தலைவர்

அடுத்துப் பேசிய திருக்கோயில அறப்போர் அணித் தலைவர் திரு. ஆர். டபிள்யூ. வி. அரியநாயகம், தமிழ் பேசும் மக்கள் இன்று அனுபவித்து வரும் துன்பங்களைத் துடைத்தெறியப் போராட்ட அறை கூவல் விடும் தமிழரசுக் கட்சியின் ஆணைக்குட்பட்டு போராட வாரீர் வாரீர் என்றழைத்தார்.

இறுதியில் பேசிய வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் அரசாங்கம் எத்தகைய அடக்கு முறைகளைக் கையாண்ட போதிலும், சூழ்ச்சி வலை வீசி, சூதுமதி கொண்டு எமைச்சாடிய போதிலும், எமது போராட்டம் ஓயாது உரிமைக்காகப் போரிட்ட எந்த இனமும் வீழ்ச்சியுற்றது கிடையாது.

மன்னரைச் சேர்ந்த திரு. வி- கயிலாயபிள்ளை நன்றியுரை கூறினர்.

இடையிடையே திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் தேசிய கீதம் பாடினர்.




1. மன்னர் மகாநாட்டில் "ஏகாம்பரம் அரங்கில்" தலைமையுரை நிகழ்த்தும் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம்.
2. மாதர் மகாநாட்டில் சொற்பொழிவாற்றும் திருமதி. அருணசலம்.
3. தொழிலாளர் மகாநாட்டில் பேசிய திரு. அஸீஸ்.
4. வரவேற்புரை வழங்கும் பட்டினசபைத் தலைவர் திரு. இ. அ. பொன்னுதுரை.
5, தலைவர்கள் ஊர்வலமாகச் செல்கின்றனர்,

## பீலிக்ஸ்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரும் குருணக்கல் எம். பி. யுமான திரு. ஜயபதிரனவுக்கும் மந்திரிசபையில் இடம் பிடித்துக்கொடுக்க முயற்சிசெய்யலாம். அதே சமயத்தில் அரசாங்கப் பாராளுமன்றக் குழுவினர் உள்ள புரட்சிக் கோஷ்டி (அரிசிவெட்டை எதிர்த்தவர்கள்) தங்களுக்கும் மந்திரி சபையில் இடம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்யலாம். அக்கோஷ்டியைத் திரு. சி. பி. டிசில்வா கோஷ்டி ஆதரிக்கலாம்"

### மற்ருெரு தலையிடி

இதற்கிடையே அரசாங்கத்திற்கு மற்ருெரு தலையிடி ஏற்பட்டுள்ளது. அரிசி வெட்டை வாபஸ் வாங்கியதால்வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பட்ட பற்ருக் குறையை எப்படிச் சரிக்கட்டுவது என்பது தான் அந்தத்தலையிடி.

புதிய வழியொன்றினைக் கண்டுபிடிக்க திறைசேரியில் கூடிய இரண்டொரு மகாநாடும் எந்த முடிவுமின்றி கலைந்து போய்விட்டதாக அறியப்படுகிறது.

அப்பாக்குட்டி அம்மானையும்
காலகண்டரையும்
அடுத்த வாரம் சந்திக்கலாம்

இத்தகைய சிறப்பு வாய்ந்த மகாநாட்டை எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் திறம்பட நடத்திமுடித்த மன்னர் வரவேற்பு சபையினரை புகழ்ந்து பாராட்டாதவரே இல்லை எனலாம்.

## மன்னர் கண்ட...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)


தமது வரவேற்புரையை நிகழ்த்தினர். தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் தமது தலைமைப் பேருரையைப் பேசிமுடித்தார்.

புதிய அமைப்பு விதிகளுக்கு அமைவாக உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெற்றது. பொதுச் செயலாலர் பதவிக்கு டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் அவர்களைப் பிரேரித்து அனுவதித்தனர். ஏகமனதான தீர்மானத்துடன் நாகநாதன் அவர்களே பொதுச் செயலாளராஞர்.

துணைச் செயலாளர்களுக்காக மூவர் தெரிவு செய்யப்படவேண்டியிருந்தது. திருவாளர்கள் எஸ். கதிரவேலுப்பிள்ளை, வி. கயிலாயபிள்ளை, சாம் தம்பிமுத்து ஆகியவர்களின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டன. துணைச் செயலாளர்களுள் ஒருவராகத்தான் மட்டக்களப்பு பிரதிநிதி திரு. செ. இராசதுரை அவர்களுடைய பெயர் பிரேரிக்கப்பட்டது. அப்பதவி வேண்டாம் என்று திரு. இராசதுரை அவர்கள் மறுத்து விட்டார். இதையே ஒரு பெரிய சம்பவமாகத் திரித்துக்கூறி தனது துரோக வேலைகளுக்கு அச்சாரம் சேர்க்க முனைந்தது ஒரு தமிழ்த் தினசரி.

பொருளாளர்களாகமுன்பு கடமைபார்த்தவர்களான திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம் அவர்களும், திரு வி. ஏ. கந்தையா அவர்களும் மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். உபதலைவர்களாக திருமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு என். ஆர். இராசவரோதயமும், செனட்டர் ஜி. நல்லையாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

சி. சி. சி. புகையிலை பசளைக் கலவைகள்



கொழும்பு கொமர்ஷியல் கொம்பனி லிமிட்டெட்,
பசளைப்பகுதி.
அக்லண்ட் ஹவுஸ், யூனியன் பிளேஸ், கொழும்பு- 2. போன்: 7935.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# அந்த ஆலமரம்

"தீவான்"

**அது ஒரு சடைத்த ஆலமரம்.**
**ஊரில் உள்ள எல்லோருக்கும் அந்த ஆலமரம் தான் கதி.**
**அதைப் பற்றி பலரும் பலவிதமாகக் கதைத்தனர்.**
**அந்த ஆலமரம் தான் இவ்வாரச் சிறுகதைக்கும் ஆதாரமாக விளங்குகிறது.**

வரம்பழிந்து கிடக்கும் வயல்களை, வரப்போகும் மாரியை நினைவில் வைத்து இப்போதே பண்படுத்தத் தொடங்கியிருந்தனர், வீரா மலைப்பகுதி உழவர்கள்.

அவர்களுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு, அந்த வெட்ட வெளியில் குந்திக் கொண்டு இருக்கிறது ஒரு கோயில். அதற்கு நூறுயார் தள்ளி, உழவர்களின் முதுகையும், கோயிலின் முதுகையும் மேல் விழியால் பார்க்கும் பாவனையில் ஒரு சடைத்த ஆலமரம். அந்த ஆலமரத்தை உராய்ந்தபடி ஊர்மனையை நோக்கிச் செல்லும் மக்கிரோட்டின் தோளில் கைபோடும் தோரணையில் ஓடும் ஓர் ஒழுங்கை. அந்த ஒழுங்கையிலே, மாலை நாலு மணியானதும் கடகமும் கத்தியுமாகப் போகும் பொடியன்களும் பொடிச்சிகளும் ஏராளம், ஏராளம்! எல்லோருக்கும் அந்த ஆலமரந்தான் கதி. புல்லை நிலங் காணுக் காலங்களில் அந்த ஆலமரமே ஆடு வளர்க்கும் அத்தனை குடிகளுக்கும் தஞ்சம்.

ஒருவன் கொடுவாக் கத்தியோடு மரத்திலே ஏறி குழைகளைச் சீவிவிட, இன்னொருவன் கீழே நின்று அவற்றைக் கடகத்திலே அமத்தி அமத்தி வைக்க, அதைப் பார்த்துவிட்டு இத்தனை நேரமும் புல்லென்று நிலத்தைக் கிருந்திக்கொண்டிருந்த "ஊரா வீட்டு" ஆடுகளும் குட்டிகளும் "மேமே" என்றுகத்திக்கொண்டு அங்கு ஓடிவந்து குழைக் கடகத்தைப் பதம்பார்க்க, "சூய் சூய்" என்று அவற்றைக் கீழே நிற்பவன் அடித்து விரட்டியும் தோல்விகாண— ஒரே வேடிக்கை!

இன்றைக்கும் அந்த ஆலமரத்தின்மேல் யாரோ ஒரு பொடியன் கொடுக்குக் கட்டும் கொடுவாக் கத்தியுமாக நின்றுகொண்டு "சங்கரிப்பு" வேலையில் ஈடுபட்டுக்கொண்டுதான் இருந்தான். கீழே ஒரு சுள்ளிப் பயல் வெறும் மேலோடு, ஆனால் ஒருவித அதிகாரத்தனத்தைத் தனதாக்கிக் கொண்டு, கீழே விழும் குழைகளைக் கடகத்துள் அமுக்குவதும் மேலே நிற்பவனைப் பார்ப்பதுமாகநின்றுகொண்டிருந்தான்.

திடீரென்று எங்கிருந்தோ இரண்டுகால் பாய்ச்சலில் அங்கு வந்த ஒரு கொம்பன் ஆடு, கீழே நின்ற அந்தச் சுள்ளியின் இயலாத்தன்மையை அறிந்ததுபோல் தன் கொம்பால் செல்லமாக அவன் சள்ளையில் தள்ளி விழுத்தியதோடு, அவன் "அம்மா" என்று அலறவே அது இன்னும் கொஞ்சம் முன்னேறி தன்னிரு கால்களையும் உயர்த்தி அவனைப் போருக்கழைப்பதுபோல் வெருட்டிவிட்டு, குழைக் கடகத்துள் தலையைப் புகுத்தி நறும்பத் தொடங்கிற்று.

ஆட்டுக்கு இலக்கானவன் "அம்மா" என்று அலறியதோடு நிற்பாட்டவில்லை. வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்தோடிப்போய் ஆலமரத்தின் அப்பக்கமாய் ஒளிந்து தலையைமட்டும் காட்டி குழையை "வாங்கு வாங்"கென்று வாங்கிக் கொண்டிருந்த ஆட்டைப் பார்த்தபடி, "டேய் இறங்கடா மூதேவி, ஆடு குழையைத் தின்னுது ஐயோ இறங்கடா" என்று ஆட்டோடு காட்டமுடியாத ஆணவத்தை ஆலமரத்தின் மேல் நின்றவனேடு காட்டிக் குழறினான்.

"பொறு தம்பி இறங்கிறன்" -கீழே நின்றவனுக்கு அடங்கிய குரலில் பதிலளித்த "மேலவ"ன் இறங்குவதற்கு ஆயத்தமானான். ஒரு கிளையிலிருந்து அடுத்த கிளைக்குத் தாவினான். ஆனால் அடுத்தவினாடி "வீல்" என்ற அலறலோடு" "தொப்" பென்ற ஒரு சத்தம்!

மேலே நின்றவன் இறங்கவில்லை.

தலைகுப்புற விழுந்து கிடந்தான்! இரத்தம் கொப்பளித்தது.

வயல் வேலையை அப்படியே விட்டு விட்டு அந்த ஆலமரத்தை நோக்கி ஓடி வந்தனர் வயலில் நின்ற அத்தனை பேரும்.

"ஐயோ, ஆரோ ஒரு பொடியன் ஆலமரத்திலிருந்து தலைகுப்புற விழுந்திற்று" என்று கத்திக்கொண்டு ஓடிவந்த அத்தனை பேரும், விழுந்துகிடந்தவனை அண்மியதும், "ஐயோ இது சின்னயற்ற வீட்டில வேலைக்கு நிக்கிற வடக்கத்தே பொடி. ஐயோ பாவம்!" என்றவர்களாய் விழுந்து கிடந்தவனை வெறிக்கப் பார்த்தபடி சுற்றிச் சூழ்ந்தனர்.

அங்கு நின்ற சுள்ளிப்பயல் தலைதெறிக்க ஓடுவது தூரத்தே தெரிந்தது. நடந்ததைச் சொல்லி வீட்டுக்காரரைக் கூட்டிவரப் போலும்.

"அம்மா அம்மா"-விழுந்து கிடந்த பையனின் வாய் மிக ஈனமான ஒலிசெய்தது.

யாரோ ஒருவர் நிலைமையை அறியாது, அவனைத் தூக்கி இருப்பாட்டப் பார்த்தார். ஆனால், "ஐயோ நான் சாகப் போகிறேன் சாகப் போகிறேன்" என்று அவனிடமிருந்து புறப்பட்ட அவல ஒலி அவரைக் கிலி கொள்ளச் செய்தது. விட்டுவிட்டு தூரவிலகி நின்றார். வேறொரு 'நெஞ்சுறுதி' படைத்தவர் அவனருகே சென்று பட்ட காயங்களை ஆராய—முற்பட்டிருந்தார்.

இதற்கிடையில் அங்கு நின்றவர்கள் எல்லோருமாக ஒரு பக்கம் திரண்டு, "இந்தப் பொடி [illegible] ஒருத்தரையும் காணேல் சொன்னனான்."— ஒருவர் தனக்கு எட்டியிருந்த அந்த மர ஆராய்ச்சியைப் பற்றி அவிழ்க்கத் தொடங்கினார்.

"அதெண்டா உண்மை தான்"—தனக்கும் அந்த மர அறிவு உண்டென்பதைக் காட்ட இன்னொருவர் ஒத்துப் பாடினார். "இல்லாட்டி வரியா வரியம் ஒரொரு ஆளா பலியெடுக்கிறததுக்கு காரணமென்ன?"

"இல்லாமல், போன வரியம் முத்தற்ற பேரன், மூண்டாம் வரியம் சின்னற்ற மகன்............சும்மா விளையாட்டே? இதில் நிக்கிறது பெரிய சாமான்"

"என்ன முனியா?......அல்லாட்டி மாடனே?"

"சும்மா பேய்க் கதை கதைக்காமல் போ மணியம், முனிக்கும் மாடனுக்கும் இந்த அலுவல் ஏலுமே?"

தெரிந்தவர் குதிக்க, தெரியாதவர் தெரிந்து கொள்ள இரக்கிறார்.

பிறகு தெரிந்தவர் சுற்றும் முற்றும் தன்னையே ஆவலாகப் பார்த்து நிற்கும் "தாஸர்"களை ஒருமுறை பெருமிதத்தோடு நோக்கிவிட்டு, அணு ஆயுதங்கள் பரிமாறும் ரகசிய பாவனையில் தெரியாதவர் காதில், ஆனால் எல்லோருக்கும் தெரியும்படியாகக் குசுகுசுக்கிறார் "சுடலை வயிரவர்தான்!"

"ஓகோ அப்படியா சங்கதி" என்ற விதத்தில் அங்கு நின்றவர்கள் ரகசியத்தை அறிந்த திகிலோடு தலையாட்டும்போதுதான், "சீ, நீங்களும் ஒரு ஆக்களா, மரங்கள் மாதிரி நிக்கிறீங்களே இந்தப்பொடி இப்படிக் கிடக்க" என்ற குரல் ஓங்கி அறைந்தது.

"ஆராய்ச்சியாளர்கள்" அறைபட்டதுபோல் திரும்பிப் பார்த்தனர். அங்கே விழுந்துகிடந்த பையனருகே நின்று அவர்களைப் பார்த்து அப்படிப் பேசியவர், அந்தப் பையன் வேலைசெய்யும் வீட்டுக்காரரல்ல. யாரோ அப்பக்கம்போன உண்மை மனிதப் பிறவியாக இருக்க வேண்டும். பையனது வீட்டுக்காரர் வந்ததற்கோ அல்லது வருவதற்கோ வான அடையாளங்கள் அங்கே தென்படுவதாக இல்லை. "யாரோவடக்கத்தேப் பயல் செத்தாலென்ன விட்டாலென்ன" என்ற அலட்சியமோ என்னவோ !

"ஏய் வாருங்கப்பா. இந்தப் பொடியனை கார்க்கார மணியம் வீட்டுக்குக் கொண்டுபோவோம். அவன்ர காரிலேயாவது ஏத்தி ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவம்...... இன்னும் கொஞ்சம் சுணங்கினல் உயிருக்கே ஆபத்து...வாருங்கடாப்பா......ம்"— புதிதாக அங்கு வந்த அந்த மனிதர் தனக்கு உதவிக்கு அங்கு நின்றவரை அழைத்துக் கொண்டே பையனைத் தூக்கித் தோளில் போடும் முயற்சியில் ஈடுபட்டார், ஒரு சிலர் சொல்லுக்கு செவிசாய்த்து முன்னேறினர். மற்றவரெல்லாம் "ஊரா வீட்டு வம்பு நமக்கெதுக்கு" என்ற விதத்தில் தப்பினேம் பிழைத்தோம் என்ற மாதிரி அங்கிருந்து கழன்றனர். புத்திசாலிகள்!

விபத்துக்குள்ளான அந்த 'வேலைகாரப்பொடி' அங்கிருந்து அகற்றப்பட்டு கார் மூலம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அதற்கப்புறந்தான் தூது போன சுள்ளிப்பயல் கூடவர, எஜமான் சின்னையர் ஆலமரத்தடிக்கு வந்து சேர்ந்தார். அங்கு ஒரு வேடிக்கை நடந்துகொண்டிருந்தது. விபத்தைப் பார்க்க அங்கு வந்த பெண்ணொருத்தி, ஆலின் கீழ் கொட்டப்பட்டிருந்த வெறும் இரத்தத்தை பார்த்ததுமே மயக்கம் போட்டு விழுந்து விட்டாளாம்! அவளைச் சுற்றிக்கொண்டு கொஞ்சப் பெண்கள் கூட்டம், ஊது ஊது என்று ஊதி முந்தானையால் வீசிக்கொண்டிருந்தது.

சின்னையர் அவர்களைக் கண்ட உற்சாகத்தில்,"அந்த நாய்ப் பயலுக்கு இந்த ஆலமரத்துக்கு போகவேணும் வேணும் எண்டு எத்தனை தரம் சொன்னனான்" என்று போதாதற்கு விழுந்தவனையே திட்டித் தீர்த்துவிட்டு, 'ஆஸ்பத்திரிக்குப் போன காருக்கு தொகை காசு வேணுமே" என்று முணு முணுத்தவராய் ஆஸ்பத்திரிக்கு அங்கிருந்து எத்தனை கல் தொலை என்ற கணக்கில் ஈடுபட்டவராய், கார் சென்ற வழியில் நடக்கத் தொடங்கினார்.

ஆலிலிருந்துவிழுந்த அந்த வடக்கத்தேபொடி செத்துப் போய்விட்டது. ஐந்து நாளாக ஆஸ்பத்திரியில் கிடந்து இழுத்துவிட்டு இன்றைக்குத் தான் அதன் உயிர் அடங்கியிருந்தது. விழுந்த உடனேயே இரத்தம் அதிகம் கொட்ட முந்தி பொடியனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருந்தால் அவன் ஒருவேளை தப்பியிருப்பானும். டாக்குத்தர் சொன்னார். இனி என்ன சொல்லி என்ன பயன்? அவன் செத்துப்போய்விட்டான். சவம் சின்னையர் வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டது. கொண்டு வந்து கையோடயே சின்னப் பாடையொன்று கட்டி, இரண்டு மேளத்தைப் பிடித்து சவத்தைச் சுடலைக்கு எடுத்துச் செல்ல ஆயத்தமாயிற்று.

பாடை படலையைவிட்டு வெளியே வந்தது.

அந்த ஆலமரத்து ஒழுங்கையால் போனல் சுடலையைச் சீக்கிரம் அடைந்துவிடலாம். அல்லாவிட்டால் ரோட்டைச் சுற்றித்தான் போகவேண்டும்.

சுருக்கத்தை விரும்பிய பாடை, அந்த ஆலமரத்து ஒழுங்கை வழியே வந்தது. பொழுதுபடும் நேரம். ஆலருகே பாடை வந்ததும் ஒரு அதிசயம் காத்திருந்தது. அந்த ஆலின் கீழ் ஒரு கொட்டில் கோயில் உருவில் முளைத்திருந்தது! அதற்குள்ளே ஏதோ ஒன்று! அதற்குள் தொங்கிய ஒரு கண்ணுடி விளக்கும் திடீரென ஒளியேற்றப்பட்டு மின்னியது. அதற்குள் இருந்து வெளியே வந்தவர் அன்று ஆலடியில்

(11-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி— அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

**சுதந்திரன் அச்சகம்,**
தபால் பெட்டி 1183.
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு-12.
தந்தி : சுதந்திரன் போன் : 3411

**கலப்பற்ற உயர்தர அலுமினியம்**
**மங்காத பிரகாசம்**
**நீடிய உழைப்பு**
இவைகளுக்கு

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

**டொலர்**
**அலுமினியப் பாத்திரங்கள்**
**டொலர் கோப்ரேசன்,**
14, டாம் வீதி,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தடுப்புக் காவலில் நாம்' 7.



## அன்பு மகள் அன்பரசிக்கு,

**புதுமை லோலன்**

தடுப்புக் காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமகம.
24—4—1961.

என் அருமை மகள்
அன்பரசிக்கு,

இன்று எங்கள் உடுப்புகள் சலவைசெய்து தரும் ஒழுங்குகள் செய்யப்பட்டன. நாமே எமது உடுப்பில், நாம் தங்கியுள்ள அறை இலக்கத்தையிட்டு, அறைவாயிலில் விட்டுவிட்டால் சலவை செய்யப்போகும்.

சாப்பிடுவதும், உறங்குவதும், பேசுவதும் எவ்வளவு நேரம் செய்ய முடியும்? உடலுக்கு எந்த விதப் பயிற்சியும் கிடையாதே. அதனுலின்று மாலை சிலர் மேன்மாடியின் ஒரு நுனியிலிருந்து மறுநுனிவரை நடந்துபோவதும் வருவதுமாயிருந்தனர். சிலர் ஓடக்கூடச் செய்தனர். உண்பது மட்டும் உடல் வளர்ச்சிக்கோ, சுகத்திற்கோ போதுமா? எத்தனை மணித்தியாலங்கள்—இல்லை, நாடகள்—மேன்மாடியே சாஸ்வதமென இருக்கமுடியும்? அதனுல் சிலர் நோய்வாய்ப்படவே செய்கின்றனர். இராணுவப் பகுதி 'டாக்டர்' ஒருவர் பகல் பத்துமணியளவில் வந்து நோயுள்ளோரைப் பார்வையிடுவரென முன்பு எழுதினேனல்லவா? இப்போது டாக்டருக்கு வேலை கூட. சிரணிக்காது கஷ்டமுறுபவர், பல் வியாதியினுல் கஷ்டமடைபவர், ...இப்படியாகப் பலவித நோய்களும் கொண்டு கஷ்டப்படுவதைக் காண வேதனையாகவே உள்ளது.

இவ் வருத்தங்களுக்கு எல்லாம் காரணம் என்ன? சிலருக்கு இங்கே கொடுக்கப்படும் உணவு ஒத்துக்கொள்ளாமை ஒரு காரணம். வெயில் படாத உடலாக, வேலையெதுவுமற்ற உடலாகச் சோம்பியிருப்பது இன்னேர் காரணம். இங்குள்ள தண்ணீர் மிகத்தடிப்பானது. ஏதோ ஒரு உலோகக்கலவை கொண்ட நீர் போலுள்ளது. சில நேரம் குழாய் மூலம் வரும் நீரைப் பார்த்தால் மஞ்சள் நிறமாகவே உள்ளது. தண்ணீரும் வருத்தம் உண்டாவதற்கு ஒரு காரணமாயிருக்கலாம். இவற்றையெல்லாம்விட உள்ளத்தில் என்ன என்ன வேதனைகளோ!!

தடுப்புக் காவலில் உள்ள சிலர் வறுமையெனும் கோரப்பிடியுள் சிக்கியவர்கள். அவர்களது மனைவி மக்கள் 'என்ன செய்கிருர்களோ' என அவர்கள் எண்ணத்தானே செய்வர்? அன்றன்று உழைத்து சீவியம் நடத்தும் தன்மை கொண்டவர்கள்......உதவி யதிகம் இல்லாதவர்கள்......அவர்களிங்கே சிந்தனை வயப்பட்டுத் தானேயிருப்பர்?

இதே நிலையில் கவலையெதுவுமற்று கூத்தும் கும்மாளமுமாக— தடுப்புக் காவல் வாழ்வில் மகிழ்வு கண்டு திரிபவர்களும் இருக்கத்தான செய்கின்றுர்கள். தடுப்புக் காவல் நிலையத்தில் ஒரு சமூகமே இருக்கின்றது. பல வகைப்பட்ட போக்குக் கொண்டவர்களையும் காண்கின்றேன். இங்கே தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களுமுள்ளனர். சத்தியாக்கிரகத்தை மட்டும் ஆதரித்தோரும் உள்ளனர்.

என் மகளாகிய உனக்கு நான் எதையும் மறைப்பேனு? முடியுமா?

தமிழரசு இயக்கத்தில் நீங்காத பற்றுக் கொண்ட இலட்சிய வாதிகளையும் காண்கின்றேன். ஏதாவது தேர்தலில் அபேட்சகராகி, வாக்குச் சேகரிக்க இந்தத் தடுப்புக் காவல் தியாகிப் பட்டம் தராதா என ஏங்கும் போலிகளையும் காண்கின்றேன். பலருடனும் கதைக்கின்றேன், கலந்துரையாடுகிறேன். அவர்களது பேச்சே அவர்களை உணர்த்துகின்றது.

—"பானையை வாங்கும் போது சுண்டிப் பார்க்கின்ருேம். சுண்டும்போது ஏற்படும் ஒலி நாதம் கொண்டு நல்ல பானையா? ஒட்டைப் பானையா? என்பதை யறியலாமல்லவா? அதே போன்று ஒவ்வொருவரது நாக்கும் அவர்களையுணர்த்தப் போதுமானது. நாக்குத் தரும் வார்த்தைகள், அவர்களது தன்மையைப் பட்டெனத் தரப் போதுமானது"—

மகளே! ஒன்றை மறந்து விடக் கூடாது. சில தலைவர்களை விடச் சாதாரண தொண்டர்களிடம் இலட்சியப் பற்றை அதிகம் காண முடிகின்றது. யான் எண்ணுகின்றேன், சில தலைவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் ஆகாது விட்டால், சத்தியாக்கிரக இயக்கத்தின் பக்கம் கூடத் தலை வைத்துப் படுத்திருக்க மாட்டார்கள்? எம். பி. என்ற எழுத்துக்கள் மட்டுமே அறப் போர்ப் பக்கம் அவர்களை அழைத்து வந்திருக்க வேண்டும்;...இல்லை, இழுத்து வந்திருக்க வேண்டும்.

நாட்டுப் பற்று, மொழிப் பற்று, தியாக எண்ணம் நிறையக் கொண்ட தலைவர்களில்லாமலில்லை. ஆனுல் போலிகளும் இருக்கத்தான் செய்கின்றனர்.

ஒரு சமூகத்தில் பலவகைப்பட்ட எண்ண இயல்புகள் கொண்ட மக்களிருப்பரல்லவா? அதே போன்று எமது தடுப்புக் காவல் முகாமிலும் இருக்கத்தான் செய்வர். அது இயல்பு தானே! ஏன்- ஒரு அரசியல் கட்சியிலும் கூட இப்படிப் பல வகைப்பட்ட தன்மைகள் கொண்டவர்களைச் சந்திக்கலாம். இப்படியான பல வகை போக்குக் கொண்டவர்களை யெல்லாம் ஒரே குடும்பமாக்குவதே கொள்கை—அக் கொள்கையில் வைத்த அசையாத நம்பிக்கையே கட்சிப் பற்று—அப்பற்றுக் காரணமாகத் தன்னல மறுப்புச் செய்பவனே ஒரு நல்ல பாதையால் செல்லும் அறப் போர் வீரன் ஆவான்.

தடுப்புக் காவலில் உள்ளவர்கள் யாவரும் ஓரளவில் தியாகமே செய்கின்றனர்; இதையான் மறுக்கவில்லை. ஆனுல், இத் தடுப்புக் காவலைத் தமது தன்னல மறுப்பாக...தொண்டாகக் கருதா விட்டால்...அத் தியாகம் மாசடைகின்றது; வலுவற்றதாகிறது—தூய்மையிழந்தவை தியாகம் ஆவதில்லை!

இணைப்பாட்சியே ஈழத்தின் துயர் துடைக்குமென நம்பும் தமிழரசுக் கட்சியினரும் இங்கிருக்கின்ருேம். தமிழ் மொழி உரிமையே தேவை-அது கிடைத்தால் போதுமானது — அதற்காக அறப்போர்க்களம் வந்தவர்களும் இருக்கிருர்கள். அதாவது தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை ஏற்காது, மொழிக்காக மட்டுமே போராடி வந்தவர்கள் அவர்கள். இப்படி இருவகைப்பட்ட எண்ணங்கொண்ட தோழர்களுடன் உலாவுவதால் சிந்தனை இன்னும் விரிகின்றது. [illegible] தேடியலைகின்றன.

எது எப்படியானுலும், எமது கன்னித் தமிழ் மொழி உரிய இடத்தில் வைத்துக் கொள்ளவேண்டுமென்பதில் எல்லோரும் ஒன்றுபடுகின்ருேம்.

இந்த நிலை எமது தமிழ் பேசும் மக்களிடையிலும் உள்ள நிலைதானே!

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாக-இலட்சியத்தை முன்வைத்து நடைபோடும் தமிழரசுக் கட்சி...தாண்டி வந்த மேடுபள்ளங்கள், அது சாதித்துள்ள காரியங்களை எண்ணும்போது உருண்டோடி வருகின்றது ஆனந்த வெள்ளம்!

இன எழுச்சிகொண்ட கட்சிகள் விடுதலை எண்ணம் கொண்ட தூதுவர்களை உறுப்பினராகக் கொண்டவையாயிருக்க வேண்டும். புதிய புதிய தியாகிகள் பலரைப் படைக்கும் வன்மை இக்கட்சிக்கே உண்டு. அதே நேரத்தில் நமது இலட்சியத்தை வெறுக்கும் மாற்ருர் மன மருட்சிகொண்டு ஓடாது, நமது பாசறை நாடி வரக் கூடியதாக கட்சி பெருந் தன்மையுடன் நடந்து கொள்ளவேண்டும்.

இந்த மாபெரும் பணியில் தமிழரசுக் கட்சி தன்னுலான அளவுக்கும் மேலாகப் பணியாற்றியிருப்பதை, கட்சி காணும் புது முகங்கள் மூலம் காண முடிகின்றது. அந்த இலட்சியப் பற்றுக் கொண்ட பலரின் கூட்டே நமக்கு இன்பம்! பணி, பலன் தருகின்றது என்பதே நமக்குப் பெருமை! தமிழரசு இயக்கத்தின் இலட்சியச் செம்மல்கள் ஆயிரம் ஆயிரமாக அணி திரண்ட மாட்சியை அறப்போர்க்காலம் உணர்த்திற்று! வேறு இலட்சியம் கொண்டவர்களும், 'தமிழ் தமிழ்' எனக் குரலிட்டு இதே அறப்போர் வீரருடன் கைகோத்து ஏறு நடைபோட்ட காட்சியையும் அறப்போர் உணர்த்திற்று! இலட்சியப் பாதையில் மாற்ருரும் கூடும் காட்சியை வேறு எக்கட்சியும் நடாத்திக் காட்ட முடியாது; நடாத்திக் காட்டியதும் கிடையாதே!

நாம் தமிழ்பேசுமினம் என்ற உணர்வுடன், சிங்கள மக்களின் மனம் மாறுமளவுக்கு அறப்போர் வீரராக மாறும் தன்மையே எமதியக்கக் குறிக்கோளாகும். இந்த நன்னேக்கமே எம்மை வளர்த்தது. எதுவரினும் அஞ்சோம், துஞ்சோம், கோழையாகோம என்ற மனப்பண்புடன் இயக்கத்தை இலட்சிய வீரரின் கூடாரமாக்கி...அதன் மூலம் இன்றைய வகுப்புவாத ஆட்சியை அசைப்பவர்கள்யாவர்? ஆட்சிபீடம் அடக்குமுறைப் பாணமில்லாது ஆள முடியாத சூழ்நிலையை யுண்டாக்கியவர்கள் எவர்கள்?

கத்தி, கோடரி, குண்டு, ஆட்சிப் பலம் எதுவுமேயற்ற இயக்கம் வைத்திருப்பது ஒன்றே ஒன்று...அதுவே அறவழி ... அதன் மறுபெயரே சத்தியவழி...அவ்வழியில் எமக்கு உதவுவதே அஹிம்சை...எதையும் தாங்கும் வன்மையுண்டாக்க எங்களிடம் இருப்பது தன்னல மறுப்பு மட்டுமே! அறத்தின் முன் இமயமலை கூடப் பணியுமாமே! அகிம்சையின்முன், சூரியன் உதிக்கும் பிரதேசமெங்கும் கட்டியாண்ட வெள்ளையர் கூடப் பணிந்தனரே! ஆகவே ஆண்டுபல சென்ருலும் இலட்சியமே எம்மை உயர்வுகாணும் பாதைக்கு இட்டுச் செல்ல முடியும் என்பதை மிக அதிகயாக நம்புகின்றவன் நான். எல்லோரும் இந்நிலையில்ஆக வேண்டுமென்றே ஆசைப்படுகின்றேன் மகளே ஆசைப்படுகின்றேன்—

ஈழத்து அரசியலில் யான் மேற்குறிப்பிட்டது போல இரண்டுவகை மக்களை யதிகம் சந்திக்கலாம்.

ஒன்று: இணைப்பாட்சி மூலம் பிரச்சினை தீரும் என்ற தமிழரசு இயக்கத்தினர்.

இரண்டு: இணைப்பாட்சி வேண்டாம். தமிழ் உரிமை கிட்டினுல் போதும் என்பவர்கள்.

இந்த இரு வகையினரையுமவிட இன்னேர் செந்நிறக்கூடம் - குறைந்த மக்களாதரவு கொண்ட கூட்டமொன்றும் உள்ளது. அக் கூட்டத்தினுள்ளும் இரண்டு பிரிவினர். இவர்களுக்கு மொழியும் வேண்டாம் விழியும் வேண்டாம். சோறு மட்டுமே வேண்டும் என்று கூறும் சோற்றுத் துருத்திகள் இவர்கள். இவர்களும் தமிழ்

(13-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் குரல்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நன்கு கல்விகற்ற இளவயதினர், அரசியலிற்கு புதியவர். ஆனுல் மக்கட்காக அதன் கொள்கைகட்காக உறுதியுடன் போராடும் ஒரு தீரர். ஆனுல் அவரை நல்ல முறையில் சேவை செய்ய சிறீ லங்கா சுதந்திரக்கட்சியின் ஒரு பகுதியினர் விடுவதில்லை. எனவே இப்பகுதியினரை முதலில் விரட்ட வேண்டும். ஏனெனில் இப் பகுதியினரே திரு. பண்டாரநாயக்காவின் கொலைக்கு காரண கர்த்தாக்களாய் இருந்ததோடு எனது திட்டங்கட்கும் தடையாய் இருந்தனர்" என்றுகூறினுர். அவருக்குப்பின் உரையாற்றியவர்களில் பெரும்பாலோர் திரு. பீலிக்சை ஆதரிக்கவும், மற்றையோரை எதிர்க்கவும் தயங்கவில்லை.

உடனுக்குடன் செய்திகளை வெளியிட்டு மக்களை விழிப்பூட்டும் சுதந்திரனுக்கு எனது நன்றிகள்.

வி. அருணசலம்பிள்ளை.
மாத்தளை

## வியப்பில்லையே!

சிங்களம் படித்து, தமிழ் பேசும் மக்கள் எதிர் காலத்தில் சுபிட்சமாக வாழ முடியும் என்ற கருத்துப்பட வார இதழொன்றில் பகிரங்கக் கடிதம் எழுதியுள்ளார் வெள்ளவத்தைத் தமிழர் ஒருவர். இப்படிப்பட்டவஞ்சகர் கூட்டத்தை எண்ணித் தான்போல் அன்று பாவலன் பாரதி "இந் நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால் நெஞ்சு பொறுக்குதில்லை" என்று பாட்டெழுதிவிட்டான்.

சுதந்திரத்திற்காக, மொழிக்காக, கல்லடிபட்டவர்களும் உயிரையே தியாகம் செய்த கட்டபொம்பன்களும், நமது இனத்தில் வாழ்ந்திருந்தும், அதிகப்படியாக ஆறு ரூபாய் வருட உயர்வுக்காக தமிழ் பேசும் மக்களில் ஒருசிலர் காட்டிக் கொடுக்க இன்னமும் இருக்கிருர்கள் என்ருல் சிங்களம் நமது தொண்டைக்குள் திணிக்கப்படுவதில் வியப்பு இல்லையே!

கரவைக்கிஷோர்
கொழும்பு.

## அந்த ஆலமரம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

சுடலை வயிரவரைப் பற்றிய மர்மத்தைக் கேட்டுவிட்டு அங்கிருந்து நழுவியவர்களில் ஒருவர்.

வெளியே வந்த அவர் பாடையருகே வந்து பலத்த குரலில், "பாடையை இங்கால கொண்டுவரவேணும், ரோட்டால கொண்டு போங்க. ஆலடியில் கோயில் இருக்கு" என்ருர் ஆலடியில் புதிதாகத் தோன்றிய "கோயிலை"ச் சுட்டிக்காட்டி.

"ஓ. அது சரிதான்" என்றனர் பாடையோடு கூடிவந்த பலர்.

பாடை ரோட்டுப் பக்கம் திரும்பிற்று.

(யாவும் கற்பனை)


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனுமாக அனுப்புவோம்.


பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நடன விருந்து

கோபிநாத், தங்கமணி நடனக்குழுவில் ஒருவராகத் திகழ்ந்த திரு. சுகுமாரன் நாயர் இலங்கையில் நாட்டிய நிலையம் வைத்துப் பல மாணவ மாணவிகளைப் பயிற்றிவருகிருர். அவருடைய மாணவிகளின் நடன விருந்து அண்மையில் ரோயல் கல்லூரி மண்டபத்தில் செனட்டர் எஸ். டி. எஸ். சோமாத்ன தலைமையில் நடைபெற்றது. தமிழ் சிறுமிகளும் சிங்களப் பெண்களும் இந்நடன நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டனர்.

கதகளி முறையைத்தழுவியபலநடனங்கள் சிங்களப் பெண்களுக்குப் புகட்டப்



வெண்ணை திருடித் தின்னும் கண்ணனாகத் தோன்றி அனைவரையும் கொள்ளை கொண்ட பேபி தங்கம் வைத்தியநாதன்.
—படபிடிப்பு: கிங்ஸ்லி செல்லையா.

பட்டிருந்தமையால், அவை சிறப்புடன் தென்பட்டன.

பூஜாநடனத்திலும் புறப்பாடு, கோஷ்டி நடனம் ஆகியவற்றிலும் சிங்களப் பெண்களே பெரும்பாலும் பங்குபற்றினர். ஏனைய கீதாஞ்சலி, நடராஜதிருத்தம், ரங்கபூஜா, மயில்நடனம், ஸ்வரஜதி, பாம்புநடனம், ரஸலீலா, சீதா, மான்நடனம், ஆகிய நடனங்களில் திரு. வைத்தியநாதன் அவர்களின் புதல்விகளான செல்விகள் ருக்மணி, விஜயலட்சுமி, பேபிதங்கம், ஆகியோரும், லலிதாம்பிகை சுகிர்தலிங்கம், மாலினி செல்லத்துரை, ரவீந்திரன் செல்லத்துரை. பவானி அமிர்தலிங்கம், கலைவாணி அமிர்தலிங்கம் முதலியோரும் பங்குபற்றிச் சிறப்பித்தனர். நாட்டிய ஆசிரியர் திரு. சுகுமாரன் [illegible] நடனத்திலும், மீனவன் நடனத்திலும் பங்கு பற்றிஞர்.

(13-ம் பக்கம் பார்க்க)

# "தாய் சொல்லைத் தட்டாதே" வர்ணனை

'தாய் சொல்லைத் தட்டாதே' படதத்தில் வரும் சில கட்டங்களையிட்டு, பெண்கள் மட்டும் கலந்துகொள்ள வேண்டுமென்று ஒரு சிறு வர்ணனைப் பகுதியை ஆரம்பித்தோம். அதற்காக வந்த வர்ணனைகளுள் பிரசுரத்துக் கேதுவான சிலவற்றை இவ்வாரம் பிரசுரித்துள்ளோம். இவ்வாரத்துடன் இவ்வர்ணனையை முடித்து விடலாமென எண்ணினேம். ஆனுல், மென் மேலும் வர்ணனைகள் வந்த வண்ணமே இருக்கின்றன. தயவு செய்து இனிமேல் வர்ணனைகளை அனுப்பி வைக்க வேண்டாமென்று தயவாகக் கோருகிறேம்.

## 1

"செழிப்பாக வாழ்ந்த நமது குடும்பத்தைச் சிதைத்த கொடியவன் மகளை மணக்க நான் அனுமதியேன். என் மாங்கல்யத்தைச் சிதைத்த துரோகியின் வயிற்றில் பிறந்தவளுக்கு நீ மாலையிடுவதானுல்-கொலைகாரனின் மகள் எனக்கு மருமகளாக வருவதானுல், முதலில் என் கழுத்துக்குக் கயிற்றை மாட்டி விட்டு உன் ஆசையை நிறைவேற்று" என்று கூறும் அத்தாயின் உணர்ச்சி மிக்க வார்த்தைகள் உண்மைத் தாயின் உணர்ச்சி அலைகளை வெளிப்படுத்துவதாக இருக்கின்றன.

இன்னுமொரு கட்டத்திலே தான் ஆதரித்து அழைத்து வந்த பெண் தன் வைரி பாண்டித்துரையின் மகளெனக் கண்டதும்; தான் முன்னர் கொண்டிருந்த பாசங்களைத் துறந்து ஈவிரக்கம்-பெண் மனமே அற்று அவளை ஒரே பிடியாக வெளியே தடாரெனப் பிடித்துத் தள்ளி விடுகிருள்.

இரக்க சிந்தை படைத்தவர்களல்லவா தமிழர்கள்! அதிலும் தமிழ்ப் பெண்ணைக் கேட்கவும் வேண்டுமா? பின் தண்ணீரூற்றிய அனலாகின்ருள் அந்த அன்னை. தனது மஞ்சள் குங்குமத்தை அழித்தவனின் மகளென்பதை மறந்து, அவளை-விஜயாவை அழைத்து அன்பு மீதுர அணைத்து, தன் மருமகளாக ஏற்கச் சம்மதிக்கிருள். இந்தக் காட்சி எல்லாரையும குதூகலமடையச் செய்யும் கட்டமாக இருந்தத.


அடுத்து, அண்ணன் மோகனை தம்பி ராஜு அடிக்கும்போது கண்ட தாயின் வேதனையை அளந்தறியவே முடியவில்லை. தனது மருமகள் விஜயாவை இரண்டாவது முறை தான் பெற்றெடுத்த மகன் மோகன் இழுக்கும்போது, அத்தாயானவள் கெஞ்சும் கட்டமும், பின் ஆவேசத்தால் "தாய் சொல்லைத் தட்டாதே! தாய் சொல்லைத் தட்டிய மகன் வாழ்ந்ததில்லை" என்பதும் [illegible] களின் உள்ளத்தின் [illegible] தையே உலுப்பி விடுகின்றன இந்தக் காட்சிகளையும், வேறு பல காட்சிகளையும் காணும் போது தாய்மாரின் உள்ளத்தையேசிலிர்ப்படையச்செய்யும் நிலை ஏற்பட்டுவிடுகிறது.

பிலோமினு பெர்னுண்டோ, மட்டக்களப்பு.

## 2

இயற்கையிலேயே பெண்களுக்கு இரக்க மனப்பான்மை அதிகம் பகைவன் மகளென்றறிந்து கடிந்து ஏசிக் கொட்டும் மழையில் வீட்டை விட்டு வெளியேற்றிய ராஜாவின் தாய் மனச்சாட்சியின் தூண்டுதலால் தான் செய்தது தவறு என்றுணர்ந்து திரும்பவிஜயாவை அழைக்க வந்தவள் அங்கு கண்ட காட்சி யென்ன? தன் மகனும் தன்னுல் துரத்தப்பட்ட தன் பகைவனின் மகளும் மழையில் நனைந்து கொண்டிருந்தனர். உண்மையிலேயே எந்தத் தாயும் மெய்சிலிர்த்து ரசிக்க வேண்டிய கட்டம். தவிர பிடிவாதமுள்ள பெற்றேர்களுக்குத் தகுந்த சாட்டையடி அக்காட்சி. வாய்ப் பேச்சினுல சாதிக்க முடியாததைச் செயலினுல் சாதிக்க முடியும் என்பதையும் விளக்கும் அருமையான கட்டம். விஜயாவை வெளியேற்றியபின் மனச்சாட்சியுடன் போராடிய விதம் மிகவும் போற்றற்குரியது. எங்கு திரும்பினும் "அத்தே அத்தே" என்ற தீனக்குரல் பார்ப்பவர் மனதைக் கவரத்தக்கதாக இருந்தது.

(13-ம் பக்கம் பார்க்க)







ஜெமினி கணேசன், ஈ. வி. சரோஜா, சௌகார் ஜானகி தோஷூம் "பாக்கிய லட்சுமி" பார்ப்பவருக்குப் பர [illegible] தில்லை, இலோன் [illegible] டால் திரைகளில் விரைவில் விருந்தளிப்பாள்.

பட விமர்சனம்

# விடுதலை வீரன் "ஸ்பார்ட்டக்கஸ்"

அடிமைப்பட்டு அல்லலுற்ற வர்க்கத்தினர் விடுதலையின் உதயத்தைக் காண விரையும் நேரத்தில், உலகத்தின் விடுதலையையே காண நேரும் துன்ப நிகழ்ச்சியை 'ஸ்பார்ட்டக்கஸ்' தோற்றுவிக்கிறது.

அடிமை வியாபாரம் ஐரோப்பாவில் அரசோச்சிய காலம் அது. ஸ்பாட்டக்கஸ், பட்டியேட்டஸ் என்பவரின் போர்ப் பயிற்சிப் பள்ளியில் அடிமையாகி விடுகிருன். உரோமாபுரி விருந்தாளிகளின் கண்களுக்கு விருந்தளிக்க உயிர் போகும் வரை போரிடவேண்டியேற்படுகிறது. அவ் வேளையில் தன்னுடன் போரிட்ட ஒரு ஆபிரிக்க அடிமையின் ஆயுதத்துக்குத் தப்பிய காரணத்திஞல் அங்குள்ள அடிமைகளை விடுதலை செய்ததுடன் 60,000 மேற்பட்ட ஒரு அடிமைச் சைனியத்தின் தலைவனுகி, உரோம ஏகாதிபத்தியத்தையே ஆட்டிப் படைக்கிருன். வரீனியா என்ற அடிமைப் பெண்ணைக் காதலித்து அவளையும் தன்னுடன் இணைத்து வாழ்கிருன். விடுதலைத் தாகங்கொண்டோருடன் விரைந்து செல்லுகையில் எதிர் பார்த்த கப்பல்கள் கிடைக்கவில்லையாதலால், உரோமாபுரி நோக்கி படைசெலுத்த வேண்டிய நிர்ப்பந்தம ஏற்படுகிறது. கொலையையும், கொடுமையையும் கலையாகக் கொண்ட உரோமர்களின் வேலுக்கும், வாளுக்கும் ஸ்பார்ட்டக்கஸின் படைகள் இரையாகின்றன. விடுதலை விடிவெள்ளியை நோக்கிச் சென்ற வீரர்களைக் கொண்ட அடிமையர் படை வீர சொர்க்கம் செல்ல வேண்டியேற்படுகிறது. வரீனியா போர் முனையில் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கிருள். உரோம ஏகாதிபத்தியத்தின் தலைவன் கராசஸ் என்பவனிடம் அடிமையாகிருள். உரோம ஆட்சியின் மேல்சபை உறுப்பினர் கிராச்சஸ், பட்டியேட்டஸின் உதவியுடன் வரீனியாவையும், அவள் குழந்தையையும் தப்பவைத்து வெளியேற்றிவிட்டுத் தற்கொலை செய்து கொள்ளுகிருர்.

விடுதலையடைந்த வரீனியா செல்லும் பாதையில் சிலுவையில் அறையுண்டு உயிர் துடிக்கும் ஸ்பார்ட்டக்ஸிடம் தன் குழந்தையைக் காண்பித்து, விடுதலை கிடைத்துவிட்டதையும் கூறி விட்டு விடுதலையை நாடிச் செல்லுகிருள். அதே வேளையில் விடுதலைக்காகப் போரிட்ட விடுதலை வீரன் ஸ்பார்ட்டக்கஸ் உயிர் விடுதலை அடைகிறது.

உணர்ச்சிப் பெருக்கையும், விடுதலை வேட்கையையும் உணர்த்தும் சித்திரமான 'ஸ்பார்ட்டக்கஸ்' கொழும்பு றீகல் படமாளிகையில் காண்பிக்கப்படுகிறது.

கேர்க் டக்ளஸ், சார்ள்ஸ் லோட்டன், லோரன்ஸ் ஒலிவர், பீட்டர் உஸ்டினேவ், டோனி கேட்டிஸ், ஜோன் டால், ஜீன் சிமன்ஸ் ஆகிய பேர்பெற்ற நடிகர்கள் இச் சித்திரத்தில் இடம் பெற்றுள்ளனர். பல 'ஆக்கடமி' பரிசுகள் பெற்ற இயற்கை வர்ணப் படமாகும். தற்காலத்தைய ஹொலிவூட் படத் தயாரிப்புகளில் அதிகமான பணத்தை, தயாரிப்பின்போது விழுங்கிய படம் ஸ்பார்ட்டக்கஸ் பார்த்துப் பயனடையலாம்.

—நாதன்



"எத்தனை பெரிய வேதனையிருந்தாலும் உத்தமி உன் கை பட்டால ஒரு நொடியில் பறந்துவிடாதா?" என்று தன் தலையிலுள்ள புண்ணுக்கு கட்டுப் போடும் ஈ. வி. சரோஜாவிடம், டி. ஆர். மகாலிங்கம் கேட்பது. இந்திரா பிலிம்சாரின் "ஆட வந்த தெய்வத்"தில்.

சினிமாஸ் வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீண்டாமை ஒழிய எம்மிடம் மனமாற்றம் அவசியம்

—எஸ். குணநாயகம்—
(தலைவர், கிராமச்சபை, கட்டை பறிச்சான்)

தீண்டாமை குறித்துப் பேசியும், எழுதியும் அலுத்துவிட்ட இச்சந்தர்ப்பத்தில், மீண்டும் இது விடயமாக நான் கருத்துத் தெரிவிக்க முற்படுவது கண்டு பலர் சலித்துக்கொள்ளக்கூடும். எனினும் நமது நாட்டின் இன்றைய அரசியல் சூழ்நிலையில், ஈழம்வாழ் தமிழ் பேசும் மக்கள் இது குறித்து அவசியம் சிந்தித்துத்தான் பார்க்கவேண்டியிருக்கின்றது. அரசியல் உரிமைகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் நாங்கள், எமது உடன் பிறந்த சகோதரர்களில் ஒரு சிலரைச் சாதியின் பெயரால் ஒதுக்கிவைக்க முற்படுவது போன்ற வெட்கக்கேடான சம்பவம் இந்த இருபதாம் நூற்றாண்டில் வேறு எதுவும் இருக்க முடியாது. "ஆதியிலே இல்லாத சாதிக்கொடுமை, பாதியிலே புகுத்தப்பட்டு, மனித நீதியையே அழித்துவிட்டது" என்று அடுக்குமொழியில் ஆயிரம் மேடைகளில் பேசிவிட்டோம். பத்திரிகைகளில் பக்கம் பக்கமாகத் தீட்டிவிட்டோம். என்றாலும் இச்சாதிக்கொடுமை மறைந்துவிட்டதா? மனிதன் நோக மனிதன் பார்க்கும் இந்தக் கொடுமை இன்னும் வாழ்ந்துகொண்டுதானே இருக்கின்றது? பொறாமை பெற்றெடுத்த குழந்தையான இத்தீண்டாமை இன்றும் தனது பொல்லாத்தனங்களைக் காட்டிக்கொண்டுதானே இருக்கின்றது?

### செயலில் இறங்க வேண்டும்

நமது இனத்துக்கே வெறும் சாபக்கேடான இச்சாதிக்கொடுமையை நாங்கள் புதை- குழிக்கு அனுப்ப வேண்டுமானால், ஒவ்வொருவரும் செயலிலே இறங்க வேண்டும். உள்ளத்தில் தேள் கொட்டும்பொழுது, உதட்டில் தேன் சொட்டி என்ன பயன்? இதயத்தை இருட்குகையாக்கிவிட்டு, இது விடயத்தில் இனிக்கப் பேசுவது, புரையோடிய புண்ணுக்குப்/புனுகு பூசுவதுபோலாகும்.

உயர் சாதியினர் என்று அகம்பாவத்துடன் இருப்பவர்கள் மனப்போக்கு மாறுதவரையில், அறவழிகளில் இதை ஒழித்துக் கட்டுவது முடியாது காரியம். இன்று இது விடயத்தில் சற்றுத்தெளிவான நிலை ஏற்படுவதை நம்மால் பார்க்க முடிகின்றது. அரசியல் வாதிகள் மத்தியில் சிறிது விழிப் புணர்ச்சி இவ்விடயத்தில் ஏற்பட்டிருப்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆனால் இது வெறும் தேர்தல்கால 'ஸ்ற்றண்டா'க மட்டும் இருந்துவிடக்கூடாது என்பதே என்றும எனது விருப்பமாகும்.

இழந்த உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காகப் போராடிக்கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சியினர், இந்த இழிநிலையை அகற்றுவதில் இன்னும் தீவிரமான நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும். சாதிக்கொடுமையைச் சாடுவதில் மாற்றுக்கட்சியினரும் தங்கள் ஆதரவை நல்குவார்கள் என்பதில் ஐயமிருக்க முடியாது.

### கட்சிகளிடையே ஒற்றுமை

இக்கொடுமைக்குச் சாவு மணியடிப்பதில் தமிழ்ப்பிரதேசத்தில் சகல அரசியல் கட்சிகள் மத்தியிலும் ஒற்றுமை உதயமாகிவிட்டது என்பதை யாழ்ப்பாணத்திலேயே பார்க்க முடிந்தது குறித்து நல்லிதயம் படைத்தவர்கள் அனைவரும் மகிழத்தான் செய்வர். இந்த நாட்டின் தமிழ்பேசும் மக்கள், தமிழரசுக்கட்சியில் தான் தாங்கள் நம்பிக்கை வைத்துவிட்டார்கள் என்பதைச் சனநாயகத்தின் அடிப்படையில் தெரிவித்துவிட்டார்கள். தமிழ்பேசும் இனத்தில் காணப்படும் சாபக்கேடுகளைக் களைவதில் அக்கட்சிக்குத்தான் முக்கிய பங்குண்டு. மற்றும் கட்சிகளும் நாங்கள் இது விடயத்தில் தங்கள் முயற்சிக்கு முட்டுக்கட்டை போடமாட்டோம், முழு ஆதரவையும் தருவோம் என்று நம்பிக்கை தெரிவித்துவிட்டன இந்த நிலையில் ஆணித்தரமான திட்டங்களைத் தீட்டி, வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பது தமிழரசுக்கட்சியின் நீங்காத கடமையாகின்றது.

### சிந்தித்தால் நல்லது

இக்கட்டத்தில் சிறுபான்மைத் தமிழர் மகாசபையும் சிறிது சிந்தித்துபார்க்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். சமத்துவம் கோரவேண்டும் என்பது அத்தியாவசியமே. ஆனால் இச்சிறுபான்மைத் தமிழர் மகாசபை, சில சந்தர்ப்பங்களில் இன்று தமிழ் பேசும் மக்களின் தனிப்பெரும் கட்சிக்கு முட்டுக்கட்டை போட வேண்டும் என்ற நினைப்பில் மாஸ்கோப்பாதை நடைபோட விரும்புவது வருந்தத்தக்கது. இன்று இந்தச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை கம்யூனிஸ்டுகளின் கைப்பிள்ளையாக இருப்பது கண்கூடு. இந்த நிலையும் அவசியம் மாறவேண்டும். அக்கட்சியின் சகவாசத்தால் ஆளவந்தார்களிடமிருந்து இச்சபை சில உபகாரங்களைப் பெற்றுக்கொள்ளமுடியுமே தவிர, உரிமைகளை ஒருபொழுதும் பெறமுடியாது. உபகாரத்தை எதிர்பார்ப்பது தாழ்வுமனப்பான்மை. உரிமையைப்பேறுவது விடுதலை மனப்பான்மை. எனவே தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒரு கட்சியின் கீழ் ஒன்றுகூடுவது அத்தியாவசியமாகின்றது. இந்தியாவில் நடைபெற்றுமுடிந்த பொதுத்தேர்தலின்போது தமிழகத்தின் மக்கள் முற்றாகக் கம்யூனிஸ்டுகளை வெறுத்து ஒதுக்கிவிட்டனர் என்பதையும் நாங்கள் சிந்தனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் கம்யூனிஸ்டுகள் தங்கள் செல்வாக்கை இழந்தது எதனால்? சிறுபான்மைத் தமிழர் மகாசபை சிந்திக்கட்டும்...... சிறந்த முடிவுக்கு வரட்டும் ......அதே நேரத்தில் உயர் சாதிக்காரர் என்று கூறிக்கொள்ளுபவர்கள் மனப்போக்கும் மாறட்டும். அப்படி மாறுவிட்டால், அவசியம் மாறச்செய்ய வேண்டியது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதற்பணியாகும்.

# சங்கப்பலகை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யம் வளரவில்லை. தொல்காப்பியம் அகத்திணையில் நாடகம் பற்றிக்குறிப்பிடப் பட்டிருந்தாலும், இயலும் இசையும் வளர்ந்திருக்கும் நிலைக்கு நாடக இலக்கியம் வளரவில்லை. இன்று விரல் விட்டு எண்ணக் கூடியளவு தான் தமிழில் நல்ல நாடக நூல்கள் உள.

பண்டைய இலக்கியங்களில் நாடகநூல் என்று கூறுமளவுக்கு சிலப்பதிகாரம் ஒன்றே நமக்குக் கிடைத்திருக்கிறது. பின்னர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் மனோன்மணியம் ஒன்றே நல்ல தமிழ் நாடக நூல் என்று கூறுமளவுக்கு இருக்கிறது.

ஈழத்திலும் நாடக நூல்கள் மிகக் குறைவே. ஆனாலும், அண்மையில் நாடக நூல்கள் ஆர்வத்துடன் வெளியிடப்பட்டு வருகின்றன. இந்த வரிசையிலே 'ஐயனு' அவர்களின் நாடக மாலையும் எழுந்துள்ளது என்று கூறலாம்.

இத் தொகுப்பில் பத்துச் சிறு ஓரங்க நாடகங்கள் உள. அவையனைத்தும் ஒவ்வொரு கருத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டுள்ளன. முதல் இரு நாடகங்களும் சமய அடிப்படையிலும், பண்டைய இலக்கியப் பாடல் ஒன்றையும் வைத்துப் புனையப் பட்டுள்ளன. மற்றைய எட்டு நாடகங்களும் சமூக நாடகங்கள். அவையும் இன்றைய சில முக்கிய பிரச்சினைகளை அடிப்படையாக வைத்துப்புனையப் பட்டுள்ளன.

பிரதேச மணமும், தனித் தமிழும் நூல் முழுவதும் பரவலாகக் காணக் கிடக்கின்றன. 'சகோதரபாசம்', 'சீதனம்' இவை இரண்டும் அனைத்துக்கும் சிகரமாக அமைந்துள்ளன.

இத் தொகுப்பைத் துணிந்து ஆசிரியர் வெளியிட்டதன் மூலம், ஏனைய எழுத்தாளர்களும், தங்கள் படைப்புக்களை நூல் வடிவில் காண்பதற்கு அவர் நெஞ்சுரத்தை ஏற்படுத்தியுள்ளார்.

ஈழத்தில் நாடக வளர்ச்சிக்குச் சில ஆக்க வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் தேவன் - யாழ்ப்பாணம், முன்னுரை வழங்கியுள்ளது பல வழிகளிலும் நூலுக்குச் சிறப்பாக அமைந்துள்ளது.

ஒரே வார்த்தையில் கூறுவதாயின், ஆரம்ப நாடக எழுத்தாளர் கையில் அவசியம் இருக்க வேண்டிய ஒரு நல்ல நூல் நாடகமாலை.

சங்கர்.



ஹலோ...யார் பேசுகிறது...அத்தானு? என்டர்டெயின்மென்ட்ஸ் திரைகளுக்கு வருகிறேன்...சந்தியுங்கள் என்கிறார்—குமாரி.

—படம்: யார் மணமகன்.

# அன்புள்ள மகள் அன்பரசிக்கு

((11-ம் பக்கத் தொடர்ச்சி)

மொழி பேசும் நம்மவரே-தாயை மறந்த தனயர்கள், பரம்பரையை விற்கும் கொடுமையாளர்கள்...!

மகளே! தமிழ் உரிமை கிடைத்துவிட்டால் நமதின்னல் தீருமெனத் தமிழரசுக் கட்சி நம்பவில்லை- என்றும் நம்பியதும் கிடையாது. ஏனெனில், தமிழ் மொழி உரிமையுடன், அவ்வுரிமையை என்றும், எந்த ஆட்சி வரினும் காப்பாற்ற முடிந்த வலுவும் எம்கையிலேயிருக்க வேண்டும். அதற்காகவே நாம் எல்லாம் நிறைந்த-பல பிரச்சினைகள் தீரக்கூடிய-சமஷ்டியென்ற இணைப்பாட்சியைக் கோருகின்றோம்.

கொஞ்சம் எண்ணிப்பார்! இப்போதுள்ள ஆட்சி தமிழ் மொழி உரிமை தந்துவிட்டதாக வைப்போம். சிலகாலம் ஓட வேறு ஓர் ஆட்சி, இவ்வுரிமையைப் பறிக்காது என்பதற்கு என்ன அத்தாட்சியுண்டு. நிலையான பாதுகாப்புக்கொண்ட, என்றுமே மாற்ற முடியாத ஆட்சி மாற்றமே எமக்குத் தேவை. தமிழரசுக்கட்சி அதிகதூரம் பார்க்கின்றது; பின் விளைவதையும் முன்னேயே தீர்க்கமுடன் எண்ணுகின்றது. மற்றவர்கள் கண்ணுக்கெட்டிய தூரம்மட்டும் பார்க்கிறார்கள். இதுவே வேறுபாடு.

இந்த இரு பகுதியினரும் மொழிப்பற்றுக் கொண்டவர்கள் தானெனினும், என்றுமே நீக்க முடியாத—தகர்க்க முடியாத தன்மைகொண்ட உரிமையை அடைவதை-விடயத்தெளிவு ஏற்பட்டால் யாரும் மறுக்கமாட்டார்கள்.

அதனாலேயே, தமிழரசு இயக்கத்தில் பற்றுக்கொண்டோர், நாளொருமேனியாகச் சேர்ந்தனர்; சேர்கின்றனர்.

அன்பு! எங்கள் இயக்கம் இலட்சியவாதிகள் கொண்ட பாசறை. இப்பாசறையிலிருந்து பலரும், மொழியுரிமை மட்டும் கோரும் சிலரும் தடுப்புக் காவல் குடும்பமாகியுள்ளோம். எனினும், இலட்சியம் எல்லோரையும் இணைக்குமென்றே நம்புகின்றேன்.

இலட்சியம் வலிமை கூடியது மகளே வலிமை கூடியது.

பின்பு மீதி—.

அன்புத் தந்தை,
புதுமைலோலன்.

(தொடரும்)

## தாய் சொல்லை...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து தான்பெற்றசெல்வங்கள் எதிரும் புதிருமாய் சண்டை போட்டு ஈற்றில் மோகன் தள்ளாடிய வண்ணம் 'அம்மா!' என்று தீனக்குரல் கேட்ட தாயின் பரிதாப நிலை. அதில் ராஜாவை ஏசும் கட்டம். உண்மையைக் கண்ணீருக்கிடையில் கூறிய போது கண்ணும்பாவின் முகபாவம் இருந்த நிலை. இக்காட்சியில் மிகவும் திறமையாகக் கண்ணும்பா ஒரு உத்தமத்தாயின் பண்பைச்சித்திரித்திருக்கிறார்.

"தாய் சொல்லைத் தட்டாதே உன் கடமையை நீ செய்" என்று ராஜாவுக்கு கூறும் கட்டம் எல்லாக் கட்டங்களுக்கும் சிகரமாக அமைந்திருக்கின்றது. பெற்ற பாசத்தையும் வென்ற கடமையையும், நியாயத்தையும் எவரும் போற்றாமலிருக்க முடியாது.

செல்வி ஆனந்தன்
சாவகச்சேரி

(அடுத்த வாரம் தொடரும்)

## அருந்ததியர் சங்கத் தலைவர் தெரிவு

மேற்படி சங்கப் பொதுக்குழுக் கூட்டம் கடந்த 19—8—62 ஞாயிறு மாலை 5 மணியளவில் உபதலைவர் அவர்கள் தலைமையில் பணிமனையில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் திரு. மூ. வேலாயுதம் அவர்கள் தனது பொறுப்பினின்று விலகியதை முன்னிட்டு அவருக்குப் பதிலாக தற்போதைய சங்க உபதலைவர் திரு எஸ். சுந்தரராஜ் அவர்கள் சங்கத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

உதவி தலைவராக திரு. க. பி. பூபாலர் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.

சங்கத் தலைவர் ஒருவரை தேர்ந்தெடுக்கப்படும் இக் கூட்டத்திற்கு இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள கிளைச் சங்கங்களிலுமிருந்து பிரதிநிதிகள் சமுகமளித்திருந்தனர்.

## நடன விருந்து

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியாக நடைபெற்ற "கலைஞன் கண்ட முடிவு" சிறப்பாக அமைந்திருந்தது.

தியாகராஜ கான சமாஜ நிதிக்காக இந்நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன. திரு. என். வைத்திய நாதையர், திரு. டி. சோமசேகரம், திரு. கணேசராசா தம்பதிகள், திரு. அருணாசலம் தம்பதிகள், திரு. வைத்தியநாதன் தம்பதிகள். புகைப்படக் கலைஞர் திரு. கிங்ஸ்லி செல்லையா அவர்களே இந்நிகழ்ச்சியின் சிறப்புக்குக் காரணமாயிருந்தார்கள்.

-பானு

## நடிகர் சங்கம் உதயமாகிறது

இலங்கையில் எண்ணற்ற நாடகக் கலைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களை ஒன்று திரட்டி நாட்டுக்கு நல்ல வகையில் அறிமுகப்படுத்தி வைக்க "சுதந்திரன்" கலைப் பூஞ்சோலை ஆயத்தமாகும் பொழுது "நடிகர் சங்கம்" உதயமாகிறது என்றசெய்தி இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிக்கிறது. எதிர்காலத்தில் இலங்கையில் நாடக நடிகர்களுக்கு நல்ல வாய்ப்புக்கள் பலஏற்படப்போகின்றன. கிடைககவிருக்கும் சந்தர்ப்பங்களை நல்ல வகையில் பயன்படுத்துவதற்கு ஏதுவான வழிவகைகளை "நடிகர் சங்கம்" ஏற்படுத்துமென பெரிதும் நம்புகிறோம்.

8. 9. 62 சனிக்கிழமை கொழும்பு விவேகாநந்தா மண்டபத்தில் நடிகர் சங்கம் கூட்டம் நடைபெறவுள்ளது என்று நடிகர் லடிஸ்வீரமணி அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பார் புகழும் பாரதியார்

க. சோதீஸ்வரி, மீசாலை.

**பாலை** வனம் போன்று வரண்டு கிடந்த நாட்டில் தேசாபிமானம் என்ற வித்தை விதைத்துப் பாடல்களாகிய தண்ணீர் வார்த்து இன்னறு நீர்க் கங்கையாற்றை உடைய பாரத மண்ணிலே வளர்ந்தவர்களில் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியும் ஒருவராவர்.

பாரதியார் 1882-ம்ஆண்டு கார்த்திகை மாதம் பதினொராம் திகதி திருநெல்வேலியிலே உள்ள எட்டிய புரத்தில் ஆஸ்தான வித்துவானாகிய ஸ்ரீ சின்னச்சாமி ஐயருக்கும் ஸ்ரீலக்ஷ்மி அம்மாளுக்கும் புதல்வராய்ப் பிறந்தார். வெகு நாட்கள் கழித்துப் பிறந்த பிள்ளையாதலினால் தாய் தந்தையர்மிகுந்த செல்வமாய் வளர்த்து வந்தனர். இவருக்குப் பகீரதி என்றொரு தங்கையுமுண்டு.

பாரதியின் இளமைப் பெயர் சுப்பிரமணியன். செல்லப் பெயர் சுப்பையா. பாரதி தனது ஐந்தாவது வயதிலே தாயை இழந்தார். இவருக்குப் பள்ளிப் படிப்பில் மதி பற்றி விடவில்லை. எனினும் 'வெள்ளை மலரினை மேவி அவள் வீணையும், கையும், விரித்த முகமலர் விள்ளும் பொருளமுதும்'உடைய சரஸ்வதி தேவியின் அருளைப் பெற்றமையால் பதினொராவது வயதிலே பாட்டுக்கள் இயற்ற ஆரம்பித்தார்.

பதினொரு வயதுச் சுப்பிரமணியத்தை' எட்டியபுர சமஸ்தானப் புலவர்கள் பெரும் சபையில் சோதித்து வியந்து "பாரதி" என்ற பட்டம் அளித்தனர். வெட்டென்ற பேச்சும், சுயமரியாதையும், துடிதுடிக்கும் உள்ளமும் உடையவர்.

பாரதி பதினன்கு வயதில் ஏழு வயதுடைய செல்வம்மா என்னும் பெண்ணை விவாகம் செய்தார். தந்தையை இழந்தபின் வறுமை சூழ்ந்து கொண்டது. பல இன்னல்களுக்கு ஆளாகி மதுரை சேதுபதி ஹைஸ்கூலில் தமிழ்ப் பண்டிதராய்க் கடமையாற்றினர்.

அவ் வேலையையும் விட்டு "சுதேசமித்திரன்" என்ற பத்திரிகையில்வேலைபார்த்தார். அந்நேரத்தில் பிரிட்டிஷார் மீது மக்கள் கொதித்தெழுந்தியை பிரிட்டிஷார் சிறைப் படுத்த முயன்றனர். நண்பர்களின் தூண்டுதலினால் புதுச்சேரிக்குச் சென்றார். புதுவையில்அவர்பன்னிரண்டு வருடகாலம் தங்கி இருந்தார். பின்னர், திரும்பவும் சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

இவர் முதலில் வெளியிட்டநூல் 'சுதேச கீதங்கள்' என்ற கவிதைத் தொகுதி.

## எந்தன் அம்மா

(சாரணு கையூம்)

அம்மா எந்தன் அம்மா
அருமை யான அம்மா
சும்மா சொல்ல வில்லை
செல்ல மான அம்மா.

பத்து மாதம் சுமந்து
பெற்றுள் எந்தன் அம்மா
முத்தம் பல தந்து
மகிழ்ச்சி கொண்ட அம்மா.

பாலும் சோறும் ஊட்டி
பாடம் சொல்லித் தந்து
நாளும் என்னை மடியில்
தூங்க வைத்த அம்மா.

அவளே எந்தன் அம்மா
ஆசை யான அம்மா
அவனி கண்ட தெய்வம்
அவளே என்று மகிழ்வேன்.

தனர். கண்டார் பாரதி, கொண்டார் ஆவேசம், சேர்ந்தார் காங்கிரஸில், கூட்டினர் பொதுக் கூட்டங்கள், திருவல்லிக் கடற்கரையில் பொழிந்தார் சொல் மாரிகள்.

பாரதி எந் தமிழ்நாட்டின் தனிப் பெரும்புதல்வன்.பார

அவர் வழக்கமாகப் பழம் கொடுத்துவரும்யானை மதம் பிடித்து அவரைத்தள்ளிவீழ்த்தியது. நோய் கடுமையெனினும் மருந்துண்ண மறுத்தார். புரட்டாதி மாதம் பதினொராம் திகதி கவிக்குயில் பாரதி இன்பம் நிறைந்தவிண்ணுலகம் எய்தினர். முப்பதி ஒன்பது வயது நிரம்பாத உத்தமனை, தமிழ்த் தாயின் இனிய இளம் புதல்வனை இழந்து விட்டோம்.

**வ**ளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து 'வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

#### அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 8

பெயர் ____________________

பாடசாலை ____________________

விலாசம் ____________________

____________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் — கையொப்பம்

## வளர்மதி புதிய மருமக்கள்

3497 க. இளையதம்பி, கிளிநொச்சி.

3498 சு. பாண்டிதராஜன், உருத்திரபுரம்.

3499 வ. அருணேந்திரன், காத்தான்குடி.

3500 க. கண்மணி, கைதடி.

3501 க. தயாபரசீலன், தம்பிலுவில்.

3502 தி. பராசக்தி, கைதடி.

3503 ச. சுதர்சனம், வாழைச்சேனை.

3504 க. சின்னத்துரை, மிருசுவில்.

3505 க. [illegible], செங்கலடி.

3506 சி. ஜெகசோதி, உரும்பிராய்.

## மூன்றெழுத்துப் பாவலன் பாரதி

எஸ். செபாரெட்ணம்
சிலாபம்

"அடிமை" என்னும் மூன்றெழுத்தை அழிக்க மூன்றெழுத்துப் "பாரதி" தோன்றினன். "தமிழ்" என்னும் மூன்றெழுத்துத் தலை குனிந்திருப்பது கண்டு நெஞ்சம் பதறினன். "அன்பு" என்னும் மூன்றெழுத்துக் கேடயத்தைத தாங்கினன். "கடமை" என்னும் மூன்றெழுத்தைக் கடைப் பிடித்து "தமிழ்" என்னும் மூன்றெழுத்துக்கு "வாழ்வு" என்னும் மூன்றெழுத்தை அளித்து "புகழ்" என்னும் மூன்றெழுத்துக் குரியவனுனன். அந்த மூன்றெழுத்துப் பாரதி தமிழ் மக்களைத் தட்டியெழுப்பினர். சுதந்திர உணர்ச்சியை அவர்கள் உள்ளமெல்லாம் ஊட்டினர். "மடமை" என்னும் மூன்றெழுத்தை அகற்றி 'அறிவு' என்னும் மூன்றெழுத்தை அவர்கள் மூளையில் ஊட்டினர். அதற்காகத் தன்'உடல்' என்னும் மூன்றெழுத்தையே தியாகம் செய்தார். "தேன் மதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்று அவர் கண்ட "கனவு" என்னும் மூன்றெழுத்தை "நனவு" என்னும் மூன்றெழுத்தாக மாற்றினர். வெள்ளையனை வெளி யேற்றி தமிழன் வாழ்வுக்கு ஒளி யேற்றினர். பின் "காலம்" என்னும் மூன்றெழுத்துக் கோலத்தினல் "முதுமை" என்னும் மூன்றெழுத்தை அடைந்து மறைந்தார் பாரதி. 'அமர' என்ற மூன்றெழுத்தைக் கவி தன்னுடன் சேர்த்துக்கொண்டார்.

—

## வீரமும் அச்சமும்

எஸ். நெல்லா-நேசராணி,
அனுராதபுரம்.

வீரமில்லாத மக்களைக் கோழை என்கிறோம். வீரத்தின் மறுதலை, அச்சம். கோழைகள் அஞ்சுகிறார்கள், அச்சம் எப்படி உண்டாகிறது? மரணம், என்றவுடன் அச்சம் ஏற்படுகிறது. இது பேதமை, மரணம் மக்களுக்கு வருவது இயற்கை.

மனிதன் பாவத்துக்கும் பழிக்கும் அஞ்சலாம். எவன் ஒருவன் பாவத்துக்கும் பழிக்கும் அஞ்சுகிறானே அவன் நேர்மை வாழ்வு வாழ்பவனுவான்.

அச்சம் எவரிடத்தில் நிகழும்? தம்மைப் போல் பிறரைக் கருதாதவர், பேராசையுடையவர், மறவழியில் பொருளீட்டுவோர், கள்வர், கொலைஞர் முதலியோர்களிடமே அசசம் தோன்றும்.

காந்தி அண்ணலின் வாழ்க்கையில் வீரமும் அஞ்சாமையும் நிகரற்றுச் சிறந்து விளங்கியதால் தான், பகையும் குழப்பமும் கொலையும் மலிந்த கிராமங்களில், மூலை முடுக்குகளில் தனியே திரிந்து, தொண்டு ஆற்றிய புதுமை அவரிடம் காணப்பட்டது.

நாமும் அச்சம் களைந்து, தூய வீரர்களாவோம்.

## அறிஞர் அறிவுரை

உங்களுடைய தந்தையார் கட்டி வைத்த குடிசைகளிலேயே தங்கி விடாதீர்கள். உலகம் முன்னேறுகிறது. நீங்களும் முன்னேறுங்கள்.

—மாஜினி.

மற்றவர்களை அடிக்கடி மன்னித்து விடு. ஆனல் உன்னை மட்டும் ஒரு நாளும் மன்னிக்காதே.

—சிசரோ.

முயற்சி செய்து தோற்றவனுடைய நிலை பரிதாபமானது தான். ஆனல், அதைவிட ஆயிரம் மடங்கு பரிதாபமானது தோல்வியடைந்தால் என்ன செய்வது என்கிற எண்ணத்தால் முயலாமலே இருப்பவனுடைய நிலை.

—மொரிமான்.

உயர்ந்த உள்ளங்களுக்கிடையேதான் உண்மையான தோழமை மலர முடியும். சிறு மதி படைத்தவர்களின் சிறு செயல்களிடையே அந்த உயர்ந்த பண்பு எப்படிப் பிறக்க இயலும்?

—சார்ல்ஸ் கிங்ஸ்லி.

ஏன் உண்மையாய் நடக்க வேண்டும்? மனிதனாய் இருப்பதால் என்பதே மறுமொழி.

ரஸ்கின்.

## 'பாரபட்சம் காட்டேன்'

—

சின்னக்கிண்ணியா மக்கள் வரவேற்பில் முகமதலி

"என்னை ஆதரித்தவர்களுக்கு ஒரு விதமாகவும் ஆதரியாதவர்களுக்கு இன்னொரு விதமாகவும் பணியாற்றும் பாரபட்ச மனப்போக்கு என்னிடம் இல்லை. ஜனநாயகரீதியில் வாக்காளர்கள் ஒருவரை ஆதரிக்கவும் நிராகரிக்கவும் பரிபூரண உரிமை உடையவர்கள் என்பதை நான் நன்கு அறிவேன்- ஆகவே எல்லோரையும் சமகண் கொண்டு நோக்கிச் சேவை புரிவதே எனது நேக்கமாகும்." இவ்வாறு தமக்களிக்கப்பட்ட சின்னக் கிண்ணியாமக்களின் வரவேற்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு நன்றி உரை நிகழ்த்துகையில் தமிழரசுக் கட்சியின் மூதூர் முதல் உறுப்பினரான ஜனப் முகமதலி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

—

## சாம்பல் தீவில் புதிய பாடசாலை

ஆத்திமோட்டையில் சாம்பல்தீவுக் கிராம முன்னேற்றச் சங்கத்தால் முதல்கட்டி அரசாங்கத்திடம் பாரம் கொடுத்த பாடசாலையில் பிள்ளைகள் படிக்க இடநெருக்கடியாக உள்ளபடியால், இதை நிவிர்த்திசெய்யும் பொருட்டு கி. மு. சங்கத்தினர் அரசினர் உதவியுடன் ஓர் புதிய பாடசாலையை கட்டுவிக்கும் பணியில் மும்முரமாக முயற்சி செய்து வருகின்றனர்.

### அன்புள்ள மருமக்களே!

வணக்கம். மாநாட்டு மலர் சிறப்பாக அமைந்திருந்தது உங்கள் எல்லோருக்கும் மகிழச்சியை அளித்திருக்குமென நம்புகிறேன். அதுவும் 'வளர்மதி' க்கு இரண்டு பக்கங்கள் என்றால் கேட்கவா வேண்டும்?

பரிசு பெற்ற மருமக்கள் இருவருக்கும் உரிய காலத்தில் பரிசுகள் அனுப்பி வைக்கப்படும்.

நீங்கள் எழுதும் கட்டுரைகளை மிகச் சுருக்கமாக எழுதுங்கள். இரண்டு பக்கங்களுக்கு மேல் எழுத வேண்டாம்.

இனி, அடுத்த வாரம் சந்திப்போம்.

உங்கள் அன்பின்,

வளர்மதி மாமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## ...மரர் இருவரின் நினைவு விழா

## ...பாட்டிகள் இடம் பெறும்

...டுவில் வடக்கு ...வற்பிள்ளை வளர்ந் ... கல்வி நிலைய ஆதர ...பச்சுப் போட்டி, பாட் ...போட்டி, கட்டுரைப் ...ட்டி என்பனவற்றில் ...ுய்வுத் தேர்வுகள் ...டபெறும். போட்டி ...ில் சாவகச்சேரிக் கிராம ...பை எல்லைக்குள் இருக்கும் ...னசமூக நிலையங்கள், இளம் ...விவசாயிகள் கழகங்கள், ...ாடசாலைகள் பங்குபற்ற ...ரிமை உண்டு.

...ிதிகள்:-

(1) 18—22 வயதுக்குட்பட்டோர் மேற்பிரிவும் 14—17 வயதுவரை மத்திய பிரிவும், 13 வயதுக்குட்டோர் கீழ்ப்பிரிவுமாகும். ஏதாவது இரு தேர்தலில் பங்குபற்றி வெகுமதியைப் பெற உரிமை உண்டு.

(2) அ—போட்டிகள் மட்டுவில் வடக்கு கமலாசனி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

ஆ—பேச்சுப் போட்டி 16-9-62 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

கட்டுரைப் போட்டி 15-9-62 சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

பாட்டுப் போட்டி 16-9-62 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

(3) அ—பேசும் நேரம் மேற்பிரிவினர் 10 நிமிடமும், ஏனைய இரு பிரிவினரும் 7 நிமிடமும் ஆகும். ஏதாவது ஒரு விடயத்தைத் தேர்ந்தெடுத்துப் பேசலாம்.

ஆ—கட்டுரை 40 நிமிடத்தில் எழுத வேண்டும். குறித்த விடயத்தில் ஏதாவது ஒன்றை ஆயத்தம் செய்து குறிப்பிட்ட இடத்தில் வந்து எழுத வேண்டும்.

(4) பிரவேசக் கட்டணம் ஒவ்வொரு போட்டிக்கும் மேற்பிரிவினர் ரூபா ஒன்றும், ஏனைய பிரிவினர் சதம் ஐம்பதும் ஆகும். பிரவேசக் கட்டணம், விண்ணப்பத்துடன் சேர்த்து அந் நிலையத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்ப வேண்டும்.

(5) விண்ணப்பங்கள் சரியாக நிரப்பப்பட்டு 14-9-62 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்குப் பிந்தாமல் திரு.ச.செ.கந்தையா ஆசிரியர், ஸ்ரீ வேற்பிள்ளை வளர்ந்தோர் கல்வி நிலைய மேற்பார்வையாளர். மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

(6) ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று இடங்களை எடுப்பவர்கட்கு புத்தகப் பரிசில்கள் வழங்கப்படும்.

(1) விடயம்:- பேச்சுப் போட்டி மேற்பிரிவு.

1. "வன்னியசிங்கத்தின் தீர்க்க தரிசனம்"

2. "பாரதியாரின் தீர்க்க தரிசனம்"

மத்திய பிரிவு:-

1. "சட்டசபையில் வன்னியசிங்கம்"

2. "பாரதியாரின் சுதந்திர தாகம்"

கீழ்ப்பிரிவு:-

1. "வன்னியசிங்கத்தின் சமூகத் தொண்டு"

2. "பாரதி கண்ட சமுதாயம்"

(2) மேற்பிரிவு கட்டுரைப் போட்டி.

1. "வன்னியசிங்கத்தின் தொண்டுகள்"

2. "பாரதியார் கவித்திறன்"

மத்திய பிரிவு:-

1. "வன்னியசிங்கமும் தமிழரும்"

2. "பாரதி கண்ட கனவு"

கீழ்ப் பிரிவு:-

1 "வன்னியசிங்கமும் வாழ்க்கையும்"

2 "பாரதியும் குழந்தைகளும்"

(3) பாட்டுப் போட்டி.

மூன்று பிரிவினரும் பாரதி பாடலில் ஒன்று அல்லது வன்னியசிங்கம் சம்பந்தமாய் இயற்றிய பாடலிலேனும் ஒன்று பண்ணுடன் பாடவேண்டும்.

---

### காந்தி இல்லம் வெற்றி பெற்றது

தாவடி கணேசா விளையாட்டுக் கழகத்தாரால் நடாத்தப்பட்ட மூன்றாவது வருடாந்த விளையாட்டுப் போட்டி சென்ற 22-8-62 சனிக்கிழமை மாலை கழகத்தின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

காந்தி இல்லம் இரண்டாவது முறையாகத் தமது வெற்றிக் கிண்ணத்தை 164 புள்ளிகளைப் பெற்றுச் சுவீகரித்துக் கொண்டது.

---

### மன்றங்கள் இணைந்தன

கல்குடாத் தொகுதி இளம் எழுத்தாளர் மன்றம் அணிமையில் ஆரம்பிக்கப்பட்ட உதய கலா மன்றத்துடன் இணைந்து இரு மன்றங்களும் திரு. பி. சிவலிங்கம் (ஆசிரியர்) அவர்களையும் திரு. பொன்னரி அவர்களையும் தலைவர்களாகக் கொண்டும், திரு. மா.பொன்னுத்துரை அவர்களையும் சோமு, இளந்திரையன் அவர்களையும் செயலாளர்களாகக் கொண்டும் இயங்கும்.

---

### ஈழத்து இளம் கலைஞர் இயக்கம்

19—8—62 ஞாயிற்றுக்கிழமைகாலை 10 மணியளவில் ஈழத்து இளம் கலைஞர் இயக்கச் செயற்குழுக் கூட்டம் யாழ் நாவலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. டாக்டர் அ. வை. தங்கக் கணபதி கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

பல தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இளம் கலைஞர் பொது மாநாடு ஒன்றை சிறந்த முறையில் நடாத்த ஈழத்திலுள்ள நாடக மன்றங்கள், கலைக் கழகங்கள் தமக்கு ஒத்துழைப்பு நல்க முன்வர வேண்டுமென இ... கேட்டுக் கொண்ட...

### கொழும்பு கலா விருத்திச் சங்கம்

கொழும்பு கலாவிருத்திச் சங்கத்தின் 4வது தயாரிப்பான 'காவலன் கடுங்கோன்' என்ற சரித்திர நாடகத்தின் ஆரம்ப விழா அண்மையில் கொழும்பு விவேகானந்தா வித்தியாலயத்தில் சங்கத் தலைவர் திரு. டேவிட் ராஜு அவர்களின் தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

சங்கத்தின் உப செயலாளர் செல்வி. க. கௌரீஸ்வரி அவர்களின் கலைவாணி வணக்கத்துடன் ஆரம்பமாகிய இவ் விழாவைப் பல பிரமுகர்கள் சமுகமளித்துக் கௌரவித்தார்கள்.

தலைவர் திரு. டேவிட் ராஜு அவர்கள் நிகழ்த்திய வரவேற்புரையின் பின் சங்கத்தின் பொருளாளர் திரு. வீ. எஸ். இரத்தினம் அவர்கள் சங்கத்தின் வரலாறு பற்றி விளக்கி 'காவலன் கடுங்கோன்' என்ற நாடகத்தை வெகு விரைவில் அரங்கேற்றுவதற்கு நடைபெறும் ஜரூர் ஏற்பாடுகள் பற்றியும் குறிப்பிட்டார்.

அடுத்து உரை நிகழ்த்திய வீரகேசரி ஆசிரியர் திரு. கே. வி. எஸ். வாஸ் அவர்கள் பேசுகையில் இலங்கையில் நாடகக் கலையில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியையும் நாடகக் கலைக்கு கொழும்புக் கலாவிருத்திச் சங்கம் ஆற்றிவரும் அரும்பெரும் பணிபற்றியும் முக்கியமாகக் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் சங்கத்தின் தலைவராக பத்திரிகை ஒன்றின் கலைப் பகுதி ஆசிரியரே இருப்பது சங்கத்தின் வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக் காட்டு எனவும் குறிப்பிட்டார்.

அடுத்ததாக விவேகானந்தா வித்தியாலயத்தின் தலைமை ஆசிரியர் திரு. வி. நடராஜா, அமுதம் ஆசிரியர் தமிழ் நெஞ்சன், செந்தாமரைப் பொறுப்பாசிரியர் ஜி. ராஜா, ரைம்ஸ் பத்திரிகையின் பிரதிநிதியாக வந்திருந்த திரு. பாலச்சந்திரன், தேசபக்தன் ஆசிரியர் திரு. கலைதாசன் ஆகியோர்கள் சங்கத்தின் வளர்ச்சி பற்றிப் பேசுகையில் சங்கம் அளித்த 'காதலன் தந்த கணவன்' என்ற நாடகத்தின் வெற்றி பற்றியும் வெகுவாகப் பாராட்டினார்கள்.

பின்பு, சங்கத்தின் சார்பாக திரு. ஆலால சுந்தரம், சுப்பிரமணியம் நிரந்தர இயக்குநர் திரு. கே. என். நவரத்தினம் ஆகியோரின் உரைகளின் பின், சங்கச் செயலாளர் திரு. ரி. சச்சிதானந்தம் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவெய்தியது.

---

### அக்குவைனஸ் தமிழ் மன்றம்

மேற்படி மன்றத்தின் புது நிர்வாகக் குழுவின் பதவியேற்பு வைபவம், 22ந் தேதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, கழக, விஞ்ஞான விரிவுரை மண்டபத்தில் சென்ருண்டின் தலைவி, சிவானந்தி சிவானந்தன் தலைமையில் நடந்தேறியது.

புதுவருட நிர்வாகக் குழுவின் பட்டியல் பின் வருமாறு:—

தலைவர்: திரு. நா. ஹரி ரட்ணஜோதி, உப தலைவர்: திரு. ...

உப செயலாளர்: செல்வி. செ. முருகையா, பொருளாளர்: திரு.கா. யோகரட்ணம்; கணக்குப் பரிசோதகர்: செல்வி. சா. குலசேகரம்.

திருவாளர்கள்: க. பாக்கியராஜா, க. இராஜசேகரம், செல்வி. நீ. இமானுவேல் ஆகியோர் முறையே, பொருளாதார, கலை, விஞ்ஞானப் பகுதிப் பிரதிநிதிகளாகப் பொறுப்பேற்றனர்.

---

### அருந்ததிய வாலிபர் முன்னேற்றச் சங்கம்

சென்ற 26—8—62 ஞாயிறன்று மாலை 6-30 மணிக்கு அருந்ததிய வாலிப முன்னேற்றச் சங்கத்தின் ஆலோசனைக் கூட்டம் திரு. ஆர். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில், பிரின்ஸ் ஒப் வேல்ஸிலுள்ள கிளைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

சங்கப் பத்திரிகையான 'சமுதாயம்' வளர்ச்சி பற்றியும், சங்கத்தின் நிதியைப் பெருக்குவதற்கான திட்டங்கள் பற்றியும், தொடர்ந்து இலங்கை பூராவும் அ. வா. மு. சங்கக் கிளைகளை நிறுவுதல் பற்றியும் சபையில் விவாதிக்கப்பட்டது.

சங்கச் செயலாளராக திரு. எஸ். வீரையா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

புதியசெயலாளரின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

---

### கலைநகர் ராஜாஜி இளைஞர் மன்ற விளையாட்டுப் போட்டி

கலைநகர் ராஜாஜி இளைஞர் மன்ற விளையாட்டுப் போட்டி கம்பர் (நீலம்) இளங்கோ (பச்சை) ஆகிய இல்லங்களுக்கிடையே (19—8—62) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இப் போட்டிக்கு திரு. சு. கனகேந்திரன் அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு. இரா. அருமைநாயகம் அவர்கள் மன்றக் கொடியை ஏற்றி விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைத்தார்கள். இப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு 'விளையாட்டுக் கலை' பற்றிச் சொற்பொழிவாற்றிய ஆசிரியர் திரு. நா. க. தங்கரத்தினம் (நகுலன்) அவர்கள் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுக் கிண்ணங்களை வழங்கினார்கள்.

### நேருஜி சன சமூக நிலைய ஆண்டு விழா

வட்டுக்கோட்டை கலைநகர் நேருஜி சன சமூக நிலைய ஆருவது ஆண்டு விழா கடந்த (25—8—62) சனிக்கிழமை நேருஜி சன சமூக நிலைய முன்றலில் நிலையத் தலைவர் திரு. ஆ. சதாசிவம் ஆசிரியர் அவர்களது தலைமையில் நடைபெற்றது.

தலைவரின் தொடக்கவுரையுடன், செயலாளர், பொருளாளர் ஆகியோரின் ஆண்டு அறிக்கைகள் வாசிக்கப்பட்ட பின்னர் நடப்புவருட நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். நிலையத் தலைவராகத் திருவாளர் வே. தம்பையா (தலைமையாசிரியர்) அவர்களும் உபதலைவராக மு. புஸ்பராசாவும், செயலாளராகத் திரு. பொ. தெண்டாயுதபாணியும், உப செயலாளராகத் திரு. க. தியாகராசாவும், பொருளாளராகத் திரு. செ. ஐயாப்பிள்ளையும், பரிசோதகர்களாகத் திருவாளர்கள் மு. பரமானந்தசிவமும், வே. செல்வநாயகமும் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக சபை அங்கத்தவர்களாகத் திருவாளர்கள் வே. கந்தசாமி, மு. தருமதாசன், க. திருநீலம், வே. அருளம்பலம், க. செல்வம், வீர சுப்பிரமணியம், இ. புரந்திர தேவன், சி. செந்தூர்ராசா, த. கணேசு, ந. சுந்தரலிங்கம், க. ஏகாம்பரம் ஆகியோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ் விழாவில் பிரதம சொற்பொழிவாளர்களாகக் கலந்து கொண்டு திரு. வீரவேந்தன் அவர்கள் "கண்ணீர்ப்படை" என்பது பற்றியும், பண்டிதர் உ. த. சுப்பிரமணியம் அவர்கள் "திருக்குறளும் வாழ்க்கையும்" என்னும் பொருள் பற்றியும், நாவேந்தன் அவர்கள் 'எழுச்சி தரும் எழுத்து' என்னும் பொருள் பற்றியும் சிறந்த சொற்பொழிவாற்றினார்கள்.

ஈற்றில் திருவாளர் வே. தம்பையா தலைமையாசிரியர் அவர்களது நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் ...வரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4வது இணையற்ற வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் 9 சினிமாஸ் திரைகளில்

சுற்றமும் சூழலும் ஒருவனைக் குற்றம் செய்யத் தூண்டியது. அடுத்தவன் அந்தக் குற்றவாளியைப் பிடிக்க முயன்று பிடித்து விடுகிறான். ஆனால் அவர்கள் அண்ணனும் தம்பியும். இதற்கிடையில் தாய். இப்படிப்பட்ட தாய் சொல்லைத் தட்டாதே படத்தைப்

## பார்த்தால் பசிதீரும்

எம். ஜி. ராமச்சந்திரன் ★ பி. சரோஜாதேவி
எம். ஆர். ராதா ★ எஸ். ஏ. அசோகன்
பி. கண்ணாம்பா ★ ஜெமினி சந்திரா
மற்றும் பலர் நடித்த



# தாய் சொல்லைத் தட்டாதே ★

---

குதூகலமான 3-வது வாரமாக காண்பிக்கப்படுகிறது

எல்பின்ஸ்டன் (மருதானை) | றெக்ஸி (வெள்ளவத்தை) | வின்ஸர் (யாழ்ப்பாணம்) | வேல்ஸ் (கண்டி) | கிங்ஸ் (பதுளை) | இம்பீரியல் (மட்டக்களப்பு)
நெல்சன் (திருகோணமலை) | அசோகமாலா (நீர்கொழும்பு) | குயின்ஸ் (காலி)
றீகல் (அம்பாறை) | இம்பீரியல் (இரத்தினபுரி)

ஆகிய திரைகளில்



காதல் மன்னன் ஜெமினி கணேசன்—அஞ்சலிதேவி—பி. எஸ். வீரப்பா
எம். என். நம்பியார்—கே. ஏ. தங்கவேலு—கமலா லட்சுமணன்
எம். என். ராஜம்—எம். ஆர். சுவாமிநாதன்
ஆகியோர் திறம்பட நடித்த

# வீரக்கனல்

டைரக்ஷன்: ஜி. கே. ராமு
வசனம்: கண்ணதாசன்

பாடல்கள் இயற்றியவர்கள்
காலஞ் சென்ற பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், கண்ணதாசன், மருதகாசி

சங்கீதம்:
கே. வி. மகாதேவன்

---

சென்ட்ரல் (மருதானை) 7வது கடைசி வாரம்!



சிவாஜி கணேசன்
ஜமுனா, நம்பியார், ரங்கராவ், கண்ணாம்பா, துரைராஜ், ஜோதி, ராஜஸ்ரீ, நாகையா, ராமராவ்
மற்றும் பலர் நடித்தது



# நிச்சய தாம்பூலம்

வசனம்: விருதை இராமசாமி
பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
இசை: விஸ்வநாதன்-ராமமூர்த்தி

பின்னணி பாடியவர்கள் : டி. எம். சௌந்தரராஜன், பி. சுசிலா, எஸ். ஸி. கிருஷ்ணன், எல். ஆர். ஈஸ்வரி

விரைவில் வருகிறது!

டி. கே. பாலச்சந்திரன் (இரு வேடங்களில்)
குமாரி, 'திலகம்' ராஜகுமாரி, வி. கே. ராமசாமி, டி. பாலசுப்பிரமணியம், சாயிராம், கள்ளப்பார்ட் நடராஜன்
நடித்த

# யார் மணமகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில் 1962-ம் வருடம் செப்டெம்பர் மாதம் 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.